இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 187 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 18 வியாழக்கிழமை 01.06.2017

## மீட்புப் பணிகளுக்கு தலாய்லாமா உதவி

கொழும்பு, ஜூன் 1
வெள்ளம் மற்றும் மண் சரிவால் பாதிப்புற்றோருக்கான தனது பிரார்த்தனைகளை வெளியிட்டுள்ள திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் >> 25

## காங்கேசனில் கிணற்றுள் 2 மோ.சைக்கிள்கள் மீட்பு குறித்து எதுவும் தெரியாது

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைவிரிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 1
காங்கேசன்துறைப் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து மோட்டார் சைக்கிகள் மீட்கப்பட்டமை தொடர்பில் நான் எதுவும் அறியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் >> 25

## மூன்று நாள்களுள் 38 பவுண் நகைகள் முழங்காவிலில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 1
முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர். கடந்த 3 தினங்களுக்குள் மட்டும் 38 பவுண் தங்க நகைகளும், 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் >> 25

## வளிமண்டலவியல் திணைக்களத்தை மூடிவிடுங்கள்

கொழும்பு, ஜூன் 1
பேசாமல் வளிமண்டலவியல் திணைக்களத்தை மூடிவிடுங்கள் என்று, இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா சீற்றத்துடன் தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஊட >> 24

## பளைச் சூட்டுக்கும் மறுவாழ்வு பெற்ற போராளிகளுக்கும் தொடர்பில்லை

வவுனியா, ஜூன் 1
பளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. எமது மறுவாழ்வு நிலையத்தில் பயிற்சிகளைப் பெற்ற முன்னாள் போராளிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார்கள்.
இவ்வாறு அடித்துக் கூறினார் மறுவாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜானக >> 05

## அபாய அறிவிப்பு விடுத்ததும் உடனே வெளியேறவேண்டும்

### தவறினால் சட்ட நடவடிக்கை அமைச்சர் அநுர அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 1
காலநிலை குறித்த தகவல்கள், இடர் அபாய அறிவிப்புகள் சம்பந்தமாக கவனம் செலுத்துவதில் இலங்கை வாழ் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. வெள்ளம் தலைக்கு மேல் வரும் வரை அதைக் கண்டு கொள்வதேயில்லை. அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டால் சகலரும் வீட்டிலிருந்து வெளியேறிப் பாதுகாப்பான >> 25

## காணாமற்போனோரையும் வாக்காளர்களாக பதியலாம்

### அரசியல் கைதிகளுக்கும் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் ஆகியோரையும் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியும் என்று தேர்தல்கள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர்களது பெயர்கள் இதுவரை காலமும் பதிவு செய்யப்படாது இருந்திருந்தால், >> 25

## இனவாதத்தைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் அரசை அழுத்தட்டும்

### கிழக்கு முதலமைச்சர் வலியுறுத்தல்

மூதூர், ஜூன் 1
நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் அரசுக்கு அழுத்தம் >> 25



# தெற்கில் வெள்ளம் வடக்கிலோ வறட்சி

### 6 லட்சம் குடும்பங்கள் பரிதவிப்பு இடர் முகாமை நிலையம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 1
நாட்டின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் கடுமையான மழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் கடும் வறட்சி நீடிப்பதாக இடர் முகாமைத்துவ மைய நிலையம் அறிவித்துள்ளது.
வடக்கில் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 40 ஆயிரத்து 531 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
முல்லைத்தீவில் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 20 பேரும், யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 57 பேரும், கடும் வறட்சியால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் வறட்சியால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி பிரதேச செயலர் பிரிவில் 14 ஆயிரத்து 748 பேர் வறட்சியால் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.
கடந்த வாரம், தெற்கு, மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 203 ஆக அதிகரித்துள்ளது. >> 25

## காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவும் சட்டத்தில் திருத்தம்

### செவ்வாயன்று சபைக்கு வருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 1
காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் படும் என்று அறிய >> 23

## நிதி,அயலுறவு பிரதி அமைச்சுக்களிலும் நேற்று மாற்றங்கள்

### இராஜாங்க, பிரதி அமைச்சர்கள் எட்டுப் பேர் பதவியேற்பு

கொழும்பு, ஜூன் 1
நிதி, அயலுறவு உட்பட நான்கு இராஜாங்க அமைச்சர்களும், 4 பிரதி அமைச்சர்களும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவிகளை ஏற்றுக்கொண்டனர். >> 25

## வாக்காளர் தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 1
வாக்காளர் தின நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ளது. இதேவேளை எதிர்வரும் 4 ஆம் திகதி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் முல்லைத்தீவு >> 23



## காணாமற்போனோர் விவகாரம் விசாரணை நடத்த முடியாது எனக் கூற வடக்கு ஆளுநருக்கு உரிமை கிடையாது

### கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1
"காணாமற்போனோர் விவகாரத்துக்கு எந்த விசாரணையும் இடம்பெறாது என்று வடக்கு மாகாண ஆளுநர் கூறுவதற்கு அவருக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. சட்ட ஏற்பாடுகளை அறியாத ஆளுநர், தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தும் வகையில் >> 23

## மூதூர் பாலியல் வதை; மற்றொருவரும் கைது

மூதூர், ஜூன் 1
மூதூர் பெரியவெளியில் இடம்பெற்ற மூன்று சிறுமிகள் மீதான பாலியல் வதைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மேலும் ஒருவர் கைதாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்று மாலை கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேக நபருடன் சேர்த்து மொத்தமாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். >> 25

## யாழ். குடாநாட்டில் 121,000 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக ஒரு இலட்சத்து 21 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் கிடைக்கவேண்டிய மழை வீழ்ச்சியும் போதியளவு கிடைக்கவில்லை. >> 25

## கைதிகள் தப்பிய சம்பவத்தில் சிறை அதிகாரிகள் தொடர்பு?

### அமைச்சர் சுவாமிநாதன் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 1
நீர்கொழும்புச் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் தப்பிச் சென்ற சம்பவத்துடன் உத்தியோகத்தர்களுக்குத் தொடர்புள்ளதா என்றொரு சந்தேகம் உள்ளது. எனவே சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். விரைவில் சிறைச்சாலைத்திணைக்களத்தின் உயர் பதவிகளில் மாற்றம் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணப் பணியில் ஈடுபடும் அரச ஊழியரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஏற்பாடு செய்க

## அரசிடம் கோருகிறது பொது எதிரணி

கொழும்பு, ஜூன் 1

வெள்ளப் பெருக்காலும், மண் சரிவாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சுற்றறிக்கையை விடுக்குமாறு பொது எதிரணியினர் அரச தலைவரிடம் அவசர வேண்டுகோளொன்றை விடுத்துள்ளனர்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரச ஊழியர்கள் மனிதாபிமான அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு மேலதிகமாகச் செயற்படத் தயங்குகிறார்கள் எனவும், அவ்வாறான நிலையில் அவர்களால் நிவாரண உதவிகளைச் சரியாக வழங்கமுடியாமல் போய்விடும் என்பதாலேயே தாங்கள் இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் நிவாரணப் பணிகளின்போது அவர்களுக்கு விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களை நூறு வீதம் கடைப்பிடிக்க முடியாது எனவும், சூழ்நிலைக்கேற்ப அவர்கள் அந்த விதிமுறைகளில் சிறிது தளர்ச்சியையோ அல்லது மாற்றத்தையோ ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமெனவும் பந்துல சுட்டிக்காட்டினார். (த-4)

# அதிவேகப் பாதையில் ஒரு பகுதி பாவனைக்கு

கொழும்பு, ஜூன் 1

வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள தெற்கு அதிவேகப் பாதையில் கடவத்தைக்கும் கொக்மாதுவைக்கும் இடைப்பட்ட பகுதி இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

அந்தப் பகுதியில் வழமையான போக்குவரத்து நடைபெறுவதாக தெற்கு அதிவேகப் பாதையின் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஏ.டி. கஹட்டபிட்டிய தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக அதிவேகப் பாதையின் கொக்மாதுவை மற்றும் வெலிப்பென்ன வாயில்கள் வெள்ளத்தால் நிரம்பியிருந்தமையால் வாகனங்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்தவேண்டியிருந்ததாகவும் இப்போது அந்த வாயில்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை, கொக்மாதுவைக்கும் கொடகமைக்கும் இடைப்பட்ட வீதி மேலும் சில தினங்கள் மூடப்பட்டிருக்குமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (த-4)

# இடர் பாதித்த பகுதிகளில் வாக்காளர்கள் பதிவு நீடிப்பு

கொழும்பு, ஜூன் 1

இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மாத்தறை, தங்காலை, களுத்துறை, இரத்தினபுரி, கம்பஹா, கொழும்பு களனி கங்கைக் கரையோரம் ஆகிய பகுதிகளிலுள்ள தகுதி பெற்ற புதிய வாக்காளர்கள் தமது பெயர்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பத் திகதி மேலும் பத்து நாள்களால் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையகத்தின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கண்டி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்காளர் பதிவுக்கான இந்த நீடிப்பைப் பயன்படுத்திப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் புதிய வாக்காளர்கள் தங்களது விண்ணப்பங் களைக் கிராம சேவையாளர்கள் மூலம் இயன்றவரை விரைவாக அனுப்பி வைக்க வேண்டும். இயற்கை இடர்களால் இடம்பெயர்ந்துள்ளவர்களின் நன்மை கருதியே இந்த நீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல குப்பைமேட்டு இடரில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் அவர்களது முன்னைய வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் சேர்க்கப்படும்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் எந்த நேரத்திலும் நடைபெற வாய்ப்பு இருப்பதால் சகல வாக்காளர்களும் தங்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள அக்கறை காட்ட வேண்டும் - என்றார். (த-4)

# பாதிக்கப்பட்ட கிணறுகளை சுத்திகரிப்பதற்கு செயலணி

கொழும்பு, ஜூன் 1

வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள கிணறுகளை சுத்திகரிப்பதற்காக 400 பேரைக் கொண்ட செயலணியொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்தக் கிணறுகளை சுத்திகரிப்பதற்கான நீர்ப்பம்பிகளை வழங்கி உதவிசெய்யுமாறு நன்கொடையாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக நகர நிர்மாண மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சந்திரசிறி விதான தெரிவித்தார்.

கைமாற்றாக வாங்கப்படும் இந்த நீர்ப் பம்பிகளையும், உபகரணங்களையும் நன்னொடையாளர்களுக்கு இன்று முதல் ஒருமாத காலத்தில் திருப்பித் தர முடியுமெனவும் அவர் கூறினார். (த-4)

# மத முரண்பாடுகளை மாவட்ட மட்டத்தில் தீர்க்கச் சிறப்புக் குழு

## அரசியல்வாதிகள், மதத் தலைவர்களை உள்ளடக்கி அமைக்க மைத்திரி முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 1

நாட்டில் ஏற்படும் மத முரண்பாடுகள் தொடர்பில் அந்தந்த மாவட்ட மட்டத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய அரசியல்வாதிகள் மற்றும் மதத் தலைவர்களை உள்ளடக்கிய குழுவை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மதங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவைக் கூட்டத்தின்போதே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார் என, பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டில் ஏற்படும் மத முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக உரியவாறு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் அந்த முரண்பாடுகளை ஏற்படுத்தும் தரப்பினருக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தக்கூடிய பொதுச் செயற்றிட்டத்தின் தேவையை அரச தலைவர் சுட்டிக்காட்டினார்.

அதற்காக அனைத்து மதத் தலைவர்களும் ஒரே அரங்குக்கு வர வேண்டும். நாட்டில் ஒற்றுமையின்மையை விதைக்கும் இன, மத முரண்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது.

மதங்களுக்கிடையிலான ஆலோசனைப் பேரவை ஆகக்குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது கூட்டப்படவேண்டும் எனவும் குறிப்பிட்ட அரச தலைவர், இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்படும் கருத்துக்களின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கை தொடர்பான சிறப்பு விதந்துரைகளை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்படும் இன, மத முரண்பாடுகளின் போது நடுநிலையாகவும், பக்கச்சார்பற்றும் செயற்படுவது அனைவரதும் பொறுப்பாகும் என்று தெரிவித்த அரச தலைவர், அனைத்து மத, இன மக்களும் மகிழ்ச்சியாக வாழக்கூடிய சமாதானமான நாட்டையே அனைவரும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (த-5)

### சட்டவிரோதமாகக் கைத்துப்பாக்கி வைத்திருந்த

# புளொட் அமைப்பின் மற்றொரு முகாமின் முன்னாள் பொறுப்பாளருக்கும் தண்டனை

வவுனியா, ஜூன் 1

சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்களை வைத்திருந்த குற்றத்துக்கு புளொட் அமைப்பின் கோவிற்குளம் முகாமின் முன்னாள் பொறுப்பாளருக்கு 7 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

இதே குற்றத்துக்கு புளொட் அமைப்பில் வேப்பங்குளம் முகாமின் முன்னாள் பொறுப்பாளருக்கு கடந்த 17ஆம் திகதி இவ்வாறான தண்டனையை வவுனியா மேல் நீதிமன்று வழங்கிய நிலையில் நேற்று மற்றொரு முகாமின் முன்னாள் பொறுப்பாளருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

வவுனியா கோவிற்குளம் பகுதியில் இயங்கி வந்த முகாமுக்குப் பொறுப்பாளராக இருந்த பழனிமுத்து சிவராசா கடந்த 2009ஆம் ஆண்டு மரக்காரம்பளை பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கி மற்றும் அதற்கான தோட்டாக்கள் 5 என்பனவற்றை தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வவுனியா நீதிவான் மன்றில் அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வவுனியா நீதிவான் மன்றில் ஆரம்ப விசாரணைகள் இடம்பெற்றன. சந்தேக நபர் தொடர்ச்சியாக 11மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. வவுனியா நீதிவான் மன்றில் சுருக்க முறையற்ற விசாரணைகள் நிறைவடைந்து வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

சந்தேகநபருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் கடந்த ஒகஸ்ட் 10ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. சட்டவிரோதமாக கைத்துப்பாக்கி வைத்திருந்தார் என்று முதலாவது குற்றச்சாட்டும் மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் ஐந்தை வைத்திருந்தார் என 2ஆவது குற்றச்சாட்டும் பழனிமுத்து சிவராசாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக நியமிக்கப்பட்டிருந்தது. எதிரி மீதான இரண்டு குற்றச்சாட்டுக்களும் சாட்சிகளின் அடிப்படையில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்தார்.

“குற்றவாளிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. அந்தத் தண்டனை 7 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றது.

குற்றவாளி 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறினால் ஒரு மாத காலம் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்” என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியிருந்தார். (வ)

# பெருளாதாரத்தை கட்டியெழுப்பும் நாடாக இலங்கை

## எப்.டி.ஐ. சஞ்சிகை புகழாரம்

கொழும்பு, ஜூன் 1

பலமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய நாடாக இலங்கை இருப்பதாகப் பிரிட்டனின் எப்.டி.ஐ. சஞ்சிகை தெரிவித்துள்ளது.

27 தீவுகளைக் கொண்ட நாடுகளின் பொருளாதாரம் தொடர்பில் பிரித்தானிய எப்.டி.ஐ. சஞ்சிகை மேற்கொண்ட ஆய்வின் பெறுபேறுக்கமையவே இந்த முடிவுக்கு வந்ததாக அரச தலைவர் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

நாட்டின் முதலீட்டு வாய்ப்புக்களை உலகுக்குக் காட்டும் இந்த வருடத்துக்கான இலங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக மாநாடு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஆரம்பமானது. இதன்போது இதற்குரிய சான்றிதழ் பிரிட்டனின் எப்.டி.ஐ. சஞ்சிகையின் துணை ஆசிரியர் ஜக்கோபோ டெட்டோனியினால் அரச தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் சான்றிதழ் அரச தலைவரால் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவிடம் வழங்கப்பட்டது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை முதலீட்டு மற்றும் வர்த்தக மாநாடு 23 நாடுகளைச் சேர்ந்த 130 இற்கும் அதிகமானோரின் பங்குபற்றுதலுடன் இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளது.

ஏற்றுமதி, உற்பத்தி, விவசாயம், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, ஏற்றுமதி சேவைகள், உள்நாட்டு அறிவுசார் சேவைகள், மின்சாரம் மற்றும் சக்திவலு, சுற்றுலாத்துறை போன்ற விடயங்கள் தொடர்பில் இங்கு முதன்மைக் கவனம் செலுத்தப்படுவதுடன், முன்னணி இலங்கைக் கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் உயர்மட்ட அரச அலுவலர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்பு இந்த மாநாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கும்.

அமைச்சர்களான மங்கள சமரவீர, கலாநிதி சரத் அமுனுகம, பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இலங்கை வர்த்தக சம்மேளன தலைவர் சமந்த ரணதுங்க உள்ளிட்டோர் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு பாகிஸ்தான் 200 மில்லியன் டொலர் கடன்

கொழும்பு, ஜூன் 1
இலங்கை அரசின் முன்னுரிமை அபிவிருத்திக் கருத்திட்டங்களுக் காக 200 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.
முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காகக் குறித்த கடன் வசதியைப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.
இதனடிப்படையில் பாகிஸ்தான் அரசுடனான கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது குறித்து முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக் கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## திருத்திவாசிக்கவும்

உதயனின் நேற்றைய முதலாம் பக்கத்தில் வெளியான, 'துயிலும் இல்லங்களை பிரதேச செயலகங்கள் பராமரித்தல் அவசியம், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை' என்ற செய்தியில், பிரதேச செயலகங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதைப் பிரதேசசபைகள் என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

### பளையில் சிறுமிகள் மீது துர்நடத்தை;

# சாட்சிகளை வெளிநாட்டுக்கு அனுப்ப சிறையிலிருக்கும் செல்வந்தர் முயற்சி

### நீதிமன்றில் பொலிஸார் அறிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 1
"கிளிநொச்சி, பளையில் சிறுமிகள் மீதான துர்நடத்தையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள செல்வந்தர் சிறையிலிருந்தவாறே சாட்சிகளை வெளிநாடு அனுப்ப முயன்றார் என்று பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயாரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது"
இவ்வாறு கிளிநொச்சி நீதிவான் மன்றில் பொலிஸார் நேற்று அறிவித்தனர்.
பளைப் பகுதியில் சிறுமிகள் மீது பாலியல் துர்நடத்தை மேற்கொள்ளப்படுவதாகப் பளைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் ஏப்ரல் 9ஆம் திகதி செல்வந்தர் ஒருவரைக் கைது செய்தனர். அவர் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
இந்த வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டார்.
சந்தேகநபர் பாதிக்கப்பட்ட சிறுமிகளின் குடும்பங்களுடன் தொடர்புகொண்டு உடன்பாடு ஒன்றுக்கு வர முற்பட்டுள்ளார். அவர் சாட்சிகளை வெளிநாட்டுக்கு அனுப்ப முற்பட்டார் எனப் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்" என்று பொலிஸாரால் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும், சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பொலிஸாரின் அறிவிப்பை மறுத்தார்.
"குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருக்கும் நிலையில் எவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருடன் தொடர்புகொள்ள முடியும். பொலிஸார் வேண்டும் என்றே இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்" என்றும் சந்தேகநபரின் சட்டத்தரணி தெரிவித்தார்.
சந்தேகநபர் சிறையிலிருந்தவாறே தனது உறவினர்கள் மூலம் சம்பந்தப்பட்ட குடும்பங்களுடன் தொடர்புகொண்டு, அவர்களை வெளிநாடு அனுப்ப முயற்சித்தார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மன்று தெரிவித்தது.
பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயாரால் வழங்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு முழுமையான அறிக்கையைப் பொலிஸார் மன்றுக்கு முன்வைக்க வேண்டும் என்று நீதிவான் கட்டளையிட்டார்.
"இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சந்தேகநபர் வழக்கு முடியும்வரை எந்தக் காரணம் கொண்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார் என்று எச்சரிக்கை செய்த மன்று, வழக்கு விசாரணையை எதிர்வரும் 14ஆம் திகதிவரை ஒத்திவைத்தது. அன்று வரை சந்தேகநபரின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டது. (வ-ய)

## இடரினால் இதுவரை 44 மாணவர்கள் சாவு

கொழும்பு, ஜூன் 1
வெள்ளப்பெருக்கு, மண்சரிவு இடர்களால் இதுவரை 44 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
8 மாணவர்கள் காணாமற்போயுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.
கடந்த சில தினங்களாக நாட்டில் நிலவிவரும் அசாதாரண காலநிலை காரணமாகச் சுமார் 15 மாவட்டங்களில் கடும் காற்று, வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாகப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# குற்றமிழைத்தோர் எவராயினும் தண்டிக்கப்படுவது கட்டாயமே

### ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்தல்

மட்டக்களப்பு, மே 31
குற்றமிழைத்தவர்கள் அரசியல்வாதியாக, மதவாதிகளாக அல்லது தனவந்தர்களாக இருக்கட்டும். சகலரும் சட்டத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்டுத் தண்டனைகள் வழங்கப்படவேண்டும் என்பதையே நல்லாட்சியை விரும்புகின்ற மக்கள் எதிர்பார்க்கின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.
மட்டக்களப்புகளுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயத்தில், குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுத்தமான குடிதண்ணீர் அருந்தாமை காரணமாகப் பலவித சிறுநீரக நோய்கள் ஏற்படுகின்றன என்று மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்குத் தற்போது குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.
உன்னிச்சைக்குளத்திலிருந்து பெறப்படும் நீர் நகரப் பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் குளத்தை அண்டியுள்ள மக்களுக்கும், கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச மக்களுக்கு வழங்கப்படவில்லை என்ற கருத்து உள்ளது. கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களுக்குக் குடி தண்ணீர் வழங்குவதற்கு நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நாட்டில் தற்போது வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஏற்பட்டு நுற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். பலர் காணாமற்போயுள்ளனர். தற்போது துரிதமாக நிவாரப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்திய அரசு உதவிகளை வழங்கியுள்ளது. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். எந்தப் பிரதேசமாக இருந்தாலும், அரசு சமத்துவமாக சம உரிமையோடு பணியாற்ற முன்வரவேண்டும். பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்கள் வாழுகின்ற பிரதேசம் என்ற பாகுபாடு இன்றிப் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும்.
சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்த பொதுபலசேனாவின் ஞானசார தேரரைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அவர் தலைமறைவானார். சட்டம் என்பது சகலருக்கும் சமமாக உரிமையை மற்றும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும். குற்றமிழைத்தவர்கள் பெரியவர்கள், சிறியவர்கள் என்று பார்க்காமல், மதகுருமார் குற்றமிழைத்தாலும் சட்டங்கள் சரியாகச் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படாது விட்டால் சட்டவாட்சி மீது நம்பிக்கை இழக்க வேண்டி ஏற்படும் - என்றார். (த- ஜ.47)

# கொழும்பில் கடத்தப்பட்ட 2 தமிழர் உயிருடன் இல்லை

### குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1
கொட்டாஞ்சேனையில் 2009 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமற் போகச்செய்யப்பட்ட 2 தமிழர்களும் உயிருடன் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர்.
வடிவேல் பக்கிரிசாமி லோகநாதன், இரத்னசாமி பரமானந்தன் ஆகியோரே கடத்தப்பட்டிருந்தனர்.
அவர்கள் உயிருடன் இருப்பதாகத் தகவல் இல்லாத நிலையில், சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் 108ஆவது அத்தியாயத்தின் பிரகாரமே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அவ்வாறு கூறியுள்ளனர்.
இரு தமிழர்களுக்கும் சொந்தமான அலைபேசிகள், தங்க ஆபரணங்கள் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் தயானந்த, சிப்பாய் சுசந்த மற்றும் ரியர் அட்மிரல் ஆனந்த குருகே ஆகியோர், குறித்த தமிழர்களின் வாகனத்தைத் துண்டு துண்டாக வெட்டிய சம்பவம் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் கூறியுள்ளனர்.
காணாமற்போன இருவரின் அலைபேசிகள், தங்க நகைகளை கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் தயானந்தவே பயன்படுத்திய நிலையில், அதற்காக அவரைக் கைதுசெய்யத் தீர்மனித்தபோது இரகசிய அறிக்கை ஊடாக கைது செய்வது தடுக்கப்பட்டுள்ளது.
கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து தற்போது தாஜுதீன் கொலை விவகாரத்தில் விளக்கமறியலில் இருக்கும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்கவிடம் விசாரணை செய்ய மன்றின் அனுமதியைக் கோருகின்றோம்.
இந்த சம்பவத்துடன் கடற்படையின் ரியர் அட்மிரல் ஆனந்த குருகே, லெப்டினன்ட் கொமாண்டர் தயானந்த மற்றும் கடற்படைச் சிப்பாய் சுசந்த ஆகியோர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளனர் என்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் கூறினர்.
குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கு அனுமதியளித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அத்துடன் தற்போது கைது செய் யப்பட்டுள்ள வெலிசறையில் உள்ள கடற்படை வைத்தியசாலையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தம்மிக அனில பிணைக் கோரிக்கையை நிராகரித்து விளக்கமறி யலை நீடித்தார். (த-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுடலைப் பிரச்சினை:

# திரித்தும் மறைத்தும் உதயன் செய்தி வெளியிடுகின்றதாம்!

புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தின் சுடலைப் பிரச்சினையைத் திரித்தும் மறைத்தும் உதயன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் தலைவர் சி.க.செந்திவேல்.

இது தொடர்பில் அந்தக் கட்சி அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைய மாதங்களாகப் புத்தூர் கலைமதிக் கிராம மக்கள் தமது குடியிருப்புகள் மத்தியில் இருந்து வரும் மயானத்தை அகற்றக்கோரி பல்வேறு கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதன் காரணமாகச் சில நாள்களுக்கு முன்பு இடம்பெற்ற பொலிஸார் பொதுமக்களுக்கு இடையிலான முறுகல் நிலைக்கும் பதற்றச் சூழலுக்கும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூடே காரணம்.

பக்கச் சார்பும் பழிவாங்கும் நோக்கமும் கொண்ட மேற்படி செயற்பாட்டைத் திரித்தும் மறைத்தும் யாழ்ப்பாண ஊடகமான உதயன் பத்திரிகை எமது புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி மீது பழி சுமத்தி செய்தி வெளியிட்டதுடன், ஆசிரிய தலையங்கமும் எழுதியமையானது விசனத்திற்கும், கண்டனத்துக்கும் உரிய தாகும்.

மேற்படி கிராம மக்கள் முன்வைத்துள்ள மனிதாபிமானக் கோரிக்கையின் நியாயத்தைக் கண்டுகொள்ளாது, பிணப் புகையையும், எரி சாம்பல் தூசிகளையும் அந்த மக்கள் அனுபவிக்க வேண்டும் என்ற பழைமைவாத ஆதிக்க சக்திகளுக்கு வக்காலத்து வாங்கும் வகையில் அந்தப் பத்திரிகை எழுதியுள்ளதுடன், எமது கட்சி பின்னால் இருந்து தூண்டிவிட்டுள்ளதாகவும் வக்கிரத்துடன் எழுதி இருப்பது நடுநிலைப் பத்திரிகை என்ற அதன் போலித்தனத்தையே எடுத்துக் காட்டுகிறது.

நிலவுடைமையாலும், சொத்துடைமையாலும், சாதி ஆதிக்கத்தாலும் ஒடுக்கப்பட்டு வந்த கலைமதிக் கிராம மக்கள், கடந்த மூன்று தசாப்தங்களாகத் தம்மைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலிகளை ஒன்றன் பின் ஒன்றாக உடைத்தெறிந்து கொண்டு தமக்குரிய உரிமைகளை நிலைநாட்டிவந்திருக்கிறார்கள். சமூக அநீதிகளுக்கு எதிரான அவர்களின் போராட்ட முன்னெடுப்புகளில் எந்த ஒரு தமிழர் தரப்பு ஆதிக்கவாத கட்சிகளும் உதவவோ, பங்கெடுக்கவோ முன்வந்ததில்லை.

தமக்கான நிலம், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமூகப் பயன்பாடு அனைத்தையும் பழைமைவாத ஆதிக்கங்களோடு போராடியே அந்த மக்கள் படிப்படியாகப் பெற்று வந்துள்ளனர்.

அதே வேளை சமூக விரோதச் செயல்களையோ அல்லது அடாவடித்தன ரவுடித்தனங்களையோ, வாள்வெட்டுக் கலாசாரத்தையோ கொண்டிருக்காத சமூக அக்கறைகொண்ட இளந்தலைமுறையினரையும் மக்களையும் கொண்ட கட்டுப்பாடு உடைய கிராமமாகவே அந்தக் கிராமம் இருந்து வருகின்றது. இதற்கு எமது கட்சியின் வழிகாட்டலும் பங்களிப்பும் இருந்து வந்துள்ளது.

இந்த நிலையிலேயே அந்தக் கிராமத்தின் மத்தியிலிருக்கும் மயானத்தை அகற்றி குடியிருப்புகளுக்கு அப்பால் இருந்துவரும் மயானங்களைப் பயன்படுத்துமாறு கலைமதிக் கிராம மக்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். சுகாதாரச் சீர்கேட்டுக்கும், சூழல் மாசடைதலுக்கும், குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியோர் நோய்த் தாக்கத்துக்கு ஆட்படுவதற்கும், பிணப்புகை, சாம்பல் தூசிகள் பரவுதற்கும் காரணமாக அமைந்துள்ள மேற்படி மயானம் அகற்றப்பட வேண்டும் என்பதே அந்த மக்களின் உறுதியான நிலைப்பாடாகும்.

கூலி விவசாயிகளும், அன்றாட தொழிலாளர்களுமான கலைமதிக் கிராம மக்களின் மேற்படி கோரிக்கையில் மனிதாபிமானமும், நியாயத்தன்மையும், மக்கள் சார்பும் இருப்பதன் காரணமாகவே எமது கட்சி அதனை ஆதரித்து நிற்கின்றது. அதேபோன்று குடா நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மக்கள் குடியிருப்புக்கள் மத்தியில் இருந்து வரும் மயானங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதையும் எமது கட்சி வலியுறுத்தி வருகின்றது.

பின்தங்கிய கிராமிய சமூகச் சூழலில் வாழ்ந்து வரும் உழைக்கும் மக்களின் அன்றாட வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தடையாக இருந்து வரும் பழைமை, வழமை, பாரம்பரியம் என்பவை சமூக நீதி அடிப்படையில் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவையாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

1. சி.க.செந்திவேல் குறிப்பிடுவது போன்று, பொலிஸாருக்கும் கலைமதி கிராமத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையே நடந்த மோதலுக்கு புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி காரணம் என்று உதயன் பத்திரிகை ஒருபோதும் குறிப்பிடவில்லை.

2. கலைமதிக் கிராமத்தின் சுடலைப் பிரச்சினை வன்முறையாக மாறிவருவதன் பின்னணியில், அந்தக் கட்சி இருக்கிறது என்கிற குற்றச்சாட்டையே பத்திரிகைச் செய்தி வெளிப்படுத்தியது. இங்கு வன்முறை என்று குறிப்பிடப்பட்டது, சுடலையைச் சுற்றி மதில் அமைத்தவர்களைத் தாக்கியது, அவர்களுக்குச் சாப்பாடு எடுத்துச் சென்றவர்களைத் தாக்கியது, வாழைத் தோட்டங்களில் வாழை மரங்களை வெட்டிச் சரித்தது, இரவில் வீடு மீது தாக்குதல் நடத்தியது, சிறுப்பிட்டி கிராமங்களுக்குள் இரவில் புகுந்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டது என்பவற்றையும் சேர்த்துத்தான்.

3. பொலிஸாருக்கும் கலைமதியைச் சேர்ந்தவர்களில் சிலருக்கும் இடையில் நடந்த பிரச்சினை குறித்து இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டித் தெரிவித்த கருத்துக்கள் அந்தச் செய்தியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. எந்தக் கருத்தும் திரித்துக் கூறப்படவில்லை.

4. அதேபோன்று, வன்முறைகளின் பின்னணியில் இந்தக் கட்சி இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கும் கட்சித் தலைவரின் பதிலும் அந்தச் செய்தியில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது.

5. அந்தக் குற்றச்சாட்டுக் குறித்து கட்சித் தலைவரிடம் அவரது விளக்கத்தைக் கோருவதற்கு முன்னர், அந்தக் கட்சியில் மிக முக்கிய பதவியை வகிக்கும் நபரான செல்வம் என்பவரே அவ்வப்போது கூட்டங்களை நடத்தி நீதிமன்றத்தின் ஆணையை உதாசீனம் செய்து மயானத்தின் மதிலை இடிப்பதற்குத் தூண்டுதலாக இருந்தார் என்று உதயன் அறிந்திருந்தது. சுடலையின் சுற்றுமதில் அமைத்துக் கொண்டிருந்தவர்களுக்குச் சாப்பாடு எடுத்துச் சென்றவரைத் தாக்கினார் என்று ஏற்கனவே பொலிஸில் முறையிடப்பட்டு இருந்ததையும் உதயன் அறிந்திருந்தது. அந்த நபரைத் தேடி, அவரையும் அவருடன் சேர்ந்த வேறு சிலரையும் கைது செய்வதற்காகச் சென்றபோதே பொலிஸாருக்கும் கிராமத்தவர்கள் சிலருக்கும் இடையில் பிரச்சினை உருவானது என்பதையும் உதயன் அறிந்தே இருந்தது. இவற்றின் அடிப்படையிலேயே அந்தக் குற்றச்சாட்டுக்கான பதிலை தலைவர் சி.க.செந்திவேலிடம் உதயன் பத்திரிகை கேட்டது.

6. சமூகவிரோதச்செயல்களையோ, அடாவடித்தன ரவுடித்தனங்களையோ, வாள்வெட்டுக் கலாசாரத்தையோ கொண்டிருக்காத சமூக அக்கறைகொண்ட இளந்தலைமுறையினரையும் மக்களையும் கொண்ட கட்டுப்பாடு உடைய கிராமமாகவே கலைமதி இருந்து வருகின்றது. இதற்கு எமது கட்சியின் வழிகாட்டலும் பங்களிப்பும் இருந்து வந்துள்ளது என்று தலைவர் சி.க. செந்திவேல் தெரிவித்திருக்கிறார். அப்படியானால் வன்முறைக் குற்றச்சாட்டின் கீழ் தேடப்படும், தனது கட்சியில் முக்கிய பொறுப்பை வகிக்கும் நபரைப் பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்க அவர் தவறியிருப்பது ஏன்?

7. அந்த நபர் இரவில் கலைமதி கிராமத்தவர்களைத் திரட்டி கூட்டம் நடத்தி ஏனைய மக்களை அச்சுறுத்தும் கருத்துக்களைகூறி "என்ன ஆனாலும் விடுவதில்லை, தலைகள் உருண்டாலும் ஒரு கை பார்ப்போம்" என்ற ரீதியில் ஆவேசமாகப் பேசி உசுப்பேற்றி வருகிறார் என்று கிராமத்தவர்களே தெரிவிக்கின்றபோதும் அதைத் தடுத்து நிறுத்தி அமைதியை ஏற்படுத்த அவரது கட்சி இதுவரையில் எந்தவொரு முயற்சியையும் எடுக்காதது ஏன்?

8. அவர் சொல்வதைப் போலவே கலைமதிக் கிராமம் கட்டுக்கோப்பாக இருக்க கட்சி வழிநடத்துகின்றது என்றால், தற்போது அந்தக் கிராமத்தவர்களில் சிலர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றபோது, அந்த வன்முறைக் கட்டுப்பாட்டை வழிப்படுத்துவதும் கட்சி என்று தானே பொருள்கொண்டாகவேண்டும்!

9. இந்தப் பிரச்சினை பற்றி ஆசிரியர் தலையங்கம் எழுதிய உதயன் பத்திரிகையின் நோக்கம் கலைமதி கிராமத்தின் பிரச்சினையைப் புறந்தள்ளுவதல்ல. அது தீர்க்கப்படுவதற்கு எடுக்கப்படும் வழிமுறை பிழையானதாக இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி, இது அந்தக் கிராமத்திற்கு மட்டுமான பிரச்சினை அல்ல, அதனைப் பொது அடிப்படையில் அணுகி அதற்கான பொதுத் தீர்வு, விதிமுறை என்பவை உருவாக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிட்டிருந்தது. அப்படியிருக்கும்போது கட்சி, அதில் எங்கே பக்கச் சார்பையும் பழிவாங்கும் நோக்கத்தையும் கண்டது என்பதும் புரியவில்லை.

10. இந்தப் பிரச்சினையை சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையாகக் காட்டும் தொனியே சி.க. செந்திவேலின் அறிக்கையிலும் தொனிக்கிறது. ஆனால், இது சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையே அல்ல, நாங்களும் அவர்களும் ஒரே சமூகத்தவர்களாக இருக்கும்போது எப்படி அது சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையாக முடியும் என்று சிறுப்பிட்டி மேற்கு மக்கள் கோபப்படுகிறார்கள். அப்படியிருக்கும்போது இதனைச் சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையாக ஊதிப் பெருப்பித்துக் காட்டக் கட்சி முனைவதைப் பார்க்கும்போது பிரச்சினையின் பின்னணியில் இந்தக் கட்சி இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை வெளிப்படுத்துவதில் தவறோ பக்கச் சார்போ பழிவாங்கும் நோக்கமோ உதயன் பத்திரிகைக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

(ஆ-ர்)

## யாழ். மாநகர குடியிருப்பாளர்களிடம் திண்மக் கழிவுப் பொருள்கள் சேகரிப்பு

*சங்கிலியன் பூங்காவில் இன்று ஆரம்பம்*

யாழ்ப்பாணம், ஜூன் 1

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு குடியிருப்புக்களிலுள்ள பாவனைக்கு உதவாத பிளாஸ்டிக், கண்ணாடி, இரும்பு, மின்குமிழ்கள் மற்றும் இலத்திரனியல் போன்ற கழிவுப் பொருள்கள் யாழ்ப்பாண மாநகர சபையால் இன்று சேகரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை வரை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணிவரை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுழற்சிப் பொருள்கள் சேகரிப்பு நிலையத்தில் குறிப்பிட்ட கழிவுப் பொருள்களை ஒப்படைக்க முடியும் என்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

"மீள் பாவனைப் பொருள்களின் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் தங்களிடம் நல்ல நிலையில் உள்ள பாவனையில் இல்லாத பொருள்களை தேவைப்படுவோருக்கு விற்பனை செய்யும் வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விற்பனை தொடர்பில் எழும் விடயங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்காது" என்றும் அவர் தெரிவித்தார்.

(வ-ரி)

## அரச பேருந்தும் சிற்றூர்தியும் சவாரி; வீதியில் பயணித்தோருக்கு இடையூறு

காரைநகரிலிருந்து கண்டிக்குப் பயணிகள் சேவையில் ஈடுபட்ட இ.போ.ச பேருந்தும் யாழ்ப்பாணத்துக்கு பயணிகள் சேவையில் ஈடுபட்ட தனியார் சிற்றூர்தியும் போட்டிபோட்டு சென்றதால் வீதியால் பயணித்தவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் - காரைநகர் சாலையில் இடம்பெற்றது.

காரைநகரிலிருந்து இ.போ.ச பேருந்தும் சிற்றூர்தியும் ஒரே நேரத்தில் புறப்பட்டன. அவை வீதியால் பயணிப்போருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் சவாரி செய்தன. [illegible] சந்தியில் பயணிகளை ஏற்றிக்கொண்ட இரு பேருந்துகளும் பொன்னாலை - காரைநகர் பாலத்தில் கடுகதி வேகத்தில் பயணித்தன.

முன்னே சென்ற தனியார் சிற்றூர்தியை முந்திச் செல்ல முற்பட்ட இ.போ.ச பேருந்து ஒன்றையொன்று உரசுவது போன்று செல்ல முற்பட்டது. ஆனால், தனியார் சிற்றூர்தி அதற்கு இடமளிக்கவில்லை. அதன்போது வீதியால் மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்கள் விபத்துக்களில் இருந்து நூலிழையில் தப்பினர்.

இந்தச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இ.போ.ச காரைநகர் சாலை முகாமையாளருக்கு தொடர்பு கொண்டு அறிவித்தனர். அவர், [illegible] சம்பவத்தை எழுத்து மூலம் வழங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார் என்று அவர்கள் கூறினர். (வ)

## ஆடு திருடிய இருவர் பொலிஸிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஆட்டைத் திருடிச் சென்ற சந்தேகத்தில் வரணி வாசிகளான இளைஞர்கள் இருவர், நெல்லியடிப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

"கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் உள்ள வீடொன்றில் ஆட்டைத் திருடிச் செல்வதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் வீதிச் சோதனை நடவடிக்கையைப் பொலிஸார் தீவிரப்பட்டிருத்தியிருந்தனர்.

2 மோட்டார் சைக்கிள்களில், மூவர் ஆட்டைக் கொண்டு செல்வதை அவதானித்த பொலிஸார் அவர்களை மடக்கி பிடிக்க நடவடிக்கை எடுத்தனர். இதன்போது ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டனர். 2 மோட்டார் சைக்கிள்களும், ஆடும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-5-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநரினால் எழுத்துமூல உறுதிமொழி தரப்படும்வரை போராட்டம் தொடரும்

## வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

கல்வித் தகைமையை உள்ளீர்க்காது நிரந்தர நியமனம் வழங்கப்படும் என மாகாண ஆளுநர் எழுத்துமூல உறுதிமொழி வழங்கினால் மட்டுமே தொடர் போராட்டத்தைக் கைவிடுவோம் என்று வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் நிரந்தர நியமனம் வழங்கக்கோரி போராட்டத்தில் ஈடுபடும் சுகாதாரத் தொண்டர்களின் பிரதிநிதிகளுக்கும் மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கும் இடையே வடக்கு அவரின் அலுவலகத்தில் நேற்றையதினம் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சுகாதாரத் தொண்டர்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"வடக்கு மாகாணத்தில் 820 சுகாதாரத் தொண்டர்களின் கல்வித்தகைமையை உள்ளீர்க்காமல் அவர்களின் சேவைக் காலங்களின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என மாகாண ஆளுநர் உறுதியளித்தார். "அனைவருக்கும் நியமனங்களை உடனடியாக வழங்க முடியாது. முதற்கட்டமாக இருக்கின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

அத்துடன் இனிவரும் காலங்களில் உருவாகும் வெற்றிடங்களுக்கு தொடர்ச்சியாக நியமிக்கப் படுவீர்கள் எனவும் ஆளுநர் கூறினார்" என்று போராட்டம் நடத்தும் சுகாதாரத் தொண்டர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (வ-8)

## கிழக்குப் பாடசாலைகள் இன்று புறக்கணிப்பு

திருகோணமலை, ஜூன் 1

மூதூரில் சிறுமிகள் மூவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்தும் நீதியான விசாரணை மேற்கொண்டு.

குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்குமாறு கோரியும் கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் இன்று வகுப்புகளைப் புறக்கணிப்பர் என்று கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ். ஜெயராஜா அறிவித்தார். (வ-5)

# திருவையாறு வித்தியாலயத்தில் நேற்று வகுப்பறைக் கொட்டகையில் திடீர்த் தீ

## தளபாடங்கள் எரிந்து நாசம்

கிளிநொச்சி, ஜூன் 1

"கிளிநொச்சி, திருவையாறு வித்தியாலய வகுப்பறைக் கொண்டகை நேற்று மாலையில் திடீரெனத் தீப்பிடித்து எரிந்தது. தீயால் வகுப்பறைத் தளபாடங்கள் எரிந்து நாசமாகின" என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

"கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட திருவையாறு வித்தியாலயத்தில் உள்ள 60அடி நீளக் கொட்டகையே நேற்று மாலை 6 மணியளவில் திடீரெனத் தீப்பிடித்தது. இதனால் அந்தக் கொட்டகை முழுமையாகச் சேதமடைந்தது. அதற்குள் இருந்த தளபாடங்களும் எரிந்து நாசமாகின.

சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகள் இடம்பெறுகின்றன. எனினும் தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

# பாலியல் தொழில் குற்றச்சாட்டு; 4 பெண்களின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 1

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் பாலியல் தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 4 பெண்களின் விளக்கமறியலை எதிர்வரும் 14ஆம் திகதிவரை கிளிநொச்சி நீதிவான் மன்றம் நேற்று நீடித்தது.

பாலியல் தொழில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட வீட்டில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்தமாதம் 17ஆம் திகதி நான்கு பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். மேலும் ஒருவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்

4 பெண்களின் குருதி மாதிரிகள் சட்டமருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன என்று பொலிஸார் மன்றில் குறிப்பிட்டனர். குருதி மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 14ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். அன்றைய தினம்வரை சந்தேகநபர்களின் விளக்கமறியல் மன்றால் நீடிக்கப்பட்டது. (வ-ய)

# சுமந்திரன் எம்.பி. மீதான கொலை முயற்சி: 5 சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி, ஜூன் 1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி வழக்கில் 5 சந்தேகநபர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 14ஆம் திகதிவரை கிளிநொச்சி நீதிவான் மன்று நீடித்தது.

சந்தேகநபர்கள் 5 பேரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கடும் பாதுகாப்புடன் அழைத்துவரப்பட்டு கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

"சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பிரமுகர் கொலை முயற்சி தொடர்பான விசாரணைகள் முடிவடைந்து அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புபற்றிய குற்றச்சாட்டுக் குறித்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன" என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர். சந்தேகநபர்களை யாழ். சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் மன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

"சந்தேகநபர்களுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் உள்ளதால் அவர்களை ஏனைய கைதிகளுடன் சேர்க்காமல் தனியாக வைத்திருக்குமாறும், வேறு சிறைச்சாலைக்கு மாற்றவேண்டாம் எனவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கொழும்புத் தலைமை அலுவலகத்தால் மன்றுக்கு கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது" என்றுநீதிவான் தெரிவித்தார். வழக்கு விசாரணையை எதிர்வரும் 14ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிமன்று, அன்றுவரை சந்தேகநபர்களின் விளக்கமறியலை நீடித்தது. வழக்கு மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபர்கள் அவர்களது உறவினர்களைச் சந்தித்து உரையாடுவதற்கு நீதிவான் அனுமதி வழங்கினார். மேலும் சந்தேகநபர்களின் பாதுகாப்புக் கருதி உணவுப் பண்டங்கள் எதனையும் அவர்களுக்கு வழங்க அனுமதிக்க வேண்டாம் எனவும் மன்று அறிவுறுத்தியது. சந்தேகநபர்கள் சுமார் 30 நிமிடங்கள் வரை தமது உறவினர்களைச் சந்தித்து உரையாடினர். (வ-ய)

## கனகபுரம் வெட்டிக் கொலை:

# உயிரிழந்தவரின் மனைவி நீதிமன்றில் வாக்குமூலம்

கிளிநொச்சி, ஜூன் 1

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் 5 பிள்ளைகளின் தந்தையொருவர் வெட்டிக் கொலை செய்த வழக்கின் கண்கண்ட சாட்சியான அவரின் மனைவி கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று வாக்குமூலம் வழங்கினார்.

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் அமைந் துள்ள வர்த்தக நிலைய உரிமையாளரிடம் கட்டடத்துக்கான முற்பணத்தை மீளப்பெறச் சென்ற தம்பதிகள் மீது வாள்வெட்டு இடம்பெற்றது. கடந்த 16ஆம் திகதி பட்டப்பகலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 5 பிள்ளைகளின் தந்தையான நாகராசா திருக்குமார் (வயது 45) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடைய மனைவி திருக்குமார் கிருஸ்ண வேணி (வயது40) படுகாயமடைந்தார்.

இந்தக் கொலையுடன் நேரடியாகத் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் வர்த்தக நிலைய உரிமையாளர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். கொலை செய்யப்பட்ட குடும்பத்தலைவரின் மனைவி திருக்குமார் கிருஸ்ண வேணி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற நிலையில் கைக்குழந்தையுடன் மன்றில் முன்னிலையானார்.

"நாங்கள் கடைக்கு முற்பணம் கொடுத்திருந்தோம். கடையை மீள ஒப்படைத்துவிட்டு பணத்தை கேட்டோம். பணம் தராது அவர் இழுத்தடித்து வந்தார். சம்பவதினம் பகல் பணத்தை வாங்குவதற்காக நானும், கணவரும், மகளும் சென்றோம். அப்போது எம்மிடம் பணம் வாங்கவில்லை எனக் கூறிய அவர், எனது கணவரை கத்தியால் வெட்டினார். சத்தம் கேட்டு தடுக்கச் சென்ற என்னையும் அவர் வெட்டிக் காயப்படுத்தினார்" என்று கிருஸ்ணவேணி நீதிமன்றில் வாக்குமூலமளித்தார்.

வழக்கைப் பரிசீலித்த நீதிவான், சந்தேகநபரின் விளக்கமறியலை எதிர்வரும் 14ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டார். அன்று வரை வழக்கு விசாரணையையும் மன்று ஒத்திவைத்தது. (வ-ய)

## விஞ்ஞான பீடாதிபதியாக ஜெயதேவன் தெரிவு



யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான பீடதிபதியாக இரசாயனவியல் பேராசிரியர் ஜெயரட்ணம் பிறின்ஸ் ஜெயதேவன் நேற்றுத் தெரிவானார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் தலைமையில் பீடாதிபதிக்கான தெரிவு நடைபெற்றது. இதன்போதே பேராசிரியர் ஜெயரட்ணம் பிறின்ஸ் ஜெயதேவன் தெரிவு செய்யப்பட்டார். இவரது பதவிக் காலம் அடுத்த மூன்று வருடங்களுக்கானதாகும்.

நவாலி சென்.பீற்றர் றோ.க.த.க. பாடசாலை மற்றும் வட்டு யாழ்ப்பாண கல்லூரி என்பவற்றின் பழைய மாணவனான இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் சிறப்புப் பட்டத்தையும் பிரிட்டனின் லிவர்பூல் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். (50)

# அரசில் ஒரு சதமேனும் நான் களவாடவில்லை

## உங்களில் யாராவது இதைத் தைரியமாகக் கூறமுடியுமா? வழிநடத்தல் குழு உறுப்பினர்களிடம் சம்பந்தன் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 1

இந்த நாட்டில் அரசில் ஒரு சதமேனும் நான் களவாடவில்லை. ஆனால் உங்களில் யாராவது இதனைத் தைரியமாகச் சொல்ல முடியுமா?

இவ்வாறு, எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்களைப் பார்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார்.

வழிநடத்தல் குழுவின் மரதன் அமர்வின் மூன்றாம் நாள் அமர்வு, கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது நாட்டின் தன்மை குறித்து காரசாரமான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன.

தற்போது காணப்படும் ஒற்றையாட்சி முறைமை என்ற சொல் பதம் தொடர வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி விடாப்பிடியாக இருந்தது. இந்தக் கருத்தை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்திக் கூறினார். இதன்போதே, நிமல் சிறிபால டி சில்வாவுக்கும், இரா.சம்பந்தனுக்கும் இடையில் காரசாரமான கருத்து மோதல் ஏற்பட்டது.

ஒற்றையாட்சி என்ற சொல்லை நீக்கினால், நாடு பிளவுபடும் என்று சாரப்பட நிமல் சிறிபால டி சில்வா கருத்து வெளியிட்டுள்ளார். அதற்கு இரா.சம்பந்தன், உங்கள் எல்லாரையும் விட நான்தான் உண்மையான இலங்கையன், நாட்டை நேசிப்பவன், என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நாட்டின் முதலாவது சுதந்திர தினத்திலிருந்து இருந்து வருபவர் சம்பந்தன் என்று அர்த்தப்படக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்கு இரா.சம்பந்தன், நான் அந்த அடிப்படையில் இதனைக் கூறவில்லை. இந்த நாட்டில் ஒரு சதமேனும் நான் களவாடவில்லை. ஆனால் உங்களில் யாராவது இதனைத் தைரியமாகச் சொல்ல முடியுமா? அப்படியில்லையாயின் நான்தான் உண்மையாக நாட்டை நேசிப்பவன் என்று பதிலடி கொடுத்துள்ளார். (த-5)

முதலாம் பக்கத்தொடர்ச்சி...

## பளைச்...

ரத்நாயக்க. பளைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும் முன்னாள் போராளிகளுக்கும் தொடர்பு உள்ளதா? என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருடம் புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் போராளிகள் 4 பேர் நேற்றுக் முற்பகல் 10.30 மணியளவில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் வைத்துச் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர். சற்குணசிங்கம் தயாபரன் (வயது 44) - கிளிநொச்சி, விக்னராசா துஷ்யந்தன் (வயது 35) - யாழ்ப்பாணம், முத்துலிங்கம் ஜெயகாந்தன் (வயது 37) - ஒட்டுசுட்டான், அஜித் ரோகண (வயது 48) - பேலியகொட ஆகிய நான்கு பேரே தமது குடும்பத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக, பயிற்சிப் பொறுப்பாளர் சித்திர குணதுங்க, சிரேஷ்ட அதிகாரி சமன் பெரேரா, பூந்தோட்ட நிலையப் பொறுப்பதிகாரி கேணல் ஹேமிடோன், சர்வமதத் தலைவர்கள், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், பொலிஸார், விமானப் படையினர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் மாவட்ட நடன போட்டிகளில் சாதனை





வவுனியா, ஜூன் 1
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவைக்குட்பட்ட மாணவர்கள் சிறப்புத் தேவை அல்லாத மாணவர்களுடன் இணையாக மாவட்ட மட்ட நடனப் போட்டிகளில் சாதனை படைத்துள்ளனர்.

இலங்கை சங்கீத நடன மற்றும் பேச்சுக் கழகம் வருடாந்தம் இந்தப் போட்டிகளை மாவட்டம் மற்றும் தேசியளவில் நடத்துகின்றது. இந்த ஆண்டும் அகில இலங்கை மட்ட போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான போட்டியாளர்களை மாவட்ட ரீதியில் தெரிவு செய்யும் நிகழ்வு கடந்த செவ்வாய் கிழமை அனுராதபுரம் சென். ஜோசப் கிறிஸ்தவ தேவாலயத்தின் கலையரங்கத்தில் நடைபெற்றது. அதில் 13 நிகழ்வுகளில்,

பல்வேறு இடங்களில் இருந்து 20க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர். அதில் வவுனியா சீட் வலுவூட்டல் வளாகத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவைக்குட்பட்ட மாணவர்களது 2 நிகழ்வுகள் இடம் பெற்றன. அகில இலங்கை மட்டத்தில் சிறப்புத் தேவைஅல்லாத மாணவர்களுக்கு இணையாக பங்கு பற்றி தமது திறன்களை வெளிப்படுத்தி இருந்தனர்.

அதில் மனோகரன் மயூரன் என்கின்ற மாணவர் மேலைத்தேய தனி நடனப் போட்டியில் பங்குபற்றி 85க்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவானார்.

மேலைத்தேய கிராமிய குழு நடனப்போட்டியில் சிங்கரவேல் தினேசன், ரஞ்சித்குமார் தக்ஷிலன், மோகன் கஜராஜ், மனோகரன் மயூரன், கொலம்பஸ் அனுசா, கொலன்டினா ஆகிய ஆறு மாணவர்கள் பங்குபற்றி 85க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டதுடன் தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளனர். (ற-21)

# சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில்; காரணமானோர் மீது விசாரணை

## மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 1
சுன்னாகம் உள்ளிட்ட பல இடங்களிலும் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் பரவக் காரணமான அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்திக் ககைது செய்யுமாறு மல்லாகம் நீதிமன்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குப் பணித்துள்ளது.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் முன்னிலையில் நேற்று முன்தினம்விசாரணைக்கு வந்தது. அதன்போதே மன்று மேற்கண்டவாறு கட்டளையிட்டது.

மேலும் சுன்னாம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 2 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டும்.

நிலத்தடி நீரில் ஒயில் கலந்துள்ளதாகப் பொதுமக்கள் சந்தேகிக்கும் பகுதிகளின் தண்ணீரைப் பரிசோதிக்க வேண்டும் ஆய்வுகளை பொதுசுகாதார பரிசூாதகர்களுக்கு முன்பாகச் செய்ய வேண்டும்.

பொதுசுகாதார பரிசோதகர்கள் விரும்பினால் அது தொடர்பில் அறிக்கை சமர்பிக்கலாம்" என்றும் மன்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4)

# நீதிமன்றில் நேற்றும் ஞானசார தேரர் முற்படவில்லை

கொழும்பு, ஜூன் 1
பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பொது பலசேனா அமைப்பின் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எனினும் நேற்றும் அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அதனால் அவருக்கு எதிராக மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. (வ-5)

# பொது நூலக எரிப்பின் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 1
யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்பின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலும் கலந்துரையாடலும் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.பொதுநூலக முன்றிலில் இடம்பெறும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்தது.

"தமிழர்களின் அறிவுக் களஞ்சியமான யாழ்ப்பாணப் பொது நூலகம் பேரினவாதிகளால் எரியூட்டப்பட்டு 36 ஆண்டுகள் கடந்துள்ளன. தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாததொழிக்கும் அரசின் கட்டமைப்புசார் இனவழிப்பின் ஓர் அங்கமான பண்பாட்டுப் படுகொலையாக யாழ்ப்பாண நூலக எரிப்பு அரங்கேற்றப் பட்டது.

யாழ்ப்பாணப் பொதுநூலக முன்றிலில் நடைபெறும் இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்" என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# பராசக்தி வித்தியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 1
அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் முதன்மை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மாணவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமும் பாடசாலை அதிபருமான கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இன்றைய அமர்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் குற்றச்செயல்கள் கட்டுக்குள்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 1
"யாழ்ப்பாண மாவட்டத்தில் குற்றச் செயல்கள் சிறப்புப் பொலிஸ் படையணிகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் இடம்பெற்ற சில குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன"

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த காலங்களில் வாள்வெட்டு, கொள்ளை உள்ளிட்ட பெரியளவிலான குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பொலிஸ் பறக்கும் படை மற்றும் துவிச்சக்கர வண்டி பொலிஸ் ரோந்துப் படையணி என்பன உருவாக்கப்பட்டன. இந்த நடவடிக்கையால் தற்போது பெரியளவிலான குற்றச்செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் ஒரு சில சம்பவங்கள் இடம்பெற்றன.

அவை தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெற்றன. அதில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் சிலர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வருகின்றன. இந்தநிலையிலும் யாழ்ப்பணத்தில் ஒருசில சிறிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அந்தச் சம்பவங்கள் தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார். (வ-8)

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 900 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 700 | 700 | 700 |
| சுறா | 600 | – | 1000 | – |
| சீலா | 400 | 600 | 500 | 400 |
| விளை | 500 | 500 | 500 | 800 |
| முரல் | 350 | 500 | 450 | 500 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 800 |
| ஓரா | 400 | 400 | 450 | 500 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 300 |
| சூடை | 200 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 250 | – | 200 | 300 |
| திருக்கை | 350 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 200 | 300 | – |
| [illegible] | 200 | 60 | 80 | 80 |
| [illegible] | 300 | 200 | 600 | 500 |
| வாழை | 200 | – | 500 | – |

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | | 80 |
| கத்தரி | 180 | 150 | | 180 |
| கரட் | 240 | 240 | | 300 |
| மரவள்ளி | 70 | 80 | | 60 |
| பயிற்றை | 140 | 90 | | 100 |
| பாகல் | 180 | 200 | | 200 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | | 100 |
| சி.வெங்காயம் | 300 | 300 | | 300 |
| பூசணி | 70 | 60 | | 80 |
| தக்காளி | 150 | 120 | | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | | 40 |
| கீரை | 25 | 20 | | 15 |
| பொன்னாங்காணி | 25 | 40 | | 40 |
| பச்சை மிளகாய் | 400 | 450 | | 500 |
| புடோல் | 140 | 80 | | 100 |
| கோவா | 160 | 160 | | 200 |
| வெண்டி | 120 | 80 | | 120 |
| போஞ்சி | 200 | 200 | | 50 -60 |
| லீக்ஸ் | 120 | 100 | | 110 |
| தேங்காய் | 70 | 65 | | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | | 120 |
| தேசிக்காய் | 70 | 60 | | 80 |
| வல்லாரை | 20 | 20 | | 15 |
| கறிமிளகாய் | 200 | 160 | | 160 |
| இராசவள்ளி | 200 | 220 | | 300 |
| முருங்கைக்காய் | 150 | 100 | | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூரில் நடந்த வன்கொடுமையால் மக்களிடையே பெரும் அச்சநிலை

## இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க வேண்டுமென செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், ஜூன் 1

மூதூரைச் சேர்ந்த 3 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பெரும் அச்சத்தையும், குழப்பத்தையும் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. தெற்கில் ஏற்பட்டுள்ள இடரால் இந்த அநியாயச் செயல் அதற்குரிய கவனத்தைப் பெறாது போயுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்களுக்கு மிகக் காலம் தாழ்த்தியே நமது நீதியமைப்பில் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதற்கிடையே மேலும் ஏராளமான வன் கொடுமைகள் நடந்து விடுகின்றன.



புங்குடுதீவைச்சேர்ந்தபள்ளிமாணவியின் வன்கொடுமையின் பின்னரான படுகொலை நாட்டையே உலுக்கிப் போட்ட கொடும் நிகழ்வு. அதற்கான நீதி இத்தனை மாதங்கள் கடந்தும் கிடைக்கவில்லை. நீதி விசாரணையை வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டாம் என்று குரல்கொடுக்கும் நிலையைத்தான் நாம் கடந்த காலங்களில் செய்தோம்.

நாம் இவற்றைக் கண்டிப்பதுடன் மட்டும் நின்றுவிடப் போகிறோமா?. எமது பெண் குழந்தைகள் வாழ்க்கையை அச்சமின்றி வாழ்வதற்கானதும் பாதுகாப்பானதுமாக மாற்ற என்ன செய்யப்போகிறோம். இந்தச் சிறிய குழந்தைகளை வன்கொடுமைக்குள்ளாக்கிய அந்த இரண்டு நபர்களையும், நாம் இந்த மோசமான புதிய கலாசாரங்களின் அதியுச்ச தொழில் நுட்ப வளர்ச்சியின் விகாரமான போக்காகவே விளங்கிக் கொள்கிறோம்.

அவர்களுக்கான தண்டனையை உறுதிப்படுத்துவதோடு எதிர்காலத்தில் இவை போன்ற வன்கொடுமைகள் நிகழாதிருப்பதற்கான நமது முயற்சிகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும், என்றுள்ளது. (ற-56)

# முல்லைத்தீவு அரச பணியாளர் தெற்கு நிவாரணப் பணிகளுக்கு

முல்லைத்தீவு, ஜூன் 1

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் தெற்கில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அரச பணியாளர்கள் 100 பேர் அடங்கிய குழுவொன்று இன்று இரத்தினபுரிக்குச் செல்கின்றது. தெற்கில் ஏற்பட்ட இயற்கை இடர் காரணமாக பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றும் 25 பேர் கொண்ட அணிகளாகச் சென்று இவர்கள் நிவாரணப் பணிகளில் உதவவுள்ளனர்.

மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட ஒரு பார ஊர்தி அடங்கிய உணவுப் பொருள்களுடன் செல்லும் பணியாளர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் அங்கே தங்கி நின்று நிவாரணப் பணிகள், மீட்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

குடிநீர் கிணறுகளை உடன் சுத்தம் செய்யும் வகையில் அதற்குரிய உபகரணங்களும் 25 நீர் இறைக்கும் இயந்திரங்கள் அதற்குரிய பொருள்கள் என அனைத்தும் இவர்களால் எடுத்துச் செல்லப்படுகிறது. மூன்று வைத்தியர்களும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# தமிழ்க் கூட்டமைப்பும், அரசும் ஒன்று என்பதே யதார்த்தமானது

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அரசையும் பிரித்துப் பார்ப்பது தவறு. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று அரசின் ஒரு அங்கம். அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றுதான். அதுதான் யதார்த்தம்.

அரசையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் பிரித்து பார்ப்பதனால்தான் மக்களுக்கு அவர்கள் மீது கோபங்களும் வெறுப்புக்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்று முந்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 8 வருடங்களாக தமக்குத் தீர்வு கேட்கின்றனர். கடந்த மார்ச் மாதமும் ஐ.நா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனுமதியோடுதான் அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கியது. பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்க் கூட்டமைப்பு அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தால் இரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்காது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருக்கின்ற ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

அவர்கள் தொடர்ந்தும் அந்தத் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கின்றவரைக்கும் அந்தத் தலைமை தொடர்ந்தும்அரசுக்குத்துணைபோய்க் கொண்டிருக்கும் நிலைமை இருக்கும் வரைக்கும் அது அந்த தலைமை செய்யும் துரோகத்தை மூடி மறைப்பதாகத்தான் இருக்குமே தவிர வேறு எதற்காகவும் கிடையாது. பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது இருப்பதன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை, அதற்குச் சமமாக கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை மக்களே முன்வைக்கின்ற நிலைமை வெகு தூரத்தில் இல்லை. இன்றைய போராட்டமும் அதன் வெளிப்பாடாகத்தான் இருக்கிறது-என்றார். (ற-35)

# வடக்கு மாகாணத்திலேயே வீதி விபத்துக்கள் அதிகம்

மன்னார், ஜூன் 1

கடந்த ஆண்டில் மட்டும் வீதி விபத்துக்களால் 2 ஆயிரத்து 900 பேர் உயிரிழந்துள்ளனர். 7 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் உடல் அவயவங்களை இழந்துள்ளனர். ஏறக்குறைய 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள்நடந்துள்ளன. அவற்றில் அதிகமானவை வடக்கு மாகாணத்திலேயே நடந்துள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 9 ஆவது அமர்வு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சரது மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அதிகமான வீதி விபத்துக்கள் வடக்கு மாகாணத்திலேயே நடந்துள்ளன. இது எதிர்காலத்தில் பன்மடங்கு அதிகரிக்கும்அபாயம்காணப்படுகின்றது.

போக்குவரத்துமுறைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு கடந்த 15ஆம் திகதி பல்வேறு சட்ட ஒழுங்குகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்துக்குள் சேவை வழங்குகின்ற இலங்கை போக்குவரத்து சபையினருக்கு 40வீதமும், தனியார் பேருந்துகளுக்கு 60வீதமும் என்ற வகையில்பேருந்துச்சேவைகளை ஒழுங்கு செய்யவும், இணைந்த நேர அட்டவணையைத் தயார் செய்து நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் விசேட அறிவுறுத்தல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அவற்றை மீறுகின்ற தரப்புக்கள் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது இரண்டுவருடகாலசிறைத் தண்டனையும் அல்லது இரண்டுதண்டனைகளையும் அனுபவிக்க நேரிடும். சேவை வழங்குகின்ற இரு தரப்பினரும் வீதிகளில் பயணிக்கும் பொது மக்களது உயிர்களில் அக்கறையுள்ளவர்களாக செயற்பட வேண்டும் என்றும், ஒழுங்கு விதிகளையும் சட்ட ஏற்படுகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கோருகின்றேன்.



> “ எமது மாகாணத்தை வீதி விபத்துக்கள் அற்ற மாகாணமாக மாற்றுவதற்கும், அதி உச்ச சிறந்த போக்குவரத்து சேவையினை மக்களுக்கு வழங்குவதற்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் ஏறக்குறைய 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்படாதுள்ள புதிய பேருந்து நிலையத்தை மீள இயங்கவைப்பது தொடர்பிலும், அதனை ஒழுங்குபடுத்துவது தொடர்பிலும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட இரு விடயங்களையும் செயற்படுத்தும் பொருட்டு நீதிமன்றக் கட்டளையைப் பெறுவதற்கான தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்துத் தரப்பினரும் எமது மாகாணத்தை வீதி விபத்துக்கள் அற்ற மாகாணமாக மாற்றுவதற்கும், அதி உச்ச சிறந்த போக்குவரத்துச் சேவையை மக்களுக்கு வழங்குவதற்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (ற-56)

# நாடி வருவோரின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முனைய வேண்டும்

## வவு. தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 1

நாடிவருவோர் மனம் கோணாத வகையில் அவர்களதுபிரச்சினைகளைத் தீர்க்க கூடிய வகையில் நாம் எப்போதும் திணைக்களங்கள், அலுவலகங்களில் தயாராக இருக்கவேண்டும்.

இவ்வாறு வவுனியா தெற்குவலயக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதகிருஸ்ணன் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இடம்பெற்றது நேற்று ஊழியர்தினம். அதற்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொருவரும் மற்றவர்களின் பிரச்சினைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது எவ்வாறான பிரச்சினையாக இருந்தாலும் பரவாயில்லை. அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும்.

அரச ஊழியர்கள் தற்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். சம்பளப் பிரச்சினை, பௌதீக வளங்கள் தொடர்பான பிரச்சினை, பதவி உயர்வு பிரச்சினை என்று பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளன.

அவற்றை இப்படியான தினத்தில் எமக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். அவற்றை எம்மால் தீர்க்க முடியா விட்டாலும், மேல்நிலை அதிகாரிகளால் தீர்க்கப்படும்.

ஊழியர்கள் நலன்களை நாம் எப்போதும் பேண வேண்டும்.

அவ்வாறு பேணப்பட்டாலே அவர்கள் மன உளைச்சல் இன்றிப் பணியாற்றுவார்கள் என்ற யதார்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். என்றார். (ற-402)

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஜூன் 1

வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நோயாளர் காவு வண்டியும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளா னதில் ஒருவர் படுகாயமடைந்தார். நோயாளர் காவு வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து மூன்றுமுறிப்புப் பகுதி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியின் மறுபகுதிக்கு மாற முற்பட்ட சமயத்தில் ஏ - 9 வீதியூடாக வவுனியா நோக்கிப் ப்யணித்த நோயாளர் காவு வண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். நோயாளர் காவு வண்டியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிலிருந்தே இடர் நிலைமைகளை அவதானிக்கும் ரணில்

கொழும்பு, ஜூன் 1
தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அமெரிக்காவுக்கு மருத்துவ சிகிச்சைக்காகவே சென்றுள்ளார். ஒவ்வொரு 6 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை அவர் நாட்டில் நிலவும் இடர் நிலைமைகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொண்ட வண்ணமே உள்ளாரென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாட்டில் பெரும் இடர் நிலைமை ஏற்பட்டுள்ளபோது தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும், துறைசார் அமைச்சரும் நாட்டில் இல்லாமலிருப்பது சரியானதா என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இடர் நிலைமையில் மருத்துவ சிகிச்சை என்ற பேரில் அமெரிக்காவுக்குச் சென்றிருப்பது பொருத்தமானதா என்ற கேள்விகள் பல தரப்புகளிடமிருந்தும் வருகின்றன.

தலைமை அமைச்சர் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று 18 மாதங்களுக்கு முன்பாகவே அறிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் அலுவல்கள் காரணமாக அவர் 18 மாதங்களாகச் சிகிச்சை பெற்றுக்கொள்ளாமல் காலம் தாழ்த்தினார். சிகிச்சைகளைக் காலம் தாழ்த்துவது அவருக்குச் சிறந்ததல்ல என்ற நிலைமையைக் கருத்திற்கொண்டுதான் தற்போது அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் அமெரிக்கா செல்லும் முன்பாக இடர் நிலைமை தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய அனைத்துச் செயற்பாடுகள் குறித்தும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்திவிட்டே சென்றார். குறிப்பாக 2 பில்லியன் ரூபா சிறு வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும் அவரே அறிவுறுத்தினார் - என்றார். (த - 4)

# பேரிடர் பாதிப்புக்கு புலம்பெயர் தமிழரும் உதவுவது அவசியம்

## நாடு கடந்த தமிழீழஅரசு வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 1
தென்னிலங்கையில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் சாத்தியமான வழிகளில் மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் தணிக்க, சாத்தியமான எல்லா வழிகளிலும் தன்னார்வ அடிப்படையில் புலம்பெயர் தமிழர்கள் உண்மையான ஆதரவை வழங்க வேண்டும்.



பாதிக்கப்பட்ட மக்களின் மீட்பு மற்றும் மறுவாழ்வுக்குத் தாராளமாகப் பங்களிக்க அனைத்துலக சமூகம் முன்வர வேண்டும்.

எதிர்பாராத இடரினால் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில், பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மீது அனைவரும் கரிசனை காட்ட வேண்டும்.

இதுபோன்ற இயற்கை இடர்களைத் தவிர்ப்பதற்கு, உள்ளூர் உட்கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம்என்றார். (த - 4)

# சீரற்ற காலநிலை நேற்றுடன் மாற்றம்

கொழும்பு, ஜூன் 1
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை நேற்றுடன் மாற்றமடையத் தொடங்கியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், மேல், சப்ரகமுவ, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்கள், புத்தளம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் இடைக்கிடையே இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் இடியுடன்கூடிய மழை ஏற்படலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (த -4)

# பாதைகள், வீடுகள் கட்டுமானத்தின்போது மண்சரிவு அபாயம் குறித்து அவதானம்

## எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் குடியேறுவோர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 1
புதிய அதிவேகப் பாதை நிர்மாணத்தின்போதும், வீடுகள் நிர்மாணிப்பின்போதும் மண்சரிவு அபாயமுள்ள இடங்களைப் புவியியல் நிபுணர்களின் கட்டாய ஆராய்ச்சிக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்குமாறு அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரிடம் கோரவுள்ளோம்.

எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்கள் அகற்றப்பட்ட பின்னர் மீண்டும் அங்கு வந்து குடியேறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடர் ஏற்பட்டுள்ள நிலைமையில் அமைச்சர்களுக்கு வாகனம் கொள்வனவு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன்பிரகாரம் வாகனக் கொள்வனவு செய்வது தொடர்பில் அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் அதற்கெனக் கொள்கையொன்றை நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவிப்பார்.

நாடு முழுவதும் காணப்படும் சீரற்ற காலநிலை காரணமாக பலர் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்புகளில் அதிகமானவை மண்சரிவினால் ஏற்பட்டவை. கட்டட நிர்மாணத்தின்போது இனிமேல் அவதானமாக நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள அதிவேகப் பாதைகள் மற்றும் வீடுகளின்போது கட்டாயம் மண்சரிவு அபாய எச்சரிக்கை உள்ளதா என்பது தொடர்பில் ஆராயவேண்டும். தொடர்ந்து இவ்வாறு எச்சரிக்கைப் பிரதேசங்களில் குடியேறுவதற்கு இடமளித்தால் பெரும் உயிரிழப்புகள் எதிர்காலத்தில் ஏற்படலாம்.

புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் உள்ளிட்ட நிர்மாணத்தில் மண் சரிவு அபாய எச்சரிக்கை தொடர்பில் புவியியல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து அதன் பின்னரே அனுமதி வழங்க வேண்டும்என அரச தலைவரிடமும் தலைமை அமைச்சரிடமும் கோரவுள்ளோம்.

இடரினால் பாதிக்கப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்கள் மற்றும் பாடசாலைகள் செல்ல முடியாத மாணவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வங்கிகளின் ஊடாகச் சிறப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார். (த - 4)

# பாகிஸ்தானின் நிவாரணம் கொழும்பு வந்து சேர்ந்தது

கொழும்பு, ஜூன் 1
பாகிஸ்தான் அரசின் வெள்ள நிவாரண உதவிகள் நேற்றுமுன்தினமிரவு இலங்கையை வந்தடைந்தன.

வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவெனப் பாகிஸ்தான் அரசின் நிவாரணப் பொருள்களுடன் பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான சுல்பிகார் கப்பல் நேற்றுமுன்தினமிரவு கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலில் கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருள்களை இலங்கைக்கான பாகிஸ்தான் பதில் தூதுவர் கலாநிதி சப்ராஸ் அஹ்மத்கான் சிப்ரா, அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.



மருத்துவ நிபுணர்கள், தேர்ச்சி பெற்ற சுழியோடிகள், மீட்புப் பணியாளர்களுடன் மீட்புப் படகுகள் மற்றும் உலங்கு வானூர்தியுடன் உலர் உணவுகள், மருந்து வகைகள், அரிசி, ஜெனரேற்றர்கள் என்பவை இந்தக் கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான பி.என்.எஸ் சுல்பிகார் கப்பல் மாலைதீவுக் கடற்பிரதேசத்தில் ரோந்துக் கடமையில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் இலங்கையின் இடர் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. இதை அடுத்து பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஷ் ஷெரீப்பின் சிறப்பு உத்தரவின் பேரில் இந்தக் கப்பல் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக இலங்கைக்கான பாகிஸ்தான் பதில் தூதுவர் டாக்டர் சப்ராஸ் அஹ்மத் கான் சிப்ரா தெரிவித்தார். (த -4)

# இடர் பாதித்த பகுதிகளுக்கு மின் கட்டணத்தில் சலுகை

கொழும்பு, ஜூன் 1
வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு மின்சார நிலுவைக் கட்டணங்களில் 6 மாதச் சலுகை வழங்கத் தீர்மானித்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இடர் முகாமைத்துவ தேசியச் சபைக் கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான மின்னிணைப்புக்கள் விரைவாக வழங்கப்படுவதுடன், சேதமடைந்த மின்மானிகளுக்காக அறவீடு எதுவும் மேற்கொள்ளப்படாதெனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

கடந்த சில தினங்களாக நிலவி வரும் அசாதாரண காலநிலை காரணமாக நாட்டில் சுமார் 15 மாவட்டங்களில் வெள்ளம், காற்று மற்றும் மண்சரிவினால் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதனால் மின்சாரம் தடைப்பட்டுள்ளதுடன் நீர்வி நியோகமும் தடைப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த - 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் பாதிப்புக்கு உதவ 44 நாடுகள் முன்வருகை

கொழும்பு, ஜூன் 1
இலங்கையில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு 44 நாடுகள் உதவ முன்வந்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இவற்றில் 30 நாடுகளின் உதவிகள் விரைவாக இலங்கைக்குக் கிடைக்கவுள்ளதுடன் வெள்ளம், மண் சரிவு இடர்களினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இந்த நிதியில் நேரடியாகவே வீடுகளை நிர்மாணித்து வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாகத் துறைமுக கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

44 நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாக அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பெற்றுக்கொள்ளப்படும் உதவிகள் ஊடாகப் பொருத்தமானதும் இயற்கை இடர்களினால் பாதிக்கப்படாததுமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைக்கப்படவுள்ளன என்று கூறினார்.

வீடுகளை நிர்மாணித்தல் தொடர்பில் முக்கிய விடயங்களை உள்ளடக்கிய அரச சுற்றறிக்கை ஓரிரு தினங்களில் வெளியாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உச்ச அளவில் நிவாரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (த - 4)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம்; சீனாவுடன் இன்று பேச்சு ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 1
அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு தொடர்பாக, சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல் டிங்ஸ் நிறுவனத்துடன், இலங்கை அரசு மீண்டும் இன்று பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தை அடுத்து, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மகிந்த சமரசிங்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

சீன நிறுவனத்துடன் முதலாவது சந்திப்பை இன்று நடத்தவுள்ளதாக அவர் கூறினார்.

தனது துறைக்குள் இந்த விவகாரம் இருப்பதால் தாமே நேரடியாகப் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும், இந்த விவகாரத்தில் வேறு எவரையும் நுழைவதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பலர் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டதால்தான் இறுதியான இணக்கப்பாடு ஒன்றை எட்டும் முயற்சிகள் முடக்கம் கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கும் விவகாரம் தொடர்பாக, அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம, சரத் அமுனுகம ஆகியோரே பேச்சுக்களில் ஈடுபட்டனர். அத்துடன் துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சராக இருந்த அர்ஜீன ரணதுங்கவும் தனியாகப் பேச்சு நடத்தினார்.

எனினும், அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பான பேச்சுக்களின் தற்போதைய நிலை தொடர்பாக முன்னர் பேச்சுக்களை நடத்திய அமைச்சர்களுடன் கலந்தாலோசித்திருப்பதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் கூறினார். (கு - 4)

## திருமலை சம்பவத்துக்கு சைவ மகாசபை கண்டனம்

மூதூரில் நடைபெற்ற சம்பவம் கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும். இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலங்களில் எங்குமே நடைபெறாமல் இருக்க வேண்டும் என அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மூதூரில் பாடசாலை மாணவிகள் மூவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளான சம்பவம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எந்தச் சமூகமாக இருந்தாலும் இவ்வாறான சம்பவம் நிகழும்போது அது மனதை நெருடவைக்கின்றது. இந்தப் பாடசாலை மாணவிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் சமூகத்துக்கு ஆரோக்கியமற்றதன்மையை ஏற்படுத்தும்.

இந்தச் சம்பவம் எவரால் நடத்தப்பட்டதோ, அவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகளுக்குரியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். என்றுள்ளது. (கு-10)


## வீசா ஆலோசனைகள்

கனடாவில் குடும்பமாக குடியேற
ஓர் அரியவாய்ப்பு !

இன்னும் இரு நபர்களுக்கு மட்டுமே இவ் அரியவாய்ப்பு

தகைமைகள் : ஏதாவது ஓர் துறையில் பட்டப்படிப்பு மூன்று வருடங்களுக்கு குறையாத ஒரே துறையில் வேலை அனுபவம்.

வயதெல்லை : 35 வயதிற்குட்பட்டவர்கள்.

100% வீசா பெறுவதற்கான உத்தரவாதம்.
IELTS 7புள்ளிகள் எடுப்பதற்கான சிறந்த ஆங்கில பயிற்சிகள்.

நான்கு வருடகால மக்களின் நன்மதிப்பை பெற்ற நிறுவனம்.

For get appointments - 021 300 4641

WINSTAR VISA CONSULTANTS
இல 122, தபாற்பெட்டி சந்தி, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
www.winstarjaffna.com

## குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்

### பதவி வெற்றிடங்கள்

1. நிர்வாக உதவியாளர்
தகுதி: க.பொ.சா/தரம். மொழி, கணிதம், இந்துசமயம் ஆகிய பாடங்களில் சித்தி ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

2. மடைப்பள்ளி ஐயா
தகுதி : சைவ உணவுப்பழக்கம், மடைப்பள்ளி வேலைகளில் அனுபவம்

இருபதவிகளுக்கான வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொ.பே.: 077 833 9665

10.06.2017 இதற்கு முன் க. பத்மநாதன் இல. 151 குமரபுரம் பரந்தன் என்ற முகவரிக்கு 02 நற்சான்றிதழ்கள் கல்விச் சான்றிதழ் என்பவனவற்றுடன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

நியமனங்கள் யாவும் நிபந்தனைக்குட்பட்டவை.

தலைவர்
ஆலயபரிபாலன சபை.

## வாடகைக்குண்டு

403 மணிக்கூட்டு வீதியில் (பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) முதலாம் மாடியில் 1150 சதுர அடி கட்டடம் வாடகைக்கு உண்டு. அலுவலகம் கல்வி நிறுவனம், வகுப்புகள் விரும்பத்தக்கது.

077 210 0909, 077 559 7081

## Spoken English, Spoken Sinhala

05 மாதங்களில் 39 வருட கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரால் கற்றுக் கொடுக்கப்படும். அச்சுவேலி அயலிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. வகுப்புக்கள் காலை 9.00 - பிற்பகல் 3.00 மணிவரை நடைபெறும்.

077 648 5234

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. நேரில் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 929 8034

## அறிவித்தல்

இளம் பொருளியலாளர் மன்றத்தினால் 19.04.2017 பி.ப 2.00 மணி அளவில் நடைபெறவிருந்த அதிஸ்டலாபச் சீட்டு குலுக்குதல் எதிர்வரும் 21.06.2017 பி.ப 2.00 மணிக்கு பொருளியலுக்குரை விரிவுரை மண்டபம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

தலைவர்
பொருளியல்துறை.

## வாடகைக்கு தேவை

வங்கி முகாமையாளருக்கு, வங்கி விடுதியாக பயன்படுத்துவதற்கு யாழ் நகரப்பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

077 076 7114/ 077 381 5349

## காணி விற்பனைக்கு

சரசாலை மத்தியில் உள்ள 10 பரப்புக் காணியும், பன்றிசுட்டான்காடு. கண்டாவளையில் உள்ள 10 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு.

077 077 6231

## வேலைவாய்ப்பு

இலங்கையில் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் எமது Granton International Compay யின் கிளைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் O/L, A/L முடித்த (ஆண், பெண் இருபாலாருக்குமான) முகாமைத்துவ வேலைவாய்ப்புக்கள். முதல் 35 பேர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

* வயதெல்லை 18 - 30
* தங்குமிட வசதிகள்
* இலவச ஆங்கில மொழிப்பயிற்சி
* பயிற்சியின் போது 12000 - 15000/=
* பயிற்சியின் பின்னர் 50 000/= +EPF,ETF

3 - 6
மாத கால இலவச பயிற்சி

தொடர்பு: 077 802 1371

## யாழ். மானிப்பாயில்

புலமைச்சுடருடன் HNB ASSURANCE இணைந்து நடத்தும்

## மாபெரும் இலவசக் கருத்தரங்கு

இவ்வருடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதப்போகும் மாணவர்களின் புள்ளிமட்டத்தினை அதிகரிக்கும் நோக்கோடு புலமைச்சுடர் நடத்தும் முதலாவது வழிகாட்டல் கருத்தரங்கு.

இடம் : வலி.தென்மேற்கு பிரதேசசபை மண்டபம் - மானிப்பாய்
காலம் : 04.06.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30 தொடக்கம் 2.30 மணி வரை

வளவாளர்கள்

| கொழும்பு மூத்த முன்னணி ஆசிரியர் திரு.பி.அம்பிகைபாகன் | யாழ்-வவுனியா முன்னணி ஆசிரியர் திரு.என்.எஸ்.தீபன் |
|---|---|

- இக்கருத்தரங்கிற்கு விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கையேடு மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.
- இக்கருத்தரங்கில் பங்குபற்றி தமது திறமையை வெளிக்காட்டும் மாணவர்களுக்கு HNBASSURANCE இனால் பரிசுகள் வழங்கப்படும்.
- இந்த இலவசக் கருத்தரங்கின் பயனைப் பெறவிரும்பும் பாடசாலைகள், கல்விநிலையங்கள், மாணவர்கள் 077 2247419 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முன்பதிவை மேற்கொள்ளவும். (மேலதிக தொடர்புகளுக்கு புலமைச்சுடர் பொறுப்பாசிரியர் - 071 6850005) ( மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது )
- மாணவர்களுக்கான நீராகாரம், சிற்றுண்டி என்பன இலவசமாக வழங்கப்படும்.

தரம் புலமைச்சுடர் 5

| பிரதான அனுசரணை | ஊடக அனுசரணை | ஏற்பாடு |
|---|---|---|
| HNB ASSURANCE | உதயன் | e - ரோட்டரிக் கழகம். யாழ்ப்பாணம் |

## 80 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வேலுப்பிள்ளை கந்தையா

01.06.2017




"அகவை எண்பதில்
அக மகிழ்ந்து
வாழ்த்துகின்றோம்
கண்ணகி அம்மன் துணையோடு
காலமெல்லாம்" நீங்கள் வாழ்க.

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
இருட்டுமடு உடையார்கட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

அ. கனகராஜா அவர்களின் மாமியார்

**பத்மநாதன் விஜயலட்சுமி**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



**திருமதி செல்வரூபி மகேசன்**

தோற்றம் 07.04.1949 — மறைவு 29.05.2017

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி செல்வரூபி மகேசன் 29.05.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுந்தரம்பிள்ளை மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகளும் Dr. நடராசா மகேசனின் அன்பு மனைவியும், துவாராகா, செந்தூரன் (Financial Adviser Malwair Pvt Ltd) ஆகியோரின் அன்புத் தாயும், விஸ்வநாதன் (கணக்காய்வாளர் Prize Waterhouse hoopers abroad) ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்தெல்லிப்பழை)ஆகியோரின்அன்புமாமியும்,சிற்பரன்,ஆதித்யாவின் அன்புப் பேர்த்தியும், வசந்தரூபி (கனடா), திருநாதன் (தெல்லிப்பழை), விஜயலஷ்மி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவானந்தநாதன் (கனடா), கலைமகள்(தெல்லிப்பழை), சிவபாதசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.06.2017 ஞாயிற்றக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முநாமலை வீதி,**
**மானிப்பாய்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

**077 951 9471, 077 555 2281**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 12 . 1935

இறப்பு 14 . 05 . 2016

**அப்பாக்குட்டி தெய்வேந்திரம்**

ஆண்டு ஒன்று ஓடியது எம்மை சுமந்த தெய்வம்
ஆண்டு ஒன்று ஓடியது எம்மை காத்த கடவுள்
ஆண்டு ஒன்று ஓடியது எமக்கு கற்றுத் தந்த ஆசான்
ஆண்டு ஒன்று ஓடியது எமக்கு உலகை காட்டிய வழிகாட்டி
ஆண்டு ஒன்று ஓடியது எம்மை சிலைகள் ஆக்கிய சிற்பி
ஆண்டு ஒன்று ஓடியது எம்மை பிரிந்த உத்தம மனிதன்
எத்தனை ஆண்டுகள் ஆயினும் உம் புனிதம்
மறவா உம் வழி தோன்றல்கள்

**அரசடி,**
**K.K.S வீதி, மாவிட்டபுரம்,**
**தெல்லிப்பளை.**

நீங்கா நினைவுடன்
**மனைவி, மகன், மகள்,**
**மருமக்கள் மற்றும்**
**பேரப்பிள்ளைகள்.**


# அரசு அக்கறையற்றிருந்தால் விளைவுகள் பாரதூரமாகும்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 1

ஜனநாயக வழியில் போராடும் மக்களின் உணர்வுகளை அரசு கண்டுகொள்ளாமல் இருக்குமாகவிருந்தால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவையாக அமையும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

காணாமல் ஆக்கப்பட்டர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் உறவினர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் பெரும் கவனவீர்ப்புப் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

முள்ளிவாய்க்கால் போரின் இறுதியில் தம்முடன் வந்த தமது உறவுகளை விசாரணையின் பின்னர் விடுதலை செய்வதாக்கூறிபிடித்துச்சென்ற இலங்கை அரச படைகளான இராணுவத்தினர் இன்னும் அவர்களை விடுவிக்காமலும் அவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடாமலும் உள்ளதால் தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி100ஆவதுநாளாக உறவுகள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

இலங்கை அரசு இது தொடர்பில் பொறுப்பற்ற நிலையில் கண்மூடி உள்ளமையாளது காணாமல்போனவர்களது உறவுகள் மத்தியில் பாரிய விரக்தியையும்குழப்பத்தையும்ஏற்படுத்தியுள்ளது. மக்களின் போராட்டத்தை அரசு கண்டுகொள்ளாத நிலையில் அவர்கள் போராட்ட வடிவத்தை மாற்றி கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆயிரக்கணக்கானோர்ஒன்றிணைந்து ஏ9 வீதியை மறித்து வீதியூடான போக்குவரத்தைத் தடுத்தனர்.

இது மக்களது உணர்வுகளின் வெளிப்பாடகவே அமைந்து காணப்படுகின்றது. இலங்கை அரசு இனியும் கண்மூடி இருக்குமானால்அதன் விளைவுகள் எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமானவையாகவே அமையும். இது இந்த நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல. இந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் பிரச்சினைக்கு இலங்கை அரசு விரைவாக உரியநடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார். (ற-426)


# மரண அறிவித்தல்



**செல்லத்துரை ஸ்ரீகாந்தா (ஸ்ரீ)**

(மின் இணைப்பாளர்)

பூதராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை ஸ்ரீகாந்தா (ஸ்ரீ) (மின் இணைப்பாளர்) 30.05.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் புவனேஸ்வரி தம்பதியரின் மகனும், தேவகியின் கணவரும், செல்வராணி, ஜெயகுமார் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர்), வசந்தகுமார் (ஜேர்மனி), சாந்தகுமார் (சிரேஷ்ர பதில் பணிப்பாளர் இலங்கை கட்டளைகள் நிறுவனம்) ஆகியோரின் சகோதரனும், பேரின்பநாதன் (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), விஜயகுமாரி (உப அதிபர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), பேபி சறோஜனா (ஜேர்மனி), தேவகி (ஆசிரியர் இந்து மகாவித்தியாலயம் கொட்டகேனா) ஆகியோரின் மைத்துனரும், மைதிலி (முன்னாள் விவசாயப் போதனாசிரியர்), சிவராஜ் (கணினி மென்பொருள் பொறியியலாளர், இந்தியா), சிவதர்ஷினி (ஆசிரியர் கனகாம்பிக்கைகுளம் அ.த.க. பாடசாலை கிளிநொச்சி), பாலகுமார் (வைத்தியர் கிளிநொச்சி வைத்தியசாலை) ஆகியோரின் மாமனும்,வாதுஷன் (ஜேர்மனி), பிரணவி, ஜஸ்வினி, கணவிகாஷ் ஆகியோரின் பெரியப்பாவும், கிருஷிகா (இந்தியா)வின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பூதராயர் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 13 . 06 . 1932

மறைவு 18 . 05 . 2013

அமரர் **முத்துவேலு வேல்விநாயகம்**

**திதி : 01.06.2017**

அன்புகாட்டி அறிவு ஊட்டி
இன்பமுடன் பாரினிலே நாம் வாழ
இனிய வழிகாட்டிய எம் தெய்வமே !
உம்மையே உலகமென உறுதியுடன் நாமிருக்க
பாதியிலே எம்மை பரிதவிக்க விட்டு
பறந்தோடிச்சென்று ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

**பாடசாலை வீதி**
**ஆழியவளை, தாளையடி.**

**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கடலை செய்கையாளர்கள் மழையால் மகிழ்ச்சி

பல மாதங்களின் பின்பு பெய்த மழையால் நிலக்கடலைச் செய்கையாளர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஒட்டுசுட்டான் பகுதியில் பல மாதங்களாக மழையின்றி வறட்சி ஏற்பட்டது. கிணறு மற்றும் ஆறுகளை நம்பி நிலக்கடலைச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. வறட்சி காரணமாகக் கிணறுகளின் நீர்மட்டம் குறைந்தும் ஆறுகள் வற்றியும் போனது. அதனால் பயிர்கள் அழிவுக்குள்ளாகும் நிலை ஏற்பட்டது. கடந்த 24ஆம் திகதி மழைபெய்தது. ஆறுகளில் நீர் பாய்ந்தது. கிணறுகளின் நீர்மட்டம் சற்று உயர்ந்துள்ளது. இதனால் தமது பயிர்கள் காப்பாற்றப்படும் என செய்கையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். (ற-500)

## மரணஅறிவித்தல்

### பொன்னம்பலம் தெட்சணாமூர்த்தி

(ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)



சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தெட்சணாமூர்த்தி 31.05.2017 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லையா மாணிக்கவதி தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அருமைநாயகம் மற்றும் மகேந்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற தங்கப்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி, செல்வரஞ்சினி, ஆனந்தீஸ்வரன் காலஞ்சென்ற திருஞானீஸ்வரனின் அன்பு மைத்துனரும் நீலாம்பரன் (பிரதேசசெயலாளர் சண்டிலிப்பாய்), தயாபரன் (லண்டன்), கீதாம்பரன் (பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலாஜினி(ஆசிரியர்), ஜெரிக்கா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றொஷானி, சதுஷன், சுகாசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜீவானந்தன், மதிவதனி, குகானந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் கேமலதா, இந்திரலதா, தேவகாந்தன் காலஞ்சென்ற வசந் மற்றும் ஜெனார்த்தனன், ஜெயந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் காலஞ்சென்ற துரைராஜசிங்கம் மற்றும் ஜெயந்தினியின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2017) வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பதபர்காட்டு (சித்திரமேழி, காடிவலை) இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்திரமேழி,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### குருசுமுத்து செல்லத்துரை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை 2 ஆம் யூனிற், பரந்தனை வதிவிடமாகவும் கொண்ட குருசுமுத்து செல்லத் துரை 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.06.2017) வியாழக்கிழமை பிற் பகல் 2 மணியளவில் முரசுமோட்டை சதாசகாய மாதா ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கோரக்கன் கட்டு சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 146 1768 (4151) (13)

## மரணஅறிவித்தல்



### சபாபதி துரைரட்ணம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

கல்வியங்காடு மூன்றாம் கட்டையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி துரைரட்ணம் 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுமதி (ஆசிரியை கோண்டாவில் சி.சி.ரி.எம்.எஸ்) யின் அன்புக் கணவரும் மிதுரனின் (சென்ஜோன்ஸ் கல்லூரி) அன்புத் தந்தையும் விஜயரட்ணம், யோகரட்ணம் (கனடா), நேசரட்ணம் (அமெரிக்கா), விமலராணி, யோகராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானேந்திரன் (உரும்பிராய் வடக்கு), வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.06.2017) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் கருவம்புலம் லேன் கொக்குவில் கிழக்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0212227346

## மரண அறிவித்தல்

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்

மலர்வு 21 . 02 . 1956



மடிவு 30 . 05 . 2017

### செல்வி ஞானப்பிரகாசம் மேரிலூட்ஸ் (செல்வராணி)

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் அரச முதியோர் இல்லம் - கைதடி)

நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் மேரிமாகிறேற் தம்பதியரின் இரண்டாவது அன்புப் புதல்வி செல்வி மேரிலூட்ஸ்(செல்வராணி) 30.05.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் சேர்ந்து விட்டார்.

அன்னார் பற்றிமாமலர், சூசைநாதன் ஆகியோரின் அன்புத் தங்கையும் லூர்து மேரி, புதுமைமலர், ஞானாமிர்தம், யேசுதாசன் (கோடீஸ்வரன் - டுபாய்), மேரிக்கிறேஸ், றோசலின் ஈஸ்வரி காலஞ்சென்ற இம்மனுவல் ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு அக்காவும் நீக்கிலஸ், சந்திரகுமாரி, கனகரத்தினம் (ஜோச்) காலஞ்சென்ற அன்ரனிராஜ், மரியநாயகம்(போதகர்), சியாமளா(கிளி), காலஞ்சென்ற கனகசுந்தரம் (ராயு), ஸ்ரீஸ்கந்தராசா, சொரூபினி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இன்று (01.06.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நாவற்குளி புனித அந்தோனியார் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி நிறைவேற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து புனித அந்தோனியார் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

125,1/1 நியூனம் சதுக்கம்
கொழும்பு -13

தகவல்:
யேசுதாசன் (கோடீஸ்வரன்)
குடும்பத்தினர்.

077 768 0230/ 077 184 0182/ +971 503 416 509

## மரணஅறிவித்தல்

மலர்வு 05 . 10 . 1940



உதிர்வு 30 . 05 . 2017

### திருமதி தங்கரத்தினம் தியாகராஜா

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் தியாகராஜா 30.05.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைச்சாமி தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா கண்ணம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற துரைச்சாமி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீதரன்(சுவிஸ்), புவிதரன்(சுவிஸ்), கிரிதரன்(சுவிஸ்), சசிதரன்(லண்டன்), ஸ்ரீநந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மனோரி(சுவிஸ்), மோனிக்கா (சுவிஸ்), ஜெனிதா(சுவிஸ்), சுசந்தினி(லண்டன்), இராகுலன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுனந்தா, கிசோர், அப்சரா, சயந், அபர்ணா, தமன்யா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அழகம்மா, புனிதவதி மற்றும் திரவியம், தவமணி, செல்வரத்தினம், பூபதி, அனுசியாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகம்மா, சின்னப்பிள்ளை, பஞ்சாட்சரம், சரஸ்வதி, சிவமணி, மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.18, கந்தபுராணவீதி,
கந்தர்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாதோர் தாக்கி கடைகள் சேதம்; வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 1
வவுனியா மதீனாநகர் பகுதியில் அமைந்துள்ள இரு முஸ்லிம் கடைகள் நேற்றுமுன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.
வவுனியா மதீனா நகர் பள்ளிவாசலுக்கு அருகே அமைந்துள்ள முஸ்லிம் உணவுத்தின் முன்பக்கம் தீயூட்டப்பட்டது என்றும், அருகே இருந்த தொலைத்தொடர்பு நிலையத்தின் விளம்பரப்பலகை, மின்குமிழ் என்பவற்றை இனந்தெரியாதோர் சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாறம்பைக்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-21)

## கண்ணீர் அஞ்சலி

30.05.2017 செவ்வாய்க்கிழமை எதிர்பாராத விதமாக எம்மை விட்டுப்பிரிந்த எம் அணி தோழி

**வைத்திய கலாநிதி**

**செல்வி நிலாந்தி சரவணபவன்**

(வைத்தியர் மகரகம புற்றுநோய் வைத்தியசாலை)



அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். எம் தோழியின் பிரிவுத்துயரில் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆறுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**23 ஆம் அணி**
**மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்.**

## விற்பனைக்கு உண்டு

45 நாள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகளும் ஒரு வயது நிரம்பிய ஜேர்மென் சப்பெட் நாயும் விற்பனைக்கு உண்டு.

சாவகச்சேரி. 077 659 0606

## வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு அனுபவமுள்ள Bill கிளாக் மற்றும் உதவியாளர்கள் உடன்தேவை.

021 492 3724

## சாதாரண தரப் பரீட்சையின் விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு, ஜூன் 1
ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.
சீரற்ற காலநிலையினால் பரீட்சைச் சான்றிதழ்களை இழந்தவர்கள் ஒருநாள் சேவையின் கீழ் அவற்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், பரீட்சைச் சுட்டெண்ணை வழங்குவதன் மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் கூறினார். (த - 4)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)
## சபை நிதி வேலைத்திட்டம்

01. சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களை நிறைவேற்ற வெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதி வேலைகளுக்கு கோருகின்றார்.
03. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 4/2016(1) இற்கமைவாக இவ்விலைமனுக்கோரலானதுவடமாகாணத்துக்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன் துறை (மல்லாகம்) தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212241130இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 01.06.2017 ஆம் திகதியிலிருந்து 23.06.2017 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமானகேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் இடத்திலிருந்து 01.06.2017ஆம் திகதியிலிருந்து 23.06.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.30 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்துதலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன் துறை (மல்லாகம்) எனும் முகவரிக்கு 23.06.2017ஆம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விகள் செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.


| தொ இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | அண்ணளவான மதிப் பீட்டுத் தொகை (மில்லி யன்) ரூபா | ஒப்பந்த காலம் | இருக்க வேண்டிய (ICTAD) தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விவைப்புப் பணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41 (14)5/CF - Pack - 01/2017 | தொகுதி 1<br>பாடசாலை வீதிப்புனரமைப்பு வேலை- மல்லாகம்<br>நாமகள் வீதிப் புனரமைப்பு வேலை-கட்டுவன்<br>இம்புலானை வீதிப்புனரமைப்பு வேலை- அளவெட்டிமேற்கு. | 5.25 | மூன்று மாதங்கள் | C7 | 77 நாள்கள் | 53,000.00 | 06.10.2017 |
| 03 | NP/14/41 (14)5/CF -Pack 02/2017 | தொகுதி 2<br>பெரியமதவடி கொங்கிறீற் வீதிப் புனரமைப்பு வேலை-அளவெட்டி<br>முத்துமாரியம்மன் வீதிப் புனரமைப்பு வேலை- மாவிட்டபுரம்<br>பெருமாள் கடவை வீதிப் புனரமைப்பு வேலை- அளவெட்டி | 6.30 | மூன்று மாதங்கள் | C7 | 77 நாள்கள் | 63,500.00 | 06.10.2017 |

11. கேள்விகோரல் பற்றியமுன்னோடிக் கூட்டம் 15.06.2017 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை.(மல்லாகம்)
01.06.2017.

(C/29087/10)

## மரண அறிவித்தல்



**குணரட்ணம் ராஜமோகன்**
(Sonny)

வட்டுக்கோட்டையையும், உடுவிலையும் சேர்ந்த கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் ராஜமோகன் (Sonny) 30.05.2017 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி குணரட்ணம், குட்டிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், அருக்ஷன் (கேமன் தீவுகள்) அவர்களின் அன்பு தந்தையாரும், சதுரிகா அவர்களின் அன்பு மாமனாரும், ஏரன்,நோவா, அமாயா ஆகியோரின் அன்பு பேரனும், மகிழ்தேவி (கனடா) அவர்களின் தம்பியும், காலஞ்சென்ற ஜெயசிங்கம், பாலசிங்கம், புஷ்பவனம், தர்மராஜா, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு தம்பியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஏ.எப் ரேமன்ட்ஸ் 01.06.2017 வியாழக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் சைவ சமயக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

## நூலக திறப்பு விழா

முல்லைத்தீவு சிலாவத்தை சன சமூகநிலையத்தின் நூலகக் கட்டடத் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெற்றது. நூலகத்தின் பெயர்ப்பலகையை வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் திரைநீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தைகரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் சி.குணபாலன் திறந்து வைத்தார். இரண்டு அறைகளையும் முறையே கரை துறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் சி.சபேசன் சிலாவத்தை தமிழ் வித்தியாலய முதல்வர் செ.யோகேசுவரன் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் சனசமூக நிலைய பணியாளர்கள், கிராம அலுவலர், மற்றும்கிராம அமைப்புக்களின் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ற-21)

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 143
சீட்டிழுப்பு திகதி: 30.05.2017
ரூ. 88,436,136/-
Z 17 38 40 65
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

சீட்டிழுப்பு வாரம்: 569
சீட்டிழுப்பு திகதி: 30.05.2017
வெற்றி இலக்கங்கள்
04 13 43 58 D
ரூ. 28,108,371/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரால் உயிரிழப்பு 203 ஆக உயர்வு

## 63 பேர் காயம்; 96 பேரைக் காணவில்லை



கொழும்பு, ஜூன் 1
நாட்டில் சில நாள்களாக நீடித்த வெள்ளப் பெருக்கு, மண் சரிவு இடரால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று மதியம் வரை 203 ஆக அதிகரித்தது. 63 பேர் காயப்பட்டுள்ளனர். 96 பேர் காணாமல் போயுள்ள னர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

இந்த இடர் காரணமாக நாடளாவிய ரீதியில் 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. இடரினால் ஒரு இலட்சத்து 49 ஆயிரத்து 678 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 75 ஆயிரத்து 816 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 19 ஆயிரத்து 68 குடும்பங்களைச் சேர்ந்த 76 ஆயிரத்து 754 பேர் 383 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அந்தந்த மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. இடர் காரணமாக 901 வீடுகள் முற்றாகவும் 6 ஆயிரத்து 64 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று மாவட்டச் செயலகத் தரவுகள் கூறுகின்றன.

அதிகமான உயிரிழப்புக்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. அங்கு இது வரை 79 பேர் உயிரிழந்துள்ளனர். 26 பேர் காணாமற்போயுள்ளனர். 28 காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். களுத்துறை மாவட்டத்தில் 59 பேர் உயிரிழந்துள்ளனர். 53 பேர் காணாமல் போயுள்ளனர். மாத்தறை மாவட்டத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். 16 பேர் காணாமல் போயுள்ளனர்.

தெற்கின் காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய பகுதிகளில் நேற்று வெள்ள நீர் பெருமளவு வடிந்தோடி வந்தது. ஆயினும் சில பிரதேசங்கள் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கிக் காட்சி அளிக்கின்றன. எனினும் இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்றும் தொடர் மழை பதிவான நிலையில் களு கங்கையின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் வெள்ள நீர் மட்டமும் உயர்வடைந்துள்ளது.

வெள்ள நீர் வடிந்தோடும் நிலையில் நிவாரணம் மற்றும் தொற்று நோய் தொடர்பில் பெரும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்களில் முப்படையினரும் இணைந்து நிவாரணம், மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இரத்தினபுரியின் பல பகுதிகளில் இருந்து நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை என்ற முறைப்பாடுகளும் வருகின்றன.

இதனைவிட மாத்தறை நில்வள கங்கையின் நீர் மட்டம் குறைந்துள்ள நிலையில் வெள்ள நீர் வடிந்தோடி வருகின்றது. எனினும் பொது மக்கள் வெள்ளத்தில் மூழ்கியிருந்த தமது வீடுகளுக்குச் செல்லத் தொடர்ந்தும் அச்ச நிலையில் உள்ளனர். குறிப்பாக முதலைகள் வீடு களுக்குள் புகுந்துள்ளதால் இத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. நில்வள கங்கையில் உள்ள முதலைகளே வெள்ள நீரில் இவ்வாறு வீடுகளுக்குள் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த - 4)

# இடர் பாதிப்புக்கான கொடுப்பனவுகளை உயர்த்தியுள்ளது அரசு

## உயிரிழந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 1
இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு சமைப்பதற்கான கொடுப்பனவு, உலருணவுக் கொடுப்பனவு, இறுதிக் கிரியைகளுக்கான கொடுப்பனவு என்பவற்றை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி உயிரிழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஒரு லட்சம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள் ளது.

அரச தலைவர் தலைமையில் நேற்றுமுன்தினம் கூடிய இடர் முகாமைத்துவக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு அதிகூடிய தொகையாக 25 இலட்சம் ரூபா வரை வழங்குவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் ராஜித தெரிவிக்கையில் "அரச தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பிரகாரம் உணவு சமைப்பதற்காக வழங்கப்பட்ட தொகை 220 ரூபாவிலிருந்து 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு வார காலத்துக்கு உலருணவுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகையும் அதிகரிக்கப்படுகின்றது. தனி ஒருவருக்காக வழங்கப்படும் தொகை 700 ரூபாவிலிருந்து 900 ரூபாவாகவும், இருவரைக் கொண்ட குடும்பத்துக்கு வழங்கப்படும் தொகை 900 ரூபாவிலிருந்து 1200 ரூபாவாகவும், மூவரைக் கொண்ட குடும்பத்துக்கு ஆயிரத்து 100 ரூபாவிலிருந்து ஆயிரத்து 400 ரூபா வரையும், நால்வரைக் கொண்ட குடும்பத்துக்கு ஆயிரத்து 300 ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஐவரைக் கொண்ட குடும்பத்துக்கு ஆயிரத்து 500 ரூபாவிலி ருந்து ஆயிரத்து 800 ரூபா வரையும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

உயிரிழந்தவர்களுக்காக 15 ஆயிரம் ரூபாவே இதுவரை வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகையை இனிமேல் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இயற்கை இடரினால் 3 லட்சத்து 36 ஆயிரம் வீடுகளுக்கான மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. இந்த எண்ணிக்கை தற்பொழுது ஒரு லட்சத்து 82 ஆயிரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் சிறிய வியாபார நிறுவனங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு உதவுவதற்காக 2 பில்லியன் கடனுதவி வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (த-4)

## உதவிப் பொருள்களை ஏற்றிய சீனக் கப்பல்கள் கொழும்புக்கு

வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிப்பொருள்களை ஏற்றிக் கொண்டு சீனக் கப்பல்கள் இன்று வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இலங்கைக்கு 2.2 மில்லியன் டொலர் பெறுமதியான உதவிப் பொருள்களை வழங்குவதாகச் சீனா அறிவித்திருந்தது. வாடகை விமானம் ஒன்றில் இந்த உதவிப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் என்று சீனா கூறியிருந்தபோதிலும், பின்னர் மூன்று கப்பல்களில் உதவிப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த -4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைமறித்துத் தாக்கும் ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்தது அமெரிக்கா

## வடகொரியாவை எச்சரிக்கும் விதத்தில்



வொஷிங்டன், ஜூன் 1
கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கவல்ல ஏவுகணைகளை அமெரிக்கா வெற்றிகரமாகச் சோதித்தது.
ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஏனைய உலக நாடுகள் ஆகியவற்றின் எதிர்ப்பையும் தடைகளையும் மீறி அணுவாயுதங்களைச் சுமந்து செல்லவல்ல எவுகணைகளை வடகொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாகச் சோதித்தது. வடகொரியா சோதித்த ஏவுகணைகளில் இது மிக முக்கியமானது என்று எச்சரிக்கப்பட் நிலையில் வேறு தேசங்களில் இருந்து ஏவப்படும் கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை தடுத்து அழிக்கும் ஏவுகணையை அமெரிக்கா சோதித்துள்ளமை வடகொரியாவை மறைமுகமாக எச்சரிக்கும் விதத்தில் அமைந்தது.
அதேநேரம் வடகொரியா சோதித்த ஏவுகணையின் கனதித்தன்மையையும் அமெரிக்காவின் தடுப்பு ஏவுகணைச் சோதனை வெளிப்படுத்துகிறது என்று கருதப்படுகிறது.
பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் கொரியத் தீபகற்ப விவகாரம் பேசுபொருள் அல்லாமல் மாறிக்கொண்டிருந்த நிலையில் இந்தச் சோதனைகள் பன்னாட்டு அரசியலின் பார்வையை மீண்டும் கொரியத் தீபகற்பத்தின் மீது திருப்பியுள்ளன.
அமெரிக்காவிடம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் அல்லாத சாதாரண ஏவுகணைகளைத் தடுத்து அழிக்கவல்ல தாட் எனும் ஏவுகணைகள் ஏராளமாக உள்ளன. இவற்றை வடகொரியாவிடம் இருந்து தனது நட்பு நாடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் அமெரிக்கா நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இளவரசியின் து
## கேட்கும் திறனை
### பெல்ஜியத்தில் சம

பெல்ஜியம் இளவரசி மரதன் ஓட்ட
மாக நடத்திய துப்பாக்கிச் சூட்டின
திறனை இழந்தார்.
பெல்ஜியத்தின் தலைநகரில் 20 கி
தயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை
வைப்பதற்காக அந்த நாட்டு மன்
ஆஸ்ட்ரிட் மற்றும் பிரதமர் சார்ல
தந்திருந்தனர். மரதன் ஓட்டத்தை

மரதன் ஓட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக இளவரசி வானத்தை நோக்கி சூடு நடத்தியதில் அருகில் இருந்த அந்த நாட்டுப் பிரதமர் தனது கேட்கும் திறனை இழந்தார்.



# 'சாவு' புயலால் 6 பேர் சாவு

டாக்கா, ஜூன் 1
பங்களாதேஷை நேற்றுமுன்தினம் தாக்கிய சாவு புயலால் ஆறு பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த சாவு புயல் நேற்றுமுன்தினம் காலை 6.00 மணியளவில் (இலங்கை நேரப்படி) கரையைக் கடந்தது.
பங்களாதேஷின் பிரபல துறைமுக நகரான சிட்டகொங் நகருக்கும் கோக்ஸ் பஜாருக்கும் இடையே புயல் கரையைக் கடந்ததாக பங்களாதேஷ் வானிலை ஆய்வு மையம் அதிகாரபூர்வமாக வெளியிட்ட சிறப்பு வானிலை அறிக்கையில் தெரிவித்தது. புயல் கரையைக் கடந்தபோது மணிக்கு 117 கி.மீ. வேகத்தில் பலத்த காற்று வீசியது. ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. உயிரிழப்புத் தொடர்பில் எந்த உத்தியோகபூர்வத் தகவலும் வெளிவந்திராத நிலையில் ஆறுபேர் உயிரிழந்தனர் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.
முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரப் பகுதிகளில் இருந்து 10 லட்சம் மக்கள் வரை வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டதால் உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது என்று பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
இந்தப் புயலுக்கு பங்களாதேஷ் வானிலை ஆயுவு மையம் வைத்த பெயர் மோரா. மோரா என்றால் தமிழில் சாவு என்று அர்த்தம். (ம)



# விரைவில் பதவி விலகல் வேண்டும்: டெமருக்கு அதிகரிக்கிறது அழுத்தம்

பிரேசிலியா, ஜூன் 1
பிரேசிலில் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக அதிபர் மைக்கல் டெமர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் ஒரு மாத காலமாகியும் முடிவடையாமல் நீண்டு செல்லுகின்றன.
பிரேசில் அதிபர் மைக்கல் டெமர் மீது முறையான ஆதாரங்களுடன் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்ப்புக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.
எனினும் அவர் பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளார். இதையடுத்தே இந்தப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.
தலைநகர்பிரேசிலியாவில் [illegible] கலைக்க முற்பட்டபோது கலவரமாக மாறியது. இதையடுத்து அரச அலுவலங்கள் ஆர்ப்பாட்டக் காரர்களால் தீக்கிரையாக்கப் பட்டது. இது தொடர்பிலான காணொலிகள் பிரேசில் அரசால் பரிசீலிக்கப்படுகின்றன. சிலர் கைது நடவடிக்கைக்கும் உள்ளாகியுள்ளனர் அவர்களை விடுவிக்கக் கோரியும் தற்போது அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.
பிரேசிலியாவில் மட்டுமல்லாமல் ரியோ டி ஜெனிரோ உள்ளிட்ட நகர்களிலும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன. இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் 90 சதவீதமானவை கலவரங்களாக மாறுகின்றன என்று பிரேசில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ரியோ ஒலிம்பிக் தொடருக்காகக்கட்டப்பட்ட அரங்குகள், ஒலிம்பிக் கிராமம் உள்ளிட்டவற்றிலும் ஊழல் இடம்பெற்றுள்ளமை என்று நிரூபிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வாழத் தகுந்த

பூமி போன்று உயிரினங்கள் வாழத்
பட்டுள்ளது. பூமியில் இருந்து 21 ஒளி
என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் மேல் பகுதியில் திரவ நிலைய
விட 2 அல்லது 3 மடங்கு பெரியது. உ
கிரகத்தை கனாரி தீவுகளில் உள்ள '
கனாரீஸ்' நிறுவன விஞ்ஞானிகள் கல

தூதரகங்களின் கட்

## ஆப்கானில் கு
## 90 பேர் பரித

காபுல், ஜூன் 1
ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வெளிநாட்டுத் தூதரகங்கள் உள்ள கட்டடத்துக்கு அருகே நிகழ்த்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் 80 பேர் உயிரிழந்தனர் என்று நேற்று மதியம் முதல்கட்டத் தகவல் வெளியானது.
இந்தத் தாக்குதல் குறித்து ஆப்கானிஸ்தான் செய்தித் தொடர்பாளர் மஜித், "காபுலில் இன்று (நேற்றுப் புதன்கிழமை) ஜேர்மனியின் தூதரக கட்டிடத்தின் நுழைவாயிலில் கார்க் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எவரைக் குறி வைத்து இந்

## கடந்த வா

பக்தாத், ஜூன் 1
ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூலின் மேற்குப் பகுதியின் மீட்பு நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் கடந்த வாரம் மட்டும் 10 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டனர் என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிச் சூட்டால் ...ை இழந்தார் பிரதமர்


சம்பவம்

...ன் ஓட்டத்தை ஆரம்பித்து வைக்கும் முக ...ட்டினால் அந்த நாட்டு பிரதமர் கேட்கும்

... 20 கிலோமீற்றர் தூரமுடைய ஓட்டப்பந் ...மை நடைபெற்றது. இதை ஆரம்பித்து ... மன்னர் பிலிப்பின் இளைய சகோதரி ... சார்லஸ் மைக்கல் ஆகியோர் வருகை ...த்தை ஆரம்பித்து வைப்பதற்காக இளவரசி வானத்தை நோக்கி சூடு நடத்தியதில் அருகில் இருந்த அந்த நாட்டுப் பிரதமர் தனது கேட்கும் திறனை இழந்தார். இந்தத் தகவல் தற்போது தான் ஊடகங்களுக்குக் கசிந்துள்ளது. இதையடுத்து, பிரதமருக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகிறது என்றும், விரைவில் குணமடைவார் என்றும் அந்த நாட்டு செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ம)



# வெனிசூலா அதிபருக்கு எதிரான கலவரம் தொடர்கிறது இரண்டு மாதங்கள் கடந்தும்



கரஸ்கஸ், ஜூன் 1

வெனிசூலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ, பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ஆரம்பித்த போராட்டம் இரண்டு மாதங்களைக் கடந்த பின்னரும் பெரும் எழுச்சியுடன் நீண்டு செல்கிறது.

மதுரோவின் ஆட்சியில் வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சியையும் உணவுத் தட்டுப்பாட்டையும் அந்த நாடு எதிர்கொண்டது, கொள்கிறது. மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளை அட்டைப் பெட்டியில் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. உணவு, உலர் உணவு என்பன கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. உணவகங்கள், நட்சத்திர விடுதிகள் ஆகியவற்றால் கொட்டப்படும் கழிவு உணவை தெரிந்து எடுத்து பசியாற்றுவதற்கும் அங்கு வரிசையில் நிற்க வேண்டிய நிலமை. இவ்வாறு சென்றால் அந்த நாடு இன்னும் சில மாதங்களில் 700 சதவீதம் பணவீக்கத்தை எதிர்கொள்ளும் என்று உலக நாணய நிதியம் எச்சரித்துள்ளது. இத்தகைய பின்னணியிலேயே ஆட்சி மாற்றத்துக்கான போராட்டம் ஆரம்பித்தது.

தலைநகர் கரஸ்கஸில் மிகத் தீவிரமாக போராட்டம் நடைபெற்று வருகிறது. மதுரோவுக்கு எதிராகப் போராடிய எதிர்கட்சித்தலைவர் லொபாஸ் சிறையிடப்பட்டுள்ளார். இதனால் லொபாஸின் விடுதலையையும் வலியுறுத்தி போராட்டம் மேலும் தீவிரமடைந்துள்ளது.

"வெனிசூலாவில் அதிபர் தேர்தல் விரைவில் வரைவுள்ளது. தேர்தல் நடந்தால் லொபாஸின் வெற்றி நிச்சயம் என்ற நிலையே இங்குள்ளது.

தேர்தலை நடத்தாமல் ஆட்சியைத் தக்கவைக்கவும் இயலாது. எனவே ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த லொபாஸைக் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளார் மதுரோ. அவர் அரசியலில் ஈடு...வும் தடை விதிக்கப்பட்...ளது. இதனால் லொபா... இல்லாத தேர்தலில் தா... வெற்றிபெறலாம் என்பது மதுரோவின் திட்டம்" என வெனிசுலா ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## ...ந்த மற்றொரு பூமி

...ாழத் தகுதியுள்ள புதிய கிரகம் கண்டு பிடிக்கப் ...21 ஒளி ஆண்டுகள் தூரத்தில் அது உள்ளது

...லையில் தண்ணீர் உள்ளது. இது பூமியை ...யது. உயிரினங்கள் வாழத்தகுதியுள்ள இந்த ...ள்ள 'இன்ஸ்ரிரியூட் டி ஆஸ்ட்ரோ பிசியா டி ...கள் கண்டுபிடித்துள்ளனர். (ம)

## மாராவியில் வான் தாக்குதல்கள்

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 800 கி.மீ. தொலைவில் உள்ள மாராவி தீவில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் ஊடுருவியதை அடுத்து அங்கு இராணுவத்துக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வருகிறது. வான் வழியாக நடத்தப்பட்ட தாக்குதல்கள் தற்போது மேலும் தீவிரமாகியுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆயுததாரிகள் மனிதக் கேடயங்களாகப் பிடித்து வைத்திருந்த மக்களில் சிலரும், பாதிரியார்கள் சிலரும் மீட்கப்பட்டுள்ளனர். எனினும் இன்னும் சிலர் ஆயுததாரிகளின் பிடியில் உள்ளனர். இன்னும் சில வாரங்களுக்கு மீட்புப் போர் தொடரலாம் என்று பிலிப்பைன்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. "ஆயுததாரிகள் தமது பிரச்சினை என்னவென்று பேச்சுக்கு முன்வர வேண்டும்" என்று பிலிப்பைன்ஸ் அதிபர் றொட்றிக்கோ டுடேர்தே அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



வெனிசுலா அதிபர் நிக்கொலஸ் மதுரோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை கலைப்பதற்காக அந்த நாட்டு அரச படைகள் கடும் முனைப்புக் காட்டு கின்றன. அவ்வாறு கலகக்காரர்களுக்கு எதிராக தண்ணீர் பீய்ச்சியடிக்கப்படும் ஒளிப்படமே இது. (ம)

...கட்டடத் தொகுதியில்

## ... குண்டுவெடிப்பு ...தாப உயிரிழப்பு

...தத் தாக்குதலை நடத்தியுள்ளார்கள் என்று தற்போது சொல்லமுடியாதுள்ளது. 80 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வந்துள்ளன. 90 பேர் காயமடைந்துள்ளனர்" என்று தெரிவித்தார்.

குண்டுவெடிப்பு காரணமாக அந்தப் பகுதியிலிருந்த கட்டிடங்கள், ஜன்னல்கள் குலுங்கியது என்று ஆப்கன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்தத் தாக்குதலுக்கு நேற்று மதியம் எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை, எனினும் தலிபன்கள் நிகழ்த்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ம)

# ...வாரம் 10,000 மக்கள் மேற்கு மோசூலில் மீண்டனர்

...நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. இதன் கிழக்குப் பகுதி கடந்த ஜனவரியில் மீட்கப்பட்டது. மேற்குப் பகுதிக்கான போர் தற்போது நடைபெற்று வந்தது. பெரும்பாலான இடங்கள் (மேற்கு மோசூலின் 92 சதவீதமானவை) இராணுவத் தரப்பால் மீட்கப்பட் டுள்ளது. மிகக் குறுகிய பகுதிக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் மட்டும் 10 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



**உச்சக்கட்ட உசார் நிலை**

மேற்கு மோசூலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தோல்வி உறுதியாகியுள்ளது. இதனால் ஆயுததாரிகளும் மக்களுடன் மக்களாக தப்பித்துச் செல்ல வாய்ப்புள்ளதால் மீட்கப்படும் அத்தனைபேரும் கடுமையான பரிசோதனை, கண்காணிப்பின் பின்னரேயே முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

**பக்தாதி எங்கே?**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதி மேற்கு மோசூலிலேயே உள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டதில் இருந்து (கடந்த 9 மாதகாலமாக) மேற்கு மோசூலை ஈராக் இராணுவம் கடுமையாகக் கண்காணித்து வருகிறது. இதனால் அவர் இன்னும் சில வாரங்களில் பிடி படுவார் என்றும் கருதப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து இனியாவது சிந்திப்போம்

இயற்கைப் பேரிடரினுள் சிக்கி தெற்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 என்ற இலக்கைத் தாண்டியுள்ளது. அது 300 வரையில் அதிகரிக்கக்கூடும் என்கிற அச்சம் நிலவுகின்றது. மீட்புப்பணிகள் தொடர்கின்றன என்றாலும், காணாமற்போனவர்கள் இனியும் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்கிற நம்பிக்கை குறைந்து வருகின்றது.

திடீரெனப் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களிலும் பார்க்க, மண் சரிவுக்குள் அகப்பட்டு மாண்டு போனவர்களே அதிகம். பாதிக்கப்பட்ட பகுதி களில் பல, ஏற்கனவே மண்சரிவு அபாயத்துக்கு உள்ளவையாக அறிவிக்கப்பட்டிருந்தன என்றும், ஆனாலும் மக்கள் அங்கிருந்து வெளியேற மறுத்து தொடர்ந்தும் வசித்து வந்ததாலேயே பேரிடர் நிகழ்ந்தது என்றும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மக்களோ, தமக்கு மாற்று வசதிகள், ஏற்பாடுகள் எவற்றையும் செய்துதராமல் வசிக்கும் இடங்களைவிட்டு வெளியேறு என்றால் எப்படிச் செல்வது? எங்கு செல்வது? எப்படி வாழ்வது? என்று கேட்கிறார்கள். தொழில், பிள்ளைகளின் படிப்பு, வீடு என்று எத்தனையோ விடயங்களையும் யோசித்தே ஓர் இடத்தைவிட்டுக் குடிபெயர முடியும் என்பதே மக்களின் பதில்.

இப்படி வெள்ளம் மற்றும் மண்சரிவுக்குக் காரணமான மனிதத்தவறுகளைத் தோண்டித்துருவும்போதும் எல்லோருமே வசதியாக ஒரு விடயத்தை மறந்து விடுகிறோம். அதுதான் சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

அளவு கணக்கின்றிக் காடுகளை அழித்து ஒழித்துவிட்டமையே இன்று மலையகத்தில் பெரும் மண்சரிவுகள் அடிக்கடி ஏற்படுவதற்கான காரணம். இலங்கை விடுதலை அடைவதற்கு முன்பாக, 1920இல் இங்கு 49 வீதமான நிலப்பரப்பு காடுகளால் சூழப்பட்டிருந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டில் அது வெறும் 20 வீதமாக வீழ்ச்சியடைந்துவிட்டது. வருடம் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 26,800 கெக்டேயர் காட்டை நாம் கடந்த சுமார் 100 ஆண்டுகளில் அழித்திருக்கிறோம்.

காட்டை அழிக்கும் விகிதாசாரம் 2000 முதல் 2005 வரையான காலப்பகுதியில் மேலும் அதிகரித்திருக்கிறது. காடுகள் அழிக்கப்படுவதைக் கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவற்றால் மிகச் சிறியளவிலான பயனே கிடைத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் போரின்போது பயன்தரு மரங்கள் பல அழிந்தாலும் காடுகள் பாதுகாக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான காடுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் காடழிப்பு பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால், போர் முடிந்த சில வருடங்களிலேயே இந்த நிலமை தலைகீழானது. கேட்பாரின்றி, அளவு கணக்கின்றி மரங்கள் வெட்டப்பட்டன.

தெற்கிலும் இப்படி வகை தொகையின்றி மரங்களை வெட்டி வீழ்த்திவிட்டதால் மலைச் சரிவுகளில் மண்ணின் பிடிமானம் இழக்கப்பட்டுவிட்டது. தளர்ந்து இலகுவாகிவிடும் மண், தண்ணீரைக் கண்டதும் சரிந்து சரிவுகளில் கொட்டுகிறது. அதுவே பேரிடரை உருவாக்குகிறது.

அதன் பின்னர் ஏற்பட்ட இழப்புகளுக்காக அரசையும் அதிகாரிகளையும் திட்டித் தீர்க்கும் நாம், அந்தப் பேரிடருக்குக் காரணமாக நாமும் இருந்தோம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தவறி இருந்தோம் என்பதை வசதியாக மறந்துவிடுகிறோம். எனவே இனிவரும் காலங்களிலாவது சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறை கொள்வோம். ஒவ்வொருவரும் சூழலைப் பாதுகாக்க உறுதி பூணுவோம்.

அதேநேரத்தில், துல்லியமான காலநிலை அவதானிப்பு வசதியை உடனடியாக ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு தீவிரகவனம் செலுத்தவேண்டும். இதுவரையில் வேறு நாடுகளின் செய்மதித் தகவல்களை மையப்படுத்தியே இலங்கையின் காலநிலை அவதானிப்பு இடம்பெற்று வருகின்றது. இலங்கைக்கெனதனியான காலநிலை அவதானிப்புச் செய்மதி ஒன்று இல்லாதமையே இதற்குக் காரணம். அந்த வசதியை ஏற்படுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். துல்லியமான காலநிலை அவதானிப்பு இருந்தால்மட்டுமே, முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுத்து இழப்புக்களைத் தவிர்க்க முடியும்.

# உரிய நிர்வகிப்பின்றி அழிவடையும் ஒட்டுசுட்டான் கால்நடைப் பண்ணை

■ இரா.தனம்

கற்சிலைமடு. பெருங்கருவேப்பமுறிப்புக் குளத்திற்கு அண்மையாக சேவா லங்கா நிறுவனத்தினால் நிறுவப்பட்ட கால்நடைப்பண்ணை. தற்போது வசதிகளற்ற நிலையில், அதனை நிர்வகிப்போரது அக்கறையற்ற தன்மையால் அதன் முழுமையான செயற்பாடுகளின்றி இருக்கிறது.

வன்னிப் பகுதியில் சேவா லங்கா நிறுவனம், பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல உதவிகளைப் புரிந்து வந்துள்ளது. எமக்குக்கால்நடைப்பண்ணை ஒன்றை நிறுவி அதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெறவும், எமது பொருளாதார நிலையை உயர்த்தவும் உதவுமாறு இப்பகுதி மக்கள் கேட்டதிற்கிணாங்க குறித்த நிறுவனம், பண்ணை ஒன்றை அமைக்க முன்வந்தது. அதற்கான காணியைத் தெரிவுசெய்து தருமாறு அந்தக் காலகட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாக இருந்த சு.குமாரசாமி, இ.தனபாலசிங்கம் ஆகியோரை சேவா லங்கா நிறுவனம் கேட்டுக்கொண்டது. தற்போது பண்ணை அமைந்துள்ள அரச காணியைத் தெரிவு செய்து அந்த வேளைய ஒட்டுசுட்டான் பிரதேச செயலரது அனுமதியுடன் 2013 ஆம் ஆண்டு பண்ணைக் கட்டடம் கட்டப்பட்டது. இந்தப் பண்ணை அமைக்கப்பட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கிராம அபிவிருத்திச் சங்கம் அதனைப் பொறுப்பேற்ற போது பத்துக் கால்நடைகள் வழங்கப்பட்டதுடன், பண்ணையை நிர்வாகிக்கவென மூன்று லட்சம் ரூபா வும் வழங்கப்பட்டது. அத்துடன் மின்பிறப்பாக்கி உட்பட பாற்கொள்வனவுப் பாத்திரங்கள், சூரிய மின்கலம், பால் பதனிடும் உபகரணங்கள், பாலிலிருந்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் குளிரூட்டிகள் எனப் பல் இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் வழ்ரக வாகனமொன்றும் கையளிக்கப்பட்டதாக சேவா லங்கா நிறுவன ஒட்டுசுட்டான் பகுதி நிர்வாகி கார்ந்தன் தெரிவித்தார்.

### பிரதேச மக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்ட கால்நடைப் பண்ணை

இந்தப் பண்ணையானது 2014ஆம் ஆண்டுமுதல் இயங்கத் தொடங்கியபோது பால் கொள்வனவு செய்யப்பட்டு பாலிலிருந்து தயிர் தயாரிக்கப்பட்டதுடன், ஆடை நீக்கிய பாலை விற்பனை செய்தும் வந்தனர். அது மட்டுமல்லாது பாலின் மூலம் ரொபி உட்பட பல இனிப்புப் பொருள்களையும் தயாரித்து விற்பனை செய்து வந்தனர். இதனால் பால் விற்பனை செய்ய முடிந்ததுடன் பல யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைத்தன. அத்துடன் நல்ல வருமானமும் கிடைத்தது. சேவாலங்கா நிறுவனத்தால் வழங்கப்பட்ட கறவையினங்களால் அதுவரை எந்தவித வருமானமும் கிடைக்கவில்லை.

தொடர்ந்து குறித்த பண்ணையை நிர்வகிக்க இயலாது காலப்போக்கில் அதன் செயற்பாடுகள் கைவிடப்பட்டன. அதன் பிறகு உற்பத்திகள் நிறுத்தப்பட்டன. 2014ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் திகதி செல்லையா நடேசன் என்பவரை காவலாளியாகவும், கால் நடைகள் பராமரிப்பாளராகவும் நியமித்துப் பண்ணை அவரிடம் பாரம் கொடுக்கப்பட்டது. இவருக்கான சம்பளமாக நாளொன்றுக்கு (இரவு பகல்) ரூபா 850 வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. அவர் அங்கு தொடர்ந்து பணியாற்றி, 2015ஆம் ஆண்டில் பால் விற்பனை மூலமாக மாதாந்தம் 15 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுத்துள்ளார். தொடர்ந்தும் பால் விற்பனை மூலம் பண்ணைச் செலவையும் ஈடு செய்து வருகிறார்.

### கால்நடைப் பண்ணை குறித்து அக்கறை காட்டாத கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம்

ஆனால் இக்கால இடைவெளியில் கணக்குகள் பார்த்து முடிக்கவில்லை என்றும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரோ வேறு அதிகாரிகளோ பண்ணையைத் திரும்பிப் பார்ப்பதில்லை என்றும் எவ்வளவு பால் பெறப்படுகிறது? எவ்வளவு செலவு? சம்பளத்துக்கு என்ன செய்கிறாய் என எவரும் கேட்டதில்லை என்றும் கூறிய காவலாளி நடேசன், இங்கு யானைகள் அட்டகாசம் அதிகமுள்ளது. 2015 மே மாதம் முதல் கறவை மாடுகளில் பால் வற்றியுள்ளதால், தற்போது பால் எடுப்பதில்லை, சுற்று வேலிகளை அமைக்க நான் படாத பாடுபட்டேன், கால்நடைகளுக்கு நீர் வைப்பதற்காக குழாய் மூலம் நீர் வசதி செய்து தரப்பட்டிருந்தும் அது பழுதடைந்து விட்டது. அதனைத் திருத்தித் தருமாறு கோரியும் திருத்தவில்லை, உழண்டி மூலம் நீரிறைத்து மாடுகளுக்கு வைக்க வேண்டியுள்ளது. அது மட்டுமல்லாது எனக்குரிய வேதனமும் வழங்கப்படுவதில்லை எனவும் இங்கே விடப்பட்டுள்ள கால்நடைகளுக்கான சினைப்படுத்தல் வசதி கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். அதற்கான காளைமாடுமில்லை. தற்போது கால்நடைகள் சினைப்படுத்தல் இல்லாது நிற்கின்றன. இவைகளுக்கான உணவான புற்கள், நீர் இறைக்காததாலும், மழையின்மையாலும் அழிந்துள்ளன. இங்கு மின் இணைப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அண்டைய அயலில் உதவிக்கு எவருமில்லாத இடத்தில், மின்சார வெளிச்ச வசதியும் இல்லாது பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது எனவும் கூறினார்.

சேவா லங்கா நிறுவனம் குறித்த இந்தப் பண்ணை மூலம் இந்தக் கிராமமக்கள் பயன்பெறட்டும் என்ற நோக்கோடும் பலர் வேலைவாய்ப்புக்களைப் பெறுவர் என்ற எதிர்பார்ப்புடனும் இந்தக் கிராம மக்களிடமிருந்து கொள்வனவு செய்து பால் உற்பத்திமுயற்சிகளை மேற்கொண்டு அதன்மூலம் மக்கள் பயனடைய வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனும் இந்தப் பண்ணையை நிறுவியது. ஆனால் அதனைப் பொறுப்பேற்ற கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள், அதுகுறித்து எவ்வித அக்கறையும் காட்டாது. அங்குள்ள பெறுமதியான பொருள்கள் உடமைகள் அனைத்தையும் அழியவிட்டுள்ளனர்.

### அழிவடைந்து செல்லும் கால்நடைப் பண்ணை


தற்போது எந்த விதமான உற்பத்திகளும் இல்லை. இருக்கின்ற கறவையினங்களுக்கான எந்தவிதப் பராமரிப்பும் கிடையாது. பால் கொள்வனவுக்கான உபகரணங்கள் உள்ளன. அதற்கான வாகனமும் உள்ளது. இங்குள்ள பாலைச் சேகரித்து அதனைக் கொண்டு சென்று விற்பனை செய்ய எவரும் முன்வராததால், இங்கே உள்ள பொருள்கள் யாவும் பழுதடைந்து வருகின்றன. எனவே இந்தப் பண்ணையைப் கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகத்திடம் ஒப்படைக்கலாமென்றால் புதிய நிர்வாகத் தெரி வைக் கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளவுமில்லை.

இந்த நிலையில் பண்ணை தொடர்ந்து இயங்குமானால், எந்தவித பயனுமின்றி எல்லாமே அழிந்து விடும். எனவே இந்தப் பண்ணையைத் தொடர்ந்து இயக்கவைக்கவும், மக்களுக்குப் பயன்படும்படியான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இதனோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டத்தைக்கூட்டி நிர்வாகத் தெரிவை விரைவுபடுத்தி புதிய நிர்வா கத்தின்மூலம் பண்ணையை இயங்க வைக்க ஆவன செய்யப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழ் நிலையைப் புரிந்து செயற்படுமா கூட்டமைப்பு?

■ சேரலாதன்



அண்மைக்காலமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கண்டனங்கள் திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

சில ஊடகங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள சிலர் இதில் அக்கறை காட்டிச் செயற்படுகின்றனர். மக்களைத் திசை திருப்புவதிலேயே இவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதைவிடச் சில அரசியல் தலைவர்களும் கூட்டமைப்பை அடிக்கடி கண்டிப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். ஆனால் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் அமர்ந்து கொண்ட சிலர் இவற்றையெல்லாம் கண்டு கொள்ளாது மௌனமாக இருந்து வருகின்றனர்.

**தமிழ் மக்களது ஏகப்பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி என்பதை எவருமே மறுத்திட முடியாது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலும் மாகாண சபைத்தேர்தல்களும் இதை நிரூபித்துள்ளன. அரச தலைரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலின்போது கூட கூட்டமைப்பின் தலைவரின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ் மக்கள் வாக்களித்து மைத்திரிபால சிறி சேனவைப் பதவியில் அமர்த்தினார்கள். கடந்த தேர்தல்களில் தோல்வியைத் தழுவியவர்கள் அடுத்த தடவை எப்படியாவது வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற வெறியுடன் அலைந்து திரிகின்றனர். ஆனால் பதவியில் ஆசை இருப்பதாக இவர்கள் காட்டிக்கொள்வதில்லை. தாம் கொண்ட கொள்கையை நிறைவேற்றுவதற்காகவே அரசியல் நடத்துவதாக இவர்கள் மக்களுக்குக் காட்டிக் கொள்கின்றனர். கூட்டமைப்பு பலமாக இருக்கும் வரையில் தம்மால் எதையுமே சாதித்துவிட முடியாது என்பதை அதன் எதிராளிகள் உணர்ந்து கொண்டதால் கூட்டமைப்பை வேரோடு சாய்ப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

ஆனால் கூட்டமைப்பினர் இந்தச் சதி வேலைகள் தொடர்பாகச் சிறிதும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. எல்லாவற்றையும் மக்கள் பார்த்துக் கொள்வார்களென இவர்கள் எண்ணியிருந்தால் அதைவிடத் தவறான கணிப்பு எதுவுமே இருக்க முடியாது. மக்களின் மனநிலை அடிக்கடி மாறக் கூடியது என்பதை முதலில் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**கூட்டமைப்பின் தலைவர் அவமானப்படுத்தப்பட்டமை நியாயமானதல்ல**

முள்ளிவாய்க்காலில் கூட்டமைப்பின் தலைவர் அவமானப்படுத்தப்பட்டதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இதையொரு தற்செயலாக இடம்பெற்ற சம்பவமாகவும் கருதிவிட முடியாது. மக்களுக்கு வேதனை இருக்கலாம். தீர்க்கப்படாத துன்பங்கள் இருக்கலாம். ஆனால் அதற்காகத் தலைவர் ஒருவரை அவமானப்படுத்துவது முழு இனத்துக்கும் நேர்ந்த அவமானமாகும். ஒரு பழுத்த அரசியல் முதிர்ச்சி பெற்ற தலைவர் என்றதால் சம்பந்தர் இந்தச் சம்பவத்தைப் பெரிது படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் சம்பவ இடத்தில் இருந்த கூட்டமைப்பின் ஏனைய தலைவர்கள் இது தொடர்பாக எந்தவித அக்கறையும் காட்டியதாகத் தெரியவில்லை. இந்த விடயம் தொடர்பாக ஏதாவது கூறினால் தமது வாக்கு வங்கிக்கு ஆபத்து வந்து விடுமோவெனவும் இவர்கள் சில வேளை சிந்தித்திருக்கலாமென்ற ஐயம் தற்போது எழுகின்றது. ஆனால் ஓர் இனத்தின் தலைவருக்கு ஏற்பட்ட அவமானம் அந்த இனத்துக்கே உரித்தானது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஒரு சிலர் தமது பதவி வேட்கையைத் தணிப்பதற்காகக் கூட்டமைப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். தனித்து நின்று தம்மால் எதையுமே சாதிக்க முடியாது என்பதை இவர்கள் புரிந்து கொண்டதால் கூட்டமைப்பின் நிழலில் ஒதுங்கி நிற்கின்றனர். சந்தர்ப்பம் கிடைக்கும் போது கூட்டமைப்பை வசைபாடவும் இவர்கள் தயங்குவதில்லை. இத்தகையவர்களை இன்னமும் கூட்டமைப்பினுள் வைத்திருக்க வேண்டுமா? என்பதை இதன் தலைமை விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

மேலும் கூட்டமைப்பின் தலைமை நடப்பதையெல்லாம் வெறுமனே பார்த்துக் கொண்டு இருப்பதை இனி மேலும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் கண்டனங்கள் அனைத்துக்கும் உரிய [illegible] னங்கள் [illegible] அடைத்துவிட வேண்டும். சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாகவும் கூட்டமைப்பினர் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஏனென்றால் எதிரணி மேற்கொள்கின்ற தவறான பரப்புரை காரணமாகத் தமிழ் மக்கள் குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர். அவர்களைத் தெளிவுபடுத்தாமல் விட்டால் கூட்டமைப்பின் எதிர்காலம் சிறப்பாக இருக்கப் போவதில்லை.


**மக்களுடன் நெருங்கிச் செயற்பட வேண்டியது தமிழ்த் தலைமைகளது கடமை**

மேலும் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவதுடன் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முனைப்புடன் செயற்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே விரும்புகின்றனர். இவர்களுக்கு முன்னால் சென்று அரசியல் சித்தாந்தங்கள் தொடர்பாக உரையாற்றுவதால் பயனொன்றும் கிடைக்க மாட்டாது. மாறாக அந்தத் தரப்பினரது வெறுப்பைச் சம்பாதிப்பதாகவே அது அமையும்.

ஆகவே மக்கள் பிரச்சினைகளுக்குள் சிக்கித் தவிக்கும்போது கூட்டமைப்பினர் ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வதில் அக்கறை காட்டுகின்றமை உவப்பானதல்ல. தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத்தான் மக்கள் நாடாளுமன்றத்துக்கும் மாகாண சபைக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பி வைக்கின்றனர். மக்களின் நம்பிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டியது இந்தப் பிரதிநிதிகளின் முக்கிய பொறுப்பாகும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஒரு நெருப்பாற்றைக் கடந்து செல்ல வேண்டியவர்களாகக் கூட்டமைப்பினர் உள்ளனர். இதனால் தனிப்பட்ட விரோதங்களை மறந்து கூட்டமைப்பினர் அனைவரும் ஒன்றாக இணைந்து பணிபுரிவது தான் எதிர் காலத்தில் அந்த அமைப்பை வலுப்படுத்துவதற்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியருக்கான கடிதம்

### விபத்துக்களைத் தவிர்க்க வாகனச் சாரதிகளை ஊக்குவிப்போம்

இலங்கையில் குறைந்தது வடமாகாண ரீதியாகவாவது வாகனச் சாரதிகளை உற்சாகப்படுத்தும், ஊக்குவிக்கும் வகையில், விபத்து எதனையும் ஏற்படுத்தாது அவதானத்துடன் தமது வாகனங்களைச் செலுத்திய சாரதிகள், முடிந்தவரை பெரிய விபத்து எதுவும் ஏற்படாது தவிர்த்து அவதானமாகச் செயற்பட்ட சாரதிகள் மற்றும் சிறந்த முறையில் பணியாற்றிய மூத்த சாரதிகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினூடாக வருடாவருடம் தேர்வு செய்து பரிசுகளை வழங்கிக் கௌரவிப்பது ஒரு சிறந்த நடைமுறையாக அமையும். இதன் மூலம் இளவயதுடைய சாரதிகளை ஊக்குவிக்க முடியும் எனக் கருதுகிறேன். குறைந்தது ஐந்து தொடக்கம் பத்து வருடங்களில் விபத்து எதனையும் ஏற்படுத்தாது செயற்பட்ட வாகனச் சாரதிகளைப் பாராட்டிப் பரிசளிப்பதன் மூலம், நிகழ்வுகளை, போட்டிகளை குறித்த ஒரு தினத்தில் நடத்துவதன் மூலம் அவர்களின் மனநிலையை மேம்படுத்தலாம்.

அவர்களுக்கு ஆற்றுப்படுத்தல்கள், உளவள ஆலோசனைகள் வழங்கும் முயற்சி பயன்தருமொரு செயற்பாடாக அமையும். வாகனங்களின் தொகை அதிகரிப்பு, குடாநாட்டு வீதிகளின் ஒடுக்கம், வாகன இயந்திர வெப்பம் மற்றும் புறச்சூழல்களால் சாரதிகள் மன உளைச்சல் அடைவது இயல்பே. இதன் காரணமாக ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க இயலாதுவிடினும், குறைப்பதற்கு, அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தும் செயற்றிட்டம் நன்மை பயக்கும்.

1990களில் அரச தலைவர் விருது பெற்ற நற்சாரதிகள் பலர் வடமாகாணத்தில் இருந்துள்ளனர். எனவே மீண்டும் அவ்வாறான ஊக்குவிப்புச் செயற்பாடுகள் அவசியம் என்பது என் தாழ்மையான கருத்து.

நா.துஷாந் , வரணி

### பரிசுத்த அன்பே இறைவனது விருப்பு

இன்று ஆலயங்களில் பேணப்படும் உண்டியல்களை உடைத்துப் பணத்தைக் களவாடுவது மற்றும் தெய்வத்தின் திருமேனியை அலங்கரிக்கும் தங்க ஆபரணங்களைக் கொள்ளையிடுவது சர்வ சாதாரண நிகழ்வுகளாகி விட்டுள்ளன. கருணையே வடிவான தெய்வம் எம்மிடம் எதிர்பார்ப்பது உள்ளார்த்தமான, பரிசுத்தமான அன்பையே. பசித்தவனுக்கு உணவளிப்பதும் பெருகிவரும் வயோதிப, சிறுவர் இல்லங்களுக்கு உதவுவதும் சிதைந்துபோயிருக்கும் ஆலயங்களையும் ஆலயச் சுற்றுச் சூழலையும் சீர்திருத்துவதும் இறைவனின் மலரடியை வணங்குவதற்கு ஒப்பாகும். பரோபகார மனம் படைத்தவர்கள் தமது நேர்த்திக் கடன்களை பொன்பொருளாய் செலுத்துவதைத் தவிர்த்து மேலே குறிப்பிட்ட நற்காரியங்களுக்கு உதவுவது ஆண்டவனின் அருட் கடாட்சம் கிட்ட வழி வகுக்கும்.

எஸ்.சுப்பிரமணியம், கல்வயல்

# சீனாவின் நிதி உதவியுடன் தொழிற்பேட்டை அமையப்பெறும்

## தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



சீனாவின் நிதி முதலீட்டின் பங்களிப்புடன் 15 ஆயிரம் ஏக்கர் அளவுடைய காணியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது கருத்துரைத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் இந்தச் செயற்றிட்டத்துக்கான காணி பெறுகை தொடர்பில் தெற்கு அபிவிருத்தி அமைச்சு ஈடுபட்டுவருவதாகவும் தொழிற் பேட்டைக்கான சூழ மைவுகளை அறிந்தகொள்வதற்கு சீன நிறுவனங்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதான தகவலும் தலைமை அமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் காணித் தெரிவானது புத்தல மற்றும் யால பகுதியிலும் அங்கு பொருத்தமற்ற தன்மைகள் காணப்படுமிடத்து மொனராகல, அம்பிலிபிட்டிய பிரதேசங்களில் தெரிவு முறைகள் இடம்பெறுமெனவும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

# 25 வருடங்களைப் பூர்த்தி செய்தது செய்லான்

## இலங்கையின் ஒரேயொரு கைத்தறி நிறுவனம்

இலங்கையின் வர்த்தக ரீதியிலே உறுதிப்பாட்டினை உடையதான ஒரேயொரு கைத்தறி நிறுவனமாக விளங்கும் 'செய்லான்' தனது 25 வருடகாலப்பூர்த்தி நிகழ்வினை அண்மையில் கொண்டாடியுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மேற்படி நிறுவனத்தின் நிறுவுநர் சந்த்ராவந்துரகல, கைத்தறி நெசவாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்துரைத்த நிறுவனத்தின் ஸ்தாபகர் சந்த்ராவந்துரகல.

"இதுவரைகாலமும் நாங்கள் நியாயமான விலைகளில் உயர்தரம் மிக்க, நன்கு வடிவமைக்கப்பட்ட புத்துருவாக்க உற்பத்திகளை எமது வாடிக்கையாளருக்கு வழங்குவதில் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

கொழும்பு, கண்டி, நீர்கொழும்புமற்றும் குருநாகல் நகரங்களிலுள்ள எமது விற்பனை நிலையங்களில் உற்பத்திகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் செய்லான் இனை தங்கள் வீட்டு உபயோக வர்த்தக நாமமாக உருவாக்கிட வழி வகுத்துள்ளனர். உள்நாட்டு, வெளிநாட்டு ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் உள்ளடங்கலான முன்னணி காட்சியறைகளில் எமது உற்பத்திகளை பெறமுடிகிறது" - என்றார்.

> “
> தற்போது மிகப் பெரிய வர்த்தக நாமமாக உருவாகியிருக்கும் இந்த நிறுவனமானது ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமியப் பெண்களின் வாழ்வை வலுவூட்டிவருகிறது.

1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுவப்பட்ட இலங்கையின் ஒரேயொரு நியாயமான வர்த்தக நோக்குடையதான கைத்தறி நிறுவனமாக செய்லான் தனது பயணத்தை 15 கைத்தறி நெசவாளர்களுடன் ஒரு சிறிய கிராமத்தில் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இன்று துணி வகைகள், வீட்டு, நவீன ஆடையலங்காரம் மற்றும் மென்மையான பொம்மைகள் போன்ற தெரிவுகளை உற்பத்தி செய்து வருகிறது. மென் விளையாட்டுப் பொருள்கள் 40 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. குருநாகல், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பிரசேதங்களைச் சுற்றிலும் உள்ள 16 கிராமங்களில் உள்ள கைவினைஞர்களினால் 100 வீதமான தூய்மையுடைமய பருத்தியினாலான உற்பத்திகள் செய்யப்பட்டுவருகின்றது.

மேலும் வீடுகளில் இருந்து மேற்படி நிறுவனம் சார்ந்து பணிபுரியும் 180 பெண்கள் உள்ளடங்கலான நிறுவனத்தில் பணிபுரியும் 541 ஊழியர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி வருகிறது. இதற்கு மேலதிகமாக, கிராமியப் பெண்கள் முகங்கொடுக்கும் பாலியல் சார்ந்தவன் கொடுமைகள் தொடர்பிலான விழிப்புணர்வு மற்றும் நிதி முகாமைத்து வத்திற்கான பயிற்சிகள் போன்றவற்றையும் செய்லான் வழங்கிவருகிறது.

# அதியுயர் தொழில்நுட்பச் சேவை வழங்குநராக அபான்ஸ்

## நாடு முழுமையுமான சேவை வலையமைப்பை அமைத்துக்கொண்டது

நவீன உலகத்தின் வாழ்க்கை முறைகளுக்கும் தேவைகளுக்கும் ஈடுகொடுத்து ஒத்திசைவாக்கம் பெறும் வகையில் அபான்ஸ் சேவைப் பிரிவானது உயர் தரத்திலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சேவை வலையமைப்பினை நாடளாவிய ரீதியிலே வாடிக்கையாளர்களுக்கென அறிமுகம் செய்துள்ளதாக அபான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் தற்போது 24 மணிநேர சேவையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த வலையமைப்பின் மூலம் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தொலைபேசி வாயிலாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு ஏதேனும் அவசரத் தேவைகள் ஏற்படும் பட்சத்திலே உரிய இலக்கங்களோடு தொடர்பு கொண்டு அபான்ஸ் சேவைப் பிரிவின் தொழில் நுட்பப் பணியாளர் ஒருவரை வரவழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவைதவிர இணையத் தளமூடான வாடிக்கையாளர் தொடர்புச் சேவை, புதுப்பித்தல் தொடர்பான புதிய விவரங்களை அறிதல், சேவைக்கான கட்டணத்தை செலுத்துதல், உற்பத்தியின் மேம்படுத்தல்கள் தொடர்பான தகவல்களை அறிதல், நடமாடும் சேவைகள் மற்றும் துரித சேவைகள் மூலம் சேவைகளையும் தேவைகளையும் விரைவாகவும் துரிதமாகவும் செய்திடக்கூடிய வாய்ப்புக்கள் எனப் பலதரப்பட்ட சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருவதாக அபான்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும் வாடிக்கையாளர்களுக்கான சகல வசதிகளையும் அதியுயர் சேவைகளையும் வழங்குவதற்காக அபான்ஸ் சேவைப் பிரிவானது நாடளாவிய ரீதியிலே 17 சேவைப்பிரிவுகள் மற்றும் அங்கீகாரம் கொண்ட 100 சேவை முகவர்களை கொண்டுள்ளதாகவும், வாடிக்கையாளர்களுக்கு தேவையான சகல சேவைகளையும் உயர்தர உதிரிப்பாகங்களைக் கொண்டு விரைவான, செயற்திறன் மிக்கதான சேவைகளாக வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளது.

# விற்பனையில் வீழ்ச்சி

## இடைநிலை வர்த்தகர்கள் பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறி விற்பனையில் ஈடுபட்டு வருகின்ற வியாபாரிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக தம்புள்ளையில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறி வகைகளை பெற்றுக்கொள்ளும் இடைநிலை வர்த்தகர்களே தமது கொள்வனவிற்கான கேள்வியினை விற்பனை மூலம் பெற்றுக்கொள்ள முடியாத நிர்க்கதி நிலையினை கண்டு கொண்டுள்ளதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



பிரதானமாக மழையுடன் கூடிய கால நிலை காரணமாக மொத்தமான கொளவனவுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வர்த்தகர்களின் வருகை குறைவடைந்துள்ள சந்தர்ப்பங்களும் இந்த பாதக நிலை ஏற்பட காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அதிக மழை வீழ்ச்சி காரணமாக பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதோடு போஞ்சி, லீக்ஸ், கத்திரிக்காய், தக்காளி போன்ற மரக்கறி வகைகளை கிலோ ஒன்றுக்கு 30 ரூபாவுக்கும் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் விவசாயிகளால் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஜியோவுடன் அப்பிள் நிறுவனம் இணைவு

## விற்பனையை மேம்படுத்த திட்டம்

இந்தியா முழுவதும் 4ஜி அலைக் கற்றைகளின் சேவைகளை வழங்குவதற்கான உரிமத்தை பெற்றுக்கொண்டுள்ள ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்துடன் இணைந்து கொண்டு செயற்பட அப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிம் குக் தெரிவித்துள்ளார்.

"கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவில் ஐபோன் விற்பனை 50 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆகவே விற்பனையை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் அப்பிள் நிறுவனமானது ஜியோவுடன் இணைந்துகொள்ளவுள்ளது. இந்தப் புதிய இணைவின் தொடக்கமானது ஐபோன்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கான ஒரு வருட கால இலவச சேவையை வழங்கவுள்ளது. அத்துடன் ஜியோ குறைந்த கால வரையறையினுள் அதிக வாடிக்கையாளர்களை கவர்ந்துள்ள விடயமானது ஜியோவுடன் இணைந்து அப்பிள் நிறுவனம் சிறப்பான பல சேவைகளை வழங்குவதற்கான ஆரம்பத்தை தந்துள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Reliance Jio


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி , யாழ்ப்பாணம் - 212221455

31/5/2017 www.cse.lk

பங்குச் சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | 19.07 | 6,674.32 | 6,655.25 |
| S&P SL20 | 15.63 | 3,818.90 | 3,803.27 |
| வியாபாரப்புரள்வு | | 597,771,840 | 1,717,421,820 |
| உள்நாடு:- கொள்வனவு | | 405,706,560 | 1,673,460,740 |
| விற்பனை | | 362,563,264 | 1,675,733,500 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 192,065,296 | 43,961,036 |
| விற்பனை | | 235,208,576 | 41,688,344 |



| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 135.00 | 843,015 | 111,510,023 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 168.40 | 626,447 | 105,234,805 |
| விம்புத்து பைனான்ஸ் | BLI.N | 50.00 | 1,386,443 | 69,270,050 |
| BPPL கோல்டிங்ஸ் | BPPL.N | 14.00 | 2,442,760 | 34,188,297 |
| சம்பத் வங்கி | SAMP.N | 292.50 | 82,806 | 24,178,551 |
| றிச்சர்ட் பீரிஸ் எக்ஸ்போர்ட் | REXP.N | 218.00 | 84,770 | 18,167,018 |
| றிச்சட் பீரிஸ் | RICH.N | 9.50 | 2,018,977 | 16,815,529 |
| ஹெர்மஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 122.50 | 126,395 | 15,316,951 |
| டயலொக் | DIAL.N | 12.10 | 1,214,859 | 14,652,637 |
| பிறவன்ஸ் கப்பிற்றல் | FLCH.N | 3.10 | 3,525,706 | 10,221,139 |

Workshop

முதலீட்டு உத்திகள் பயிற்சிப்பட்டறை

பங்குலாபம்

லங்கா ஆசோக்லேடன்ஸ் - ரூபா 30.00

சென்றல் பைனான்ஸ் ரூபா. 0.85

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 296 |
| பரிமாற்றத்தில் | 239 |
| விலை உழைப்பு | 11.7 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளை | 2.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தொடருந்துப் பாதை வெளியில் ஆபத்தற்ற பாதுகாப்பான மக்கள் பயணம்

## பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகள் தரும் படிப்பினை

நந்தன்

வடபகுதியில் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகள் ஊடாகப் பயணிப்போர் அதிக ஆபத்துக்களை அறிந்தும் அறியாமலும் எதிர்கொண்டு வருகின்றனர். விலை மதிப்பற்றதான தமது உயிரையும் மாய்த்துக் கொள்கின்றனர். இந்த அவலச் சம்பவங்கள் உரியவர்களின் அவதானத்திற்கு உட்படாது தன்னிலையில் அதிகரித்துச் சென்ற வண்ணமுள்ளது. இந்த விடயங்கள் யாவரும் அறிந்ததே.

உண்மையில் மக்கள் குடியிருப்புக்கள் செறிவூட்டமாக உள்ள பிரதேசங்களின் அண்மிதமான பகுதிகளின் ஊடே செல்லும் தொடருந்துக் கடவைகளை ஊடறுத்துச் செல்லும் வீதிகளுக்கு உரிய பாதுகாப்புக் கடவைகள் அமைக்கப்படவில்லை. இந்தக் காரண காரியங்களின் வெளிப்பாடாகத்தான் இந்தத் திடீர் விபத்துச் சம்பவங்கள் அதிகம் நிகழ்ந்து வருகின்றன.

குறிப்பாக ஓமந்தையில் இருந்து காங்கேசன் துறை வரையான பகுதியில் அமையப்பெற்றுள்ள அநேகமான இடங்களில் பயணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமான தொடருந்துக் கடவைகள் அமைக்கப்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே வடக்கே ஓமந்தைக்கு அப்பால் சகல தொடருந்துகளும் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்திலேயே பயணிக்கின்றன.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொடருந்துப் பாதைகள் என்ற காரணத்தினால் தான் ஓமந்தையைத் தாண்டியதும் தொடருந்துகள் அதிக வேகத்தில் பயணிக்கின்றன என்பது இங்கு கவனத்திற்குரியது.

குளிரூட்டப்பட்ட கடுகதி மற்றும் இன்ரர்சிற்றி கடுகதித் தொடருந்துகள் அதிக வேகத்துடன் பயணித்தாலும் அதன் இயங்குநிலைக்குரித்தான சத்தம் என்பது வேகத்திற்கிணையாக மிகவும் குறைந்தே காணப்படுகின்றன.

இவை சில மீற்றர் தூரத்தில் வரும் சந்தர்ப்பங்களின் போதுதான் அவற்றின் சத்தங்களை உணர்திறனோடு உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது. இருந்தபோதும் பாதுகாப்பு இல்லாத தொடருந்துக் கடவைகளைக் கடந்து செல்வதற்கு முன்பாக தொடருந்துச் சாரதிகள் ஒலியை (கோன்) எழுப்ப வேண்டும். அவர்கள் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. இது அவதானத்துக்குரிய கடமையாகும்.


அதிகமான சந்தர்ப்பங்களில் இந்த எச்சரிக்கை ஒலி எழுப்புகை என்பது தாமதிக்கப்படுகிறது. ஒலி எழுகையின் முன்பாகவே தொடருந்துகள் கடவையைக் கடந்து சென்றுவிடுகின்றன. அந்த அளவுக்கு தொடருந்துகள் அதீத வேகத்தில் பயணிக்கின்றன.

சில தொடருந்துக் கடவைகளில் தொடருந்துகள் வருவதற்கு முன்பாகவே தன்னியக்க சமிக்ஞை விளக்குகள் ஒளிர்வதுடன் ஒலிகளும் எழுப்பப்படுகின்றன. சில நிமிடங்களில் தொடருந்துகள் அதீத சத்தங்களின் வெளிப்பாடுகளுமின்றிக் கடவைகளை கடந்து சென்றுவிடுகின்றன.

ஆக, பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளை மக்கள் கடந்து செல்லும்போது மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். உயிராபத்துகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

### தொடருந்துப் பாதுகாப்புக் கடவைகள்

பாதுகாப்புக் கடவைகள் இல்லாத இடங்கள் குறித்து அதிக அவதானம் செலுத்துவதுடன் பாதுகாப்புக் கடவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தொடர்புடைய பிரதேச செயலகங்கள் மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மக்கள் சார்புடைய கரிசனையோடு மேற்கொள்ள வேண்டும்.



குறிப்பாக தொடருந்துக் கடவைகளுக்குப் பொலிஸார் பாதுகாப்பினை வழங்கலாம் அல்லது போனால் அதற்கான பாதுகாப்பு ஊழியர்களை பிரதேச செயலகங்கள் உரிய முறையில் நியமித்துக் கொண்டு சரியான பாதுகாப்பை வழங்க முடியும். பொதுமக்களும் இந்த பாதுகாப்பற்றதான தொடருந்துக் கடவைகளை கடந்து செல்லும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

தொடருந்துகள் பயணிக்கும் நேரங்களை அறிந்து வைத்துக்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் பயணிகளை அறிவூட்டுவதுடன் தொடருந்துக் கடவையைக் கடந்து செல்லும் போது அவர்களை பாதுகாப்பின் அவதானம் கொண்டு அச்சறுக்கைப்படுத்திவிடுகின்றன. இதனையே தொடருந்துத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவரும் பிரதிபலித்திருந்தார் என்பது நோக்குதற்குரியது.

### தனித்துவங்கள் தரும் இயல்நிலை ஆபத்து

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான தொடருந்துப் பாதைகள் நவீன முறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டவை. இந்த பாதைகள் அனைத்தும் உயர் தொழில்நுட்பத்துடன் உயரமாக அமைக்கப்பட்ட பாதைகளாகக் காணப்படுகின்றன. பாதையில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள தண்டவாளங்கள் சிமெந்தினால் ஆக்கப்பட்ட சிலிப்பர் கட்டைகள் கொண்டு புதியவிதமாக அமைக்கப்பட்டு தனித்துவமான அமைப்புறுதியோடு செப்பனிடப்பட்டுள்ளன.

என்றாலும் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களும் [illegible] வறட்சி நிலைகளும் [illegible] அகலங்களின் தன்மையில் இயல்பான விரிவடைதலை ஏற்படுத்தி விடுகின்றன. ஏற்படுத்திவிடும் என்பது அனுமானம். இந்தக் காரணங்களின் வெளிப்பாடாகத் தொடருந்துகளில் பயணிக்கும்போது சற்றே ஆட்டம் ஏற்பட்டாலும் அவற்றின் இயங்குநிலைக்குரித்தான சத்தம் என்பது மிகமிகக் குறைந்தே காணப்படும்.

இவ்வாறான இயங்கு வெளிகளோடு வடக்கே வரும் தொடருந்துகள் குறிப்பிட்ட நேர அடைவுகளைக் கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட தொடருந்து நிலையங்களை வந்தடைகின்றன. ஓமந்தைக்கு அப்பால் தொடருந்துச் சேவையின் பயணத்தில் தாமதம் ஏற்பட்டாலும் ஓமந்தையைக் கடந்ததும் தொடருந்துகளின் வேகம் சற்று அதிகரிக்கின்றன. குளிரூட்டப்பட்ட கடுகதித் தொடருந்துகள் குறித்த சில தொடருந்துத் தரிப்பு நிலையங்களில் மட்டுமே தரித்து நிற்கின்றன. இதன் காரணமாகத் தான் அவை அதிக வேகத்தில் செல்கின்றன.

> மக்களை விழிப்பூட்டுவதுடன் பாதுகாப்பான பயணம் தொடர்பான செயற்பாடுகளை அறிவூட்டமாக மக்களிடம் கொண்டு செல்வதற்கான சாத்தியங்களைப் பயனுறுதியாக்கிக் கொள்ள வேண்டும். இவை தவிர்ந்து தேவையற்றதான உயிராபத்துக்களில் இருந்து தமைக் காத்துக்கொள்ள மக்களும் தங்கள் செயல்நிலை சார்ந்து விழிப்பாக இருக்க வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகவும் கருதப்படுகிறது.

### பொதுமக்களின் கோரிக்கை

வடக்கில் தொடருந்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் பயணித்த சந்தர்ப்பங்களில் தொடருந்துகளுடன் அடியுண்டு தூக்கி வீசப்பட்டுப் பலர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையிலே பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளுக்குப் பாதுகாப்புக் கடவைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதான கோரிக்கைகள் பொதுமக்கள் தரப்பிலிருந்து முன்மொழியப்பட்டுள்ளன.

இருந்த போதும் மக்களின் இந்த கோரிக்கைகளுக்கு இதுவரையாக எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த காலப் போரில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழந்தனர். பல ஆயிரம் பேர் காணாமலாக்கப்பட்டனர். போரின் வடுக்களைச் சுமந்திருக்கும் அங்கவீனமுற்றவர்களாகவும் ஆக்கப்பட்டனர். இதன் இடையாக அபிவிருத்தியின் பயனுறுதியாக வருகை தந்துள்ள விடயங்களும் மக்களின் இயங்கு நிலையில் அதிகமாக ஆபத்துக்களையும் உயிரிழப்புக்களையும் வலிந்து திணித்து வருவதென்பது கவலைக்குரியதும் கரிசனைக்குரியதுமாகும்.

இவ்வாறு வடக்கில் போரின் பின்னரான காலப்பகுதியில் விபத்துச் சம்பவங்களால் மக்கள் அநியாயமாக உயிரைப் பறிகொடுக்கும் நிலமைகள் அதிகரித்துள்ளன. இப்படிப்பட்ட விபத்துச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் தவறிவிட்டனர்.

ஆயின், மக்கள் நலன் சார்ந்து சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளைச் சீர்செய்ய முன்மொழிவுகளை மேற்கொள்ள வேண்டும். மக்களை விழிப்பூட்டுவதுடன் பாதுகாப்பான பயணம் தொடர்பான செயற்பாடுகளை அறிவூட்டமாக மக்களிடம் கொண்டு செல்வதற்கான சாத்தியங்களைப் பயனுறுதியாக்கிக் கொள்ள வேண்டும். இவை தவிர்ந்து தேவையற்றதான உயிராபத்துக்களில் இருந்து தமைக் காத்துக்கொள்ள மக்களும் தங்கள் செயல்நிலை சார்ந்து விழிப்பாக இருக்க வேண்டும். இதுவே காலத்தின் தேவையாகவும் கருதப்படுகிறது. வேண்டப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் முதல் பயணம் அர்த்தங்கள் இல்லாதது

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் தனது முதலாவது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மீண்டும் வெள்ளை மாளிகைக்குத் திரும்பியுள்ளார் ட்ரம்ப். இந்தச் சுற்றுப் பயணத்தில் தனது தேர்தல் பரப்புரைக்கமைய செயல்பட்டும் காட்டியிருக்கிறார் அவர். முற்றுமுழுதாக அமெரிக்காவின் நலனைக் கருத்தில்கொண்டே ட்ரம்பின் முதல் பயணம் அமைந்துள்ளது போன்று தெரிகிறது.
கிழக்கு ஜெருசலேம் விவகாரத்தில் இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு இடையில் நூற்றாண்டுகாலப் பகைஉள்ளது. கிழக்கு உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவும் ஐரோப்பிய நாடுகளும் முண்டுகின்றன. கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவை அதிகம் நம்பி தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன. அகதிகள் பிரச்சினையை ஐரோப்பிய நாடுகள் அதிகளவில் எதிர்கொள்ளுகின்றன. மத்திய கிழக்கு நாடுகள் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளால் அவதிப்படுகின்றன. உலக வல்லரசு என்ற அடிப்படையில் இந்த விவகாரங்களுடன் தொடர்புடைய நாடுகளுக்கு ட்ரம்ப் தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளவில்லை. அவர் முதலா[illegible]தாகத் தெரிந்தெடுத்த நாடு சவூதி அரேபியா.
ட்ரம்ப் - சவூதி அரேபிய அரசர் சல்மான் இடையிலான சந்திப்பை அடுத்து மிகப்பெரும் இராணுவ தளபாட விற்பனை ஒப்பந்தத்தை மேற்கொண்டது அமெரிக்கா. நீண்டகால அடிப்படையில் சவூதிக்கு இலங்கை மதிப்பில் 2 லட்சம் கோடி அமெரிக்க டொலர்கள் அளவுக்கு இராணுவத் தளபாடங்களை அமெரிக்கா விற்கவுள்ளது. இராணுவ தளபாட ஒப்பந்தம் மற்றும் பரிமாற்றத்தில் இது மிகப்பெரும் தொகை.
இந்த ஒப்பந்தத்தை அமெரிக்காவின் பகைமை நாடாக வளர்ந்துவரும் ஈரான் கடுமையாக விமர்சித்தது. "அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஈரான் தற்போது பால் கறக்கும் பசு. அமெரிக்காவின் வேலை முடிந்ததும் ஈரானின் வேலையும் முடியும்" என்று ஈரானின் மூத்த அரசியல் தலைவர் அயத்துல்லா.
சவூதிப் பயணத்தை முடித்துக்கொண்டு ட்ரம்ப் இஸ்ரேல் சென்றார். இஸ்ரேல் தம்மை ஆக்கிரமிப்புச் செய்கிறது என்று கதறிக் கொண்டிருக்கும் பலஸ்தீனத்துக்கு அவரால் தீர்வை வழங்க முடியவில்லை. இருநாடுகளும் பகைமையை வலியை கசப்புணர்வை மறக்கவேண்டும் என்று சம்பியதாயபூர்வமாக சொல்லிவிட்டு இத்தாலி சென்று ஜி7 மாநாட்டில் பங்கெடுத்தார். உலக வல்லரசு என்ற வகையில் உலகின் முக்கிய பிரச்சினைகள் எதுவும் ட்ரம்பின் முதல் பயணத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை, தீர்க்கப்படவில்லை.




கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் நடைபெற்ற அதிபர் தேர்தல் பரப்புரையில் அமெரிக்காவின் நலன் சார்ந்த திட்டங்களையே ட்ரம்ப் முன்வைத்திருந்தார். அமெரிக்கா, அமெரிக்கர்களுக்கே. பன்னாட்டு ஒப்பந்தங்கள், வேலைவாய்ப்புக்கள், கல்வி, பட்டப்படிப்பு உள்ளிட்ட அத்தனையிலும் அமெரிக்கர்களுக்கே முன்னிரிமை வழங்கப்படும். அமெரிக்காவின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும், பொருளாதாரம் மேம்படுத்தப்படும், அமெரிக்காவில் இருந்து உலக நாடுகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் குறைக்கப்படும் என்று முழங்கிருந்தார். ட்ரம்பின் இந்த முழக்கங்களையும் அவரின் முதல் பயணத்தையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்த்தால் ட்ரம்பின் ஆட்சியில் அமெரிக்கா சிறந்த முறையில் கட்டியெடுப்பப்படும் ஆனால் உலக நாடுகளுக்கு அவரால் தீர்வொன்றும் இல்லை என்பது தெளிவாகும்.



# குணாதிசயங்கள் கூந்தலை வைத்தே இயல்பறிதல்



மிருதுவான கூந்தல் அமையப் பெற்றவர்கள் ஒழுக்க சீலர்களாகவும் ஆன்மிகத்தில் மீகுந்த ஈடுபாடு உள்ளவர்களாவும் இருப்பார்கள்.

**கட்டை கட்டையான முரட்டுகேசம்**

சில பெண்களுக்குக் கட்டை கட்டையான மொத்த மொத்தமாக கேசம் அமைந்திருக்கும். மற்றவர்களைப் போல நன்றாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஆனால், அத்தகைய வாழ்க்கை அமையாமல் போவதற்கு வாய்ப்புகள் அதிகம். காதல் கசப்பாக முடியும். ஒரு சிலரை ஆண்கள் ஏமாற்றிவிடுவதும் உண்டு.
மணவாழ்க்கையைத் தேர்வு செய்யும்போது கவனமாகத் தேர்வு செய்வது நல்லது. பெரும்பாலானவர்கள் தங்களின் காதலை நினைத்து நினைத்து மனதுக்குள்ளேயே வேதனைப்படுவார்கள். வைராக்கியம், பிடிவாதம், கோபம் ஆகியவை இவர்களின் உடன் பிறந்தவையாக இருக்கும். வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொண்டு வாழ்ந்தால் மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

**மென்மையான கூந்தல்**

கூந்தல் மென்மையாகவும் மிருதுவாகவும் அமையப்பெற்ற பெண்கள் புத்திசாலிகளாகவும் ஒழுக்க சீலர்களாகவும் ஆன்மிகத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருப்பார்கள். வார கடைசியென்றால் கோயில் குளமென கிளம்பி விடுவார்கள். அடிக்கடி கடுமையான விரதங்களை இருப்பார்கள். ஏழ்மை நிலையில் இருந்தாலும், தங்கள் பக்தியாலேயே வாழ்க்கையின் உன்னதமான நிலையை அடைவார்கள். புகுந்த வீட்டை விட, பிறந்த வீட்டை அதிகம் நேசிப்பார்கள். இவர்கள் எவர் என்ன சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அவர்களுடைய அம்மா சொன்னால் போதும் மறுபேச்சில்லாமல் அப்படியே கேட்பார்கள். கணவன் மீது உயிரையே வைத்திருப்பார்கள். எப்படிப்பட்ட பிடிவாதமும் வலிமையும்மிக்க ஆடவரும், இவர்கள் மனைவியாக அமைந்துவிட்டால் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவார்கள். மனைவிசொல்லே மந்திரமாகக் கொண்டு வாழ்வார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1495 - ஸ்கொட் விஸ்கி பற்றிய முதல் பதிவு மத குரு ஜோன் கோர் என்பவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1533 - இங்கிலாந்து அரசியாக ஆன் பொலின் முடி சூடினார்.

1855 - அமெரிக்கத் துணிச்சல் காரரான வில்லியம் வோல்க்கரால் நிகாரகுவா வெற்றி கொள்ளப்பட்டது.

1916 - ஐக்கிய அமெரிக்காவின் உச்சநீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட முதலாவது யூத இனத்தவரானார் லூயிஸ் பிறன்டீஸ்.

1941 - பாக்தாத்தில் ஈராக்கிய யூத இனத்தவருக்கு எதிரான திட்டமிட்ட வெளியேற்றம் தொடங்கப்பட்டது.

1962 - நாஜி ஜேர்மன் லெப்டினன் கேணல் அடொல்ப் ஈச்மன் இஸ்ரேலில் தூக்கிலடப்பட்டார்.

1979 - தற்போதைய சிம்பாப்வே ஆகிய றொபீசியா கறுப்பினத்தவர் தலைமையிலான அரசு அதிகாரத்துக்கு வந்தது.

1990 - ஜோர்ஜ் டபிள்யூ புஸ் மற்றும் மிக்கல் கொப்பர்சேவ் ஆகியோர் இரசாயன ஆயுத உற்பத்தியை முடிவுக்குக் கொண்டு [illegible]டனர்.

1993 - சரா[illegible]ஜோவா மேற்கே [illegible]றின்ஜாவில் உதைபந்தாட்ட விளையாட்டின் மீது சேர்பியர்களால் மேற்கொள்ளப்பட்ட மோட்டர் குண்டுத் தாக்குதலின் 13 பேர் சாவடைந்ததுடன் 133 பேர் காயமடைந்தனர்.

2001 - நேபாளத்தின் முடிக்குரிய இளவரசர் டிபேந்திராவால் அவரது தாயார் தந்தையர் உட்பட அரச குடும்ப அங்கத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2015 - 458 பயணிகளைச் சுமந்துசென்ற கப்பல் ஒன்று சீன ஹீபே மாகாணத்தில் யான்றிஷி ஆற்றில் கவிழ்ந்ததில் 400 பேர் உயிரிழந்தனர்.

2016 - முதலமைச்சருக்குதடைகள்போட படைத்தரப்பிற்கு அதிகாரமில்லையென அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவிப்பு.

**நாளை**

**வைகாசி-19**
வெள்ளிக்கிழமை -02.06.2017
திதி: அட்டமி மு.ப. 11.35வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப 04.56வரை
சுபநேரம்:05.52-07.22 வரை
ராகுகாலம்:10.22-11.52 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கிக் கொண்டிருக்கும்போது
ஏன்டா மிதிச்சேன்னு கேட்டா....



உயிரோட இருக்கியான்னு பார்த்தேன்
என்கிறார்...!



# விஷாலுக்கு வில்லியாகும் வரலட்சுமி

நேரமின்றிஇருக்கும்நடிகர்விஷாலின்கைவசம் 'இரும்பு திரை', 'துப்பறிவாளன்' மற்றும் 'கருப்புராஜா, வெள்ளைராஜா' ஆகியபடங்கள் உள்ளன. இந்தவரிசையில்தற்போதுமேலும் ஒரு படம் சேர்ந்துள்ளது.

விஷாலுக்குபெரும்வெற்றிகொடுத்ததிரைப்படம் 'சண்டக்கோழி'. தற்போது இந்தப் படத்தின் பகுதிஇரண்டைத்தயாரிக்கும்வேலையில்மும்முரமாக ஈடுபட்டு வருகிறார் இயக்குநர் லிங்குசாமி.

'சண்டக்கோழி2' மூலமாகமீண்டும்இணையவுள்ள விஷால், லிங்குசாமி கூட்டணியில் தற்போது வரலட்சுமியும் சேர்ந்துள்ளார். இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் வரலட்சுமி நடிக்கிறார், அதிலும் விஷாலுக்கு வில்லியாக நடிக்கிறார் என்று தகவல் வெளிவந்துள்ளது. மேலும், இந்தப் படத்தில் விஷாலுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். ஜூலையில் சண்டக்கோழி 2 படத்தின் படப்பிடிப்பு தொடங்கும் எனக் கூறப்படுகிறது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பர்களால் பிரச்சினைக்கு ஆளாக லாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் ஓரளவு இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**இடபம்:** பேச்சில் ஆன்மிக எண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பரிசு, பாராட்டைப் பெறுவர்.

**மிதுனம்:** வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக்கிடைக்கும்.தொழில்,வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உடல் நலத்திற்குஒவ்வாதஉணவுகளைத்தவிர்க்கவும். நண்பரால் உதவி கிடைக்கும்.

**கடகம்:** உற்சாகமனநிலையுடன்இருப்பீர்கள். தொழிலில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். சேமிக்க வாய்ப்புண்டு. நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம்கிடைக்கப்பெறுவர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராக விளங்குவீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது. தொழில், வியா பாரத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர்.

**துலாம்:** நண்பர்களின் செயல்பாட்டால் சிரமப்படநேரிடலாம்.தொழில்,வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில்திடீர்செலவுஏற்படும்.பெண்கள்நகை இரவல் கொடுக்கவோ, வாங்கவோ கூடாது.

**விருச்சிகம்:** புத்துணர்ச்சியுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள்சலுகைகிடைக்கப் பெறுவர்.


**தனுசு:** சநல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் லாபம் கிடைக்கும்.

**மகரம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் தாமத கதியில்இயங்கும்.லாபம்ஓரளவாகஇருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கும்பம்:** சிலரதுதவறான ஆலோசனையால் பிரச்னைஏற்படலாம்.தொழில்,வியாபாரத்தில் லாபம் ஓரளவு இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் குறிப்பறிந்து நடப்பது நல்லது. உடல்நலனில் அக்கறை தேவை.

**மீனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சி இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர்.

இதயம் மரத்துப் போய்விட்டது



அப்படியே எங்கள் இரைப்பையும் மரத்துப்போய்விட்டால் பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும்




இனம் அழிவது தெரியாமல் புகைப்படம் எடுத்துக் கொள்கின்றன உயிரினங்கள்

## அரசியல் ஆத்திசூடி

* அரசியல் செய்ய விரும்பு!
* ஆளுவது பணம்!
* இரக்கமதைக் கைவிடு!
* ஈனச்செயல் செய்!
* உடையதைப் பறித்திடு?
* ஊழல், மது கைவிடேல்!
* எண் எழுத்து அறியான்!
* ஏற்பது லஞ்சம்!
* ஐயமின்றித் திருடிடு!
* ஒப்புக்கு உறவாடு!
* ஓடி ஓடிக் கட்சி மாறு.
* ஔ(அவ்)வளவும் சேர்.



twitter

## இன்றைய உண்மைகள்

1. பக்கத்துக்குவீட்டில்இருப்பவரிடம்முகம்கொடுத்துப்பேசுவதில்லை. பக்கத்துக்கிரகத்தில்மனிதன்வாழவாய்ப்புஇருக்காஎன்றஆராய்ச்சிநடக்கிறது.
2. கையில்விலைஉயர்ந்தபெரியகடிகாரம்உண்டு. அதில்மணிபார்ப்பதற்கு கூடநேரம் இருப்பதில்லை.
3. ஊருக்குவெளியில்பெரிய வீடு. வீட்டில் இருப்பது 2 பேர்.
4. மருத்துவத் துறையில் மாபெரும் வளர்ச்சி. நோயாளிகள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகம்.
5. பட்டப்படிப்புகள்நிறையஉண்டு. பொதுஅறிவும்உலகஅறிவும்மிகக்குறைவு.
6. கை நிறையச் சம்பளம். வாய் நிறையச் சிரிப்பில்லை. மனசு நிறைந்த நிம்மதி இல்லை.
7. புத்திசாலித் தனமான, அறிவாளித் தனமான விவாதங்கள் அதிகம். உணர்வுப்பூர்வமானஉரையாடல்களும், சின்னச்சின்னபாராட்டுக்களும் குறைவு.
8. மதுசாரம் நிறைந்து இருக்கிறது. குடிதண்ணீர் குறைவாய்தான் இருக்கு.
9. முகம்தெரிந்தநண்பர்களைவிடவும். முகநூல்நண்பர்களே அதிகம்.
10. மனிதர்கள் எல்லா இடங்களிலும் நிறைந்து இருக்கின்றனர். மனிதம் ஆங்காங்கே சில இடங்களில் மட்டுமே ஒட்டிக் கொண்டிருக்கிறது

## சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 4 | | 6 | | | 5 |
| | 8 | | | | | 9 | 7 | 6 |
| 5 | | 6 | 1 | | | | 4 | |
| | | 3 | 2 | | | | | 7 |
| | 5 | | | | | | 9 | |
| 9 | | | | | 1 | 5 | | |
| | 4 | | | | 3 | 7 | | |
| | | 8 | | | | | 5 | |
| 2 | | | 9 | | 4 | | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 9 | 5 | 4 | 1 | 7 | 6 | 2 |
| 2 | 1 | 7 | 9 | 6 | 8 | 3 | 5 | 4 |
| 6 | 5 | 4 | 7 | 2 | 3 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 6 | 2 | 4 | 5 |
| 4 | 6 | 1 | 2 | 7 | 5 | 9 | 3 | 8 |
| 5 | 2 | 3 | 4 | 8 | 9 | 6 | 7 | 1 |
| 3 | 9 | 6 | 8 | 5 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 4 | 5 | 6 | 9 | 7 | 8 | 2 | 3 |
| 7 | 8 | 2 | 1 | 3 | 4 | 5 | 9 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு [illegible] அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். [illegible] நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலக்கங்களை இணைத்து படம் வரைவோம்



# உன்னை அறிந்தால்...

ஒரு செம்மறி ஆட்டுக் கூட்டத்தில் ஒரு பெண் சிங்கம் துழைந்தது. அதனைக் கண்டு பயந்து போன ஆடுகள் சிதறி ஓடின. தாய்மை நிலையில் இருந்த அந்தப் பெண் சிங்கம் ஒரு குட்டியை ஈன்று விட்டு இறந்து போனது.

தாயை இழந்த சிங்கக் குட்டிக்கு ஆடுகள் அடைக்கலம் தந்து பாலூட்டி வளர்த்தன. சிங்கக் குட்டி ஆட்டுப் பாலைக் குடித்தும் புல்லைத் தின்றும் ஆடுகளோடு விளையாடியும் மே... மே... என்றும் கத்தியும் திரிந்தது.

சிங்கக் குட்டி தனது வீரமும் கர்ஜனையும் மறந்து செம்மறி ஆடாகவே தன்னை எண்ணி வந்தது.

ஒரு நாள் ஒரு சிங்கம் ஆடுகளை வேட்டையாட வந்தது. எல்லா ஆடுகளும் பயந்து ஓடின. கூடவே குட்டிச் சிங்க ஆடும் பயந்து ஓடியது. வேட்டைச் சிங்கம், குட்டிச் சிங்கம் தன்னைக் கண்டு ஆடுகளோடு ஓடும் அதிசயத்தைப் பார்த்தது. அது வேட்டையாடுவதை விட்டு விட்டு தன்னைப் போலிருந்த அந்த குட்டிச் சிங்கத்தைத் துரத்திப் பிடித்தது.

சிங்க ஆடு சிங்கத்திடம் பிடி பட்டதும் நடு நடுங்கிக் கொண்டு நின்றது. அதனைப் பார்த்து "நீ ஏன் என்னைக் கண்டு பயந்து ஓடுகிறாய்? நீயும் என்னைப் போல வலிமையான சிங்க இனம் தானே! நான் உன்னைத் தின்ன மாட்டேன்" என்றது சிங்கம். சிங்க ஆடு மே... மே... என்று கத்தியடி "நான் செம்மறியாடு தானே. ஆட்டுப் பாலைத் தான் குடித்து வளர்ந்தேன். புல்லையும் சாப்பிடுகிறேன். நான் எப்படி உன் இனம் ஆவேன்? என்று பதில் சொன்னது.

சிங்கம், குட்டிச் சிங்க ஆட்டுக்கு அது செம்மறி ஆடல்ல, சிங்கம் தான் என்பதை உணர்த்த அந்தக் காட்டில் இருந்த ஒரு குளத்தின் அருகே அந்த குட்டி சிங்க ஆட்டை இழுத்துச் சென்றது.

குளத்தில் இருந்த நீருக்குள் குட்டிச் சிங்கத்தின் தலையைக் கவிழ்த்துப் பிடித்த பெரிய சிங்கம் "இதோ பார் நீருக்குள் தெரியும் உன் நிழலையும் என் நிழலையும். இரண்டு பேரும் ஒரே மாதிரி இருக்கிறோம் என்று கோபமாக கர்ஜித்துக் கொண்டு கூறியது.

தண்ணீருக்குள் தன் தலையைப் பார்த்த குட்டிச் சிங்க ஆடு சந்தோஷத்தில் "ஆமாம் நானும் சிங்கம் தான்" என்று கூறி குதூகலித்தது.


"ஆஹா உனக்கு தன்னம்பிக்கை வந்து விட்டது" என்று சிங்கம் பலமாகக் கர்ஜித்தது. அதைப் பார்த்த சிங்க ஆடும் குரலெடுத்து கர்ஜித்தது. அதன் புதிய கர்ஜனை காடு முழுவதும் ஒலிக்க, செம்மறியாட்டு மந்தைகள் இரண்டு சிங்கங்களையும் பார்த்து மிரண்டு ஓடின.

குட்டி சிங்க ஆட்டுக்கு தான் ஒரு சிங்கம் என்ற தன்னம்பிக்கை வரப் பெற்றதால் அது செம்மறி ஆட்டுக் கூட்டத்தை விட்டு விட்டு சுதந்திரமாக சுற்றித் திரிந்தது.

மனிதர்களுக்குள்ளே ஆயிரமாயிரம் சக்திகள் உண்டு. உண்மையில் தனக்குள் சக்திகள் உண்டென்பது மனிதனுக்குத் தெரியாது. சந்தர்ப்பங்களை அவன் பயன்படுத்தும் போதுதான் அவை வெளிப்பட்டு நிற்கின்றன. மனித மனம், ஒன்றை நினைத்தால் அதை நிச்சயம் அடையக் கூடிய சக்தியை தர வல்லது.

**துணிவோடு நிற்போம். எங்களைச் சுற்றி பிணைக்கப்பட்டுள்ள தளைகளை அறுத்தெறிவோம்.**

**எங்களால் நிச்சயம் சாதிக்க முடியும். சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துவோம்.**



## கணினி கற்போம்

- இன்று உலகில் மக்களால் பெரிதும் உச்சரிக்கப்படும் ஒரு சொல் கணினி என்பதாகும்.
- இந்தக் கருவியை முதன் முதலில் வடிவமைத்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த சார்லஸ் பாப்பேஜ் என்பவராவார்.
- இவர் இதனை கணித செயற்பாடுகளைச் செய்யும் பொருட்டே கி.பி. 1834இல் வடிவமைத்தார்.
- இவரைக் கணினியின் தந்தை என உலகம் போற்றுகிறது.
- முதலில் கணக்குப் போடப் பயன்பட்ட கணினி. அதிசயக்கத் தக்க வகையில் இன்று அனைத்து துறைகளிலும் பயன்படுகிறது.
- குறிப்பாக பொறியியல், மருத்துவம், வணிகம், வங்கி, வேளாண்மை, கல்வி, வானியல் போன்ற துறைகளில் வியத்தகு விந்தைச் செயல்களைச் செய்கிறது.
- வானூர்தி, ஏவுகணை, உந்துகணை போன்ற சாதனங்களை இயக்குவதோடு, வான்வெளியில் பவனிவரும் செயற்கைக் கோள்களை இயக்குவதும் கட்டுப்படுத்துவதும் கணினிகளே.
- இவை தவிர, உலகத்தை அதிசயத்தில் ஆழ்த்தி வரும் இயந்திர மனிதர்கள் (ரோபோக்களை) இயக்குவதும் கணினியே.
- அச்சகத்துறை, பத்திரிகை, புத்தக வெளியீட்டுத் துறையிலும் கணினியால் பாரியமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
- அறிவியல் கண்டு பிடிப்புகள் யாவும் மனிதனில் உடல் வன்மைக்கு வலுச்சேர்ப்பன. ஆனாலும் கணினியின் தோற்றமே மனித மூளைக்கு வலுவூட்டும் வகையில் அமைந்தது.
- கணினித்துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் வேறு எத்துறையிலும் ஏற்படவில்லை என்றால் அது மிகையல்ல.
- இத்தகு ஆற்றல் தரும் கணினிக் கல்வியைக் கற்றிட மாணவர் அனைவரும் முன்வர வேண்டும்.
- எதிர் காலத்தில் கணினி அறிவின்றி வாழ்ந்திடல் அரிதெனக் கூறலாம்.



## மரத்துக்கு வயது 700

நவீன தொழில் நுட்ப வளர்ச்சி இயற்கையைச் சிதைத்து விட்டது. நமது நாட்டைவிட அபிவிருத்தியடைந்த நாடுகளிலேயே இதன் வளர்ச்சி இயற்கையை இன்னமும் அழித்து விட்டிருக்கிறது. ஆனாலும் ஜப்பானின் ஓசாகா நகரத்தில் உள்ள கயாஷிபா ரயில் நிலையம் அந்த நாட்டில் உள்ள ஏனைய ரயில் நிலையங்களைக் காட்டிலும் வித்தியாசமாகக் காட்சியளிக்கிறது. காரணம் அங்குள்ள இரண்டு நடை பாதைகளுக்கு நடுவே மேற் கூரையில் துளை விடப்பட்டு அதன் வழியே ஒரு பெரிய மரம் பரந்து விரிந்து நின்று கொண்டிருக்கிறது. இது மிகப் பழமையான மரம் என்று மக்கள் சொன்னாலும், இந்த மரத்துக்கு 700 வயது என்று கணிக்கப்பட்டுள்ளது. 1910 ஆம் ஆண்டு அந்த மரத்துக்கு அருகாக புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது. பயணிகள் வெயிலுக்கும் மழைக்கும் இந்த மரத்தடியிலேயே ஒதுங்கினர். அதனால் இந்த மரத்தடியில் புகையிரதம் தரித்துச் செல்லும். இந்த மரத்துக்கு அருகில் தற்போது புகையிரத நிலையம் கட்டப்பட்டது. இந்த நிலையத்தை விரிவுபடுத்துவதற்காக 1972இல் இந்த மரத்தை வெட்ட முடிவு செய்தனர். ஆனால் இந்த மரத்தை வெட்ட விரும்பாத பலர் அம்மரத்துக்கு விசேட சக்தி இருப்பதாக கதையைப் பரப்பியதால் மரம் வெட்டப்படுவது தடுக்கப்பட்டது. அந்த வேளையில் எதிர்பாராமல் புகையிரத நிலையத்தில் வேலை செய்தவர்களுக்கு வேண்டாத பிரச்சினைகளும் நோய்களும் ஏற்பட்டன. இவ்வாறு பல தடவைகள் இந்த மரத்தை வெட்ட முயன்ற போதெல்லாம் நோய்களும் மரணங்களும் ஏற்பட்டதால் மரம் வெட்டப்படுவது முற்றாகக் கைவிடப்பட்டது. மரத்தில் ஏதோ அபூர்வ சக்தி இருப்பதாக எல்லோரும் நம்பினர். இதன் பின்னர் மரத்தைத் தொந்தரவு செய்யாமல் அதனைத் தவிர்த்து கட்டடங்களைக் கட்டி விட்டனர். இப்போது இம் மரத்தைச் சுற்றி நிரந்தர பாதுகாப்பாக கண்ணாடியால் தடுப்பும், அறிவித்தல் பதாகையும் நட்டு வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு

- எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ. அங்கே ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.
- வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.
- ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்.
- எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியும்.
- போர்க் களத்தில் பெறக் கூடிய சில வெற்றிகளை இழக்கக் கூட நான் சம்மதிப்பேன். ஆனால் காலம் வீணாக்கப்படுவதை, இழக்கப்படுவதை மட்டும் ஒருபோதும் நான் விரும்ப மாட்டேன்.
- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல; விழுந்த பொழுதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
- பார்த்தலோமியஸ்சுக்கு புயலாக இருந்த ஆபிரிக்க தென் முனை தான் வாஸ்கொட காமாவுக்கு தன்நம்பிக்கையாக மாறியது.
- எவன் துணிகின்றானோ. அவன் வெல்கின்றான்.
- எல்லை மீறிச் சிரிப்பவன் மூடன்; சிரிக்காமல் இருப்பவன் வஞ்சகன்.
- மனிதனை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன.
- நெஞ்சில் தைரியமும் உண்மையும் இருந்தால். நம்மை நாமே தற்காத்துக் கொள்ளலாம்.
- கீழான இலட்சியத்தில் வெற்றி பெறுவதைவிட, உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியடைவது மேல்.

## விசாரணை...

கருத்துக்கூறுவதை ஏற்க முடியாது" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

"காணாமற்போனோர் விவகாரத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால்தான் நாடாளுமன்றில் சட்டவரைவு கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் தற்போது சில திருத்தங்களுக்காக உள்ளது. அதன்பின்னர் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெறும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

"காணாமற்போனவர்கள் தொடர்பில் எந்த விதமான விசாரணையும் செய்ய முடியாது. அவர்கள் தொடர்பில் உறவினர்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளட்டும்" என்று வடக்கு மாகாண ஆளுநர் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"காணாமற்போனோர் விவகாரத்துக்கு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதுதொடர்பில் காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பதற்கு சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அண்மையில் சம்பூரில் இடம்பெற்ற நிகழ்வில் அரச தலைவர் வாக்குறுதியளித்தார்.

இந்த நிலையில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்த முடியாது என்று வடக்கு மாகாண ஆளுநர் கருத்து கூறமுடியாது. இந்தச் சட்டத்தை அரசு ஏற்றுக்கொண்டே உருவாக்கியது. அரச தலைவரின் வாக்குறியளித்ததன் பிரகாரம் காணாமற்போனோர் தொடர்பில் உரிய விசாரணை களை நடத்தி உண்மை கண்டறியப்படும்.

அந்த நிலையில் சட்ட ஏற்பாட்டை அறியாத ஆளுநர், தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் கருத்து கூற முற்படக் கூடாது. எனவே ஆளுநரின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது" என்று தமிழ் தேசியக் கூட்டமைப் பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

(வ-101)

## காணாமற்போனோர்...

முடிகிறது. நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப் படும் எனவும், அதன் பின்னர் விரைவில் காணாமற்போனோர் அலுவலகம் நிறுவப்படக் கூடும் எனவும், இதனுடன் தொடர்புடைய தரப்பினர் தெரிவித்தனர்.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன்போது மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) முன்வைத்த திருத்தம் உள்ளடக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து மக்கள் விடுதலை முன்னணியின் திருத்தத்தை உள்ளடக்கிய திருத்தச் சட்டம், அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை திருத்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. நாடாளுமன்றம் அங்கீகரித்த பின்னர், வர்த்தமானியில் சட்டம் பிரசுரிக்கப்படும். அதன் பின்னர் காணா மற்போனோருக்கான அலுவலகம் நிறுவப்படும் என்றும் கூறப்படுகின்றது.

(வ-5)

## வாக்காளர் தின...

மாவட்டத்தின் வாக்காளர் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக, மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

ஜூன் முதலாம் திகதி வாக்காளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. வாக்காளருக்குரிய தகைமையைக் கொண்டிருப்பதால் மாத்திரம் ஒருவர் வாக்காளராகி விடமுடியாது. அவர் வாக்காளர் பெயார்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். தகைமையுள்ள அனைவரையும் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்வதை நோக்காகக் கொண்டு, அதனை ஊக்குவிக்கும் வகையில் வாக்காளர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்திலிருந்து இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி, யாழ்.மாவட்டச் செயலகத்தைச் சென்றடையும். அங்கு வாக்காளர் தின நிகழ்வுகள் நடைபெறும். இதில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் எச். கூல் பங்குபற்றவுள்ளார்.

முதன்மை நிகழ்வு கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. கொழும்புப் பல்கலைக் கழகத்தின் சட்ட பீடத்தில் சிலோன் மண்டபத்தில் காலை 9 மணிக்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் முதல்முறையாக, 18 வயதைக் கடந்து இந்த ஆண்டு முதல் தடவையாக வாக்காளர் பெயர்ப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு வாக்காளர் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

நீர்கொழும்பு பேருந்து நிலையத்திலிருந்து நடைபவனி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, நீர்கொழும்பு மாநகர சபை மண்டபத்தை சென்றடையும். அங்கு வாக்காளர் தின நிகழ்வுகள் நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் தின நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் நடைபெறும். முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீர்ஊற்றுச் சந்தியிலிருந்து ஈருருளிப் பேரணி புறப்படும். முல்லைத்தீவு வித்தி யானந்தக் கல்லூரியில் முதன்மை நிகழ்வு நடைபெறும் - என்றார்.

(கு-5)


## கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி -2017

01 வலிகாமம் வடக்கு பிரதேச சபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டத்துக்குக் கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) வடமாகாணம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்கு கோருகின்றார்.

03 தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04 பொதுநிதிச் சுற்றறிக்கை4/2016(1) இற்கமைவாக இவ்விலை மனுக்கோரலானதுவடமாகாணத்துக்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

05 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) தொலை பேசி:- 0212241130, தொலைநகல்:- 0212241130இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் 01.06.2017ஆம் திகதியிலிருந்து 23.06.2017 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் இடத்திலிருந்து 01.06.2017ஆம் திகதியிலிருந்து 23.06.2017 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்துதலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்) எனும் முகவரிக்கு 23.06.2017ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09 கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்தி மூன்று- நாள்கள் 25.08.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

10 கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/PSDG/01/2017 | ஆயுர்வேத வைத்திய சாலைக் கட்டடம் அமைத்தல் அளவெட்டி | 3.05 | 03 மாதம் | C8 | 31,000.00 | 22.09.2017 |

11 கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 15.06.2017 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்குவலிகாமம் வடக்குபிரதேச சபை,காங்கேசன்துறை (மல்லாகம்) அலுவலகமாநாட்டுமண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தமதுசொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.(மல்லாகம்)
01.06.2017

(C/29086/10)



## மரண அறிவித்தல்

உதிப்பு
28 . 07 . 1940



மறைவு
30 . 05 . 2017

## திருமதி பாக்கியம் சொலமன்

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சொலமன் கடந்த (30.05.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் மையிலி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரமுத்து சொலமனின் அன்பு மனைவியும், தங்கமுத்து (சரசாலை), சுப்பிரமணியம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றீற்றம்மா, அமலராணி, பிளசிடா சுகந்தினி (சுவிஸ்), கிறிஸ்ரீனாறோஸ், கொன்ஸ்டன்கிறிஸ்ரி ஆகியோரின் பாசமிகு தாயும் சுப்பிரமணியம், லிங்கேஸ்வரன், அற்புதராஜா, ராஜதீபன், தயாளினி ஆகியோரின் பாசமிகு மாமியும் அல்வின், அகஸ்ரின், யாதவி, கிருத்திகா, கிருஷானி, றெனிஸ்ரியன், றெனிஸ்ரிகா, நிருஷானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி 02.06.2017 வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி.
077 347 5593

தகவல்:
குடும்பத்தினர்.



## கார்த்திகேசு உதயகுமார்

தோற்றம். 11.08.1962 மறைவு . 29.05.2017



தம்பாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு உதயகுமார் 29.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நல்லம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் தங்கம்மாதம்பதியரின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக்கணவரும் விசிதா(பிரான்ஸ்), லலிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அபிலாஷா, அஜந்தா ,அர்ஷனா, அனோஜ், அபிசன், அக்சயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவாகரன் - அபிலாஷா (குமார்,ஆஸ்திரேலியா), மதன்ராஜன் - அஜந்தா (மதன்,மலேசியா) ஆகியோரின் மாமனாரும் ஜோனதன் (மலேசியா), கஜாலி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விமானநிலைய வீதி,
தம்பாலை , அச்சுவேலி.

தகவல்:
மருமகன்
(சிவாகரன்,ஆஸ்திரேலியா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
CAR PLUS
சீட்டிழுப்பு வாரம் 08
சீட்டிழுப்பு திகதி 2017.05.31
வெற்றி இலக்கங்கள்
21 51 55 B திங்க
01 12
4,346,560/=
Web: www.dlb.lk

Galaxy Star
வெற்றி வாரம் 164
திகதி 31.05.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 29 50 53 55
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,798,332/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
04.06.2017 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தசாமி சேதுரட்ணம்
(ஸ்ரான்லி)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.06.1970 | 06.06.2014 |

**திதி : அட்டமி**

வாழ்க்கை என்னும் பாதையிலே
எம்மோடு பயணித்த அப்பாவே !
இன்றுடன் மூன்றாண்டு முழுந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை
விட்டு மறையாது அப்பா !

ஆவரங்கால் கிழக்கு,
மணல் பகுதி, புத்தூர்.

குடும்பத்தினர் .

## யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக மீள்பாவனைப் பொருட்சந்தை - 2017

உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக மீள்பாவனைப் பொருட்சந்தை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் **ஜூன் 01** தொடக்கம் **ஜூன் 03** வரை நடத்தப்படவுள்ளது.

பொதுமக்கள் தங்களிடம் நல்ல நிலையிலுள்ள பாவிக்க விரும்பாத பொருட்களை அவை தேவைப்படுவோருக்கு விற்க ஓர் அரிய சந்தர்ப்பம் !

**காலை 9.00 முதல் மாலை 6.00 வரை**

**குறிப்பு :-**

- இச்சுயசந்தைப்படுத்தல் வசதிக்கான இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.
- விற்பனைதொடர்பாகஎழும் விடயங்களுக்கு மாநகர சபை பொறுப்பேற்காது.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரிதேவி சண்முகநாதன்



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 180/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரிதேவி சண்முகநாதன் நேற்று (31.05.2017) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகதேவி (யாழ்ப்பாணம்), குமுதினி (பிராந்திய மருந்தாளர், வவுனியா), கமலினி (நோர்வே), சாந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் முருகரத்தினம் (அப்பன் - சுழிபுரம்), சிவகுமாரன் (ஓய்வுபெற்ற TA RDA, வவுனியா), ஜெயதரன் (நோர்வே), கருணலிங்கம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி, சண்முகதாஸ் மற்றும் வவுனியாவில் வசிக்கும் புவனேஸ்வரிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகாஜினி (யாழ்ப்பாணம்), தாட்சாயினி, தயாரூபன் (நூலக கண்காணிப்பாளர், யாழ். பல்கலைக்கழகம்), உஷாயினி (யாழ்ப்பாணம்), மிதுரன் (Lanka Clear - Colombo), விதுரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), அபிராமி (மொறட்டுவ பல்கலைக்கழகம்), பிரியதர்ஷினி, அஜிரதன் (வைத்தியர் - நோர்வே), சர்மினி, சசிகாசன் (கட்டடக் கலைஞர் - நோர்வே), ஜெயந்தன் (Oslo பல்கலைக்கழகம்), அஜந்தன் (Oslo பல்கலைக்கழகம்), செந்தூரன் (Oslo பல்கலைக்கழகம்), கபிலன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
071 305 5985, 077 [illegible]

180/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## Blue Skyy Agency
### தேவை

சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றுக்கு விற்பனை உதவியாளர் தேவை.(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் )

தகைமைகள் :

**விற்பனை உதவியாளர்**

- **க. பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.**
- **முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.**
- **வயதெல்லை 19 –45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி ஆகியவற்றை இணைத்து 10. 06. 2017 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**பிற்குறிப்பு :**
**மாத சம்பளம் ரூ .25000 வழுங்கப்படும்.**

**விண்ணப்ப முகவரி** : Blue Skyy Agency
**173, கே. கே. எஸ் வீதி,**
**சுன்னாகம்.**

வளிமண்... கம் வெளியீட்டுள்ள செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: வளிமண்டலவியல் திணைக் களத்தின் எதிர்வுகூறல்களைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர் விமர்சித்திருந்தனர். இது தொடர்பில் பத்திரிகையாளர், இடர்முகாமைத்துவ அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு அமைச்சர் சீற்றத்துடன், பேசாமல் வளிமண்டலவியல் திணைக்களத்தை மூடி விடுங்கள் என்று பதில் வழங்கியுள்ளார். (த-5)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2884 திகதி: 31.05.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
15 16 18 58 P
போனஸ் இல. 41
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 63, 912, 092/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
பச்சை நிற டிக்கட்டுக்கள் 2017.06.03 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## வீடு,அறைகள் வாடகைக்கு மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் மனோகரா தியேட்டர்சந்திக்கும் இடையில் கே.கே.எஸ் வீதியில் வீடு . அறைகள் வாடகைக்கு உண்டு. நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் (Honda) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு. 077 6057 490,077922 9032

## மீள் கேள்வி அறிவித்தல்.
### *குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை*
### *(PSDG) - 2017*
### வேலணைபிரதேச சபை

ஒப்பந்த பெயர், இல : நயினாதீவு *ஆலம்குளம் வீதி புனரமைப்பு*
NP/14/41(18)/7/PSDG/01/2017

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு, வேலணை பிரதேச சபை, வங்களாவடி வேலணை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிர்மாண/ புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெறதகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: - 021 221 1506, மின்னஞ்சல் - **velanaips@gmail.com**) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 16.06.2017ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 02.05.2017ம் திகதியிலிருந்து 16.06.2017 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **1,500/-** (வற்வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இருபிரதிகளில் தயாரித்து தலைவர், வேலணை பிரதேச சபை, வங்களாவடி, வேலணை, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 16.06.2017ம் திகதி மாலை14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 77 (எழுபத்து ஏழு – 30.08.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.Mn) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | தேவைப் படும் காலம் |
| NP/14/41 (18)/7/PSD G/01/2017 | ஆலம்குளம் வீதி புனரமைப்பு | Rs.3.88 | 04 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் | Rs. 40,000.00 | 27.09.2017 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வேலணை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 14.06.2017 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளுராட்சிமன்ற பெறுகைக்குழு,
வேலணை பிரதேச சபை,
வங்களாவடி,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபாய...

இடங்களுக்குச் செல்லவேண்டும். அப்படிச் செல்லாவிட்டால் குற்றச் செயலாகக் கருதும் வகையில் சட்டம் இயற்றப்படவேண்டும்.

இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனினும், இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் முன்கூட்டியே எச்சரிக்கை எதையும் விடுக்கவில்லை. இதனால்தானே பேரிடர் ஏற்பட்டுள்ளது என்று ஊடகவியலாளர்கள் கேள்வி நேரத்தின்போது வினாக்களைத் தொடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்:

கடும் மழை பெய்யும், கடும் காற்று வீசும் என்று கடந்த 24 ஆம் திகதி வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு விடுத்திருந்தது. எந்தெந்த பகுதிகளில் மழை பெய்யும் என்றும் அது குறிப்பிட்டிருந்தது.

இத்தனை மில்லி மீற்றர்தான் மழைபெய்யும் எனத் துல்லியமாக முன்கூட்டியே கணிப்பிடுவதற்குரிய தொழில்நுட்ப வசதி எம்மிடம் இல்லை. வெளிநாடுகளைப்போல் முன்கூட்டியே அறிந்துகொள்வதாக இருந்தால் அதற்கென்று செய்மதியொன்று அவசியம். உச்சப்பட்ட தொழில்நுட்பமும் இருக்கவேண்டும். அதைப் பெறுவதற்கு முயற்சிக்கிறோம். ஜப்பானிடம் உதவி கோரப்பட்டுள்ளது. உலக வங்கியும் ஒத்துழைப்பு வழங்கும்.

இனிவரும் வருடங்களில் வானிலை தொடர்பான தகவல்களை துல்லியமாக கணித்துக் கொள்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும். அதை நோக்கி நாம் நகர்ந்து வருகின்றோம். அவசர நிலைமைகளைச் சந்திக்க தயாராகவேண்டும். பூகோளம் வெப்பமடைந்து வருகின்றது. இதனால், பெரும் இடர்கள் ஏற்படும் அபாயம் இருக்கின்றது. அவை குறித்தும் விழிப்பாக இருக்கவேண்டும்.

வளிமண்டளவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல்கள் நிறையத் தடவைகள் சரியாக அமைந்துள்ளன. வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல்களை எம்மவர்கள் கேட்பதில்லை. அபாய எச்சரிக்கை விடுத்தாலும் அது குறித்து கவனம் செலுத்துவதில்லை. வீட்டுக்கு மேல் தண்ணீர் வரும் வரை அங்கிருந்து வெளியேறமாட்டார்கள். எச்சரிக்கை விடுத்தும் அவ்வாறு வெளியேறாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதை வலியுறுத்தும் வகையில் சட்டம் கொண்டுவரப்படவேண்டும்.

பிரிட்டன் போன்ற நாடுகளில் காலையில் வெளியில் செல்லும்போது அன்றைய நாளுக்குரிய வானிலை பற்றிய தகவல்களை அறிந்துகொள்வர். எமது நாட்டிலும் இவ்வாறான தொரு நிலையேற்படவேண்டும். ஊடகங்களும் இது விடயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

இடரின்போது நான் நாட்டில் இருக்கவில்லை. பிரதி அமைச்சர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தார். இடர்களை எதிர்கொள்வதற்குத் தயாராகி வருகின்றோம். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

உலர் உணவுகளைத் தயாரித்துப் பாதுகாத்து வைக்கும் பொறிமுறை உட்பட ஏனைய சில காரணங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்படும்.

உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும். நிவாரணங்களை வழங்குவதற்குரிய பொறுப்பு பிரதேச செயலகங்களிடமும், கிராம அலுவலர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்படும்- என்றார். (த-4)

## மூன்று...

முறையிடப்பட்டுள்ளது.

நாச்சிக்குடாப் பகுதியில் உள்ள வீடொன்றில் 10 பவுண் தங்க நகைகளும், 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பணமும் களவாடப்பட்டுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முழங்காவில் பகுதி வீடொன்றில் மயக்க மருந்து விசிறி 28 பவுண் நகை திருடப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன் தினம் நாச்சிக்குடா வீடொன்றில் இந்தத் திருட்டு நடந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நாச்சிக்குடாப் பகுதியில் உள்ள வீட்டில் இருந்த அனைவரும் இரவு 8 மணியளவில் வெளியே சென்றுள்ளனர். இவ்வாறு சென்றவர்கள் இரவு 9.30 மணியளவில் திரும்பி வந்தபோது வீட்டுக் கதவு உடைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்று பார்த்தபோது வீட்டில் வைத்திருந்த 10 பவுன் தங்க நகைகளும், பணம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் களவாடப்பட்டமை தெரியவந்தது. இதனையடுத்து வீட்டின் உரிமையாளர் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெறுவதாகவும், இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர். (த-101)

## கைதிகள்...

செய்யப்படும்.

இவ்வாறு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து நேற்று முன்தினம் 4 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டார். சிறைக் கைதிகள் தப்பிச் செல்வதற்கு பாதுகாப்பு அரணில் துளையிடும் சம்பவம் வரை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தமது கடமையை நிறைவேற்றிய விதம் தொடர்பில் தான் ஆச்சரியமடைவதாகவும், இந்தச் சம்பவத்துகான முழுப் பொறுப்பையும் நீர்கொழும்புச் சிறைச்சாலையின் முழு உத்தியோகத்தர்களும் ஏற்கவேண்டுமென்றும் அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், சிறைக் கைதிகளின் தப்பியோட்டத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு தொடர்பிருக்கின்றதா என்றொரு சந்தேகம் நிலவுகின்றது. இது தொடர்பாக விரைவில் அறிக்கையொன்றைக் கோரவுள்ளேன். சம்பவ இடத்திற்கு நான் பிற்பகல்வேளை சென்று பார்வையிடும்வரை சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நீர்கொழும்புச் சிறைச்சாலைக்கு வருகை தராமை, அண்மைக் காலமாகச் சிறைச்சாலைகளில் இடம்பெறும் சம்பவங்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும்போது சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பொறுப்புடன் செயலாற்றவேண்டும். சிறைச்சாலைத் திணைக்களத்தின் உயர் பதவிகளிலும் நாடு முழுவதும் காணப்படும் சிறைச்சாலைகளிலுள்ள பதவிகளிலும் எதிர்காலத்தில் சில மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளேன் -என்றார். (த-4)

## காங்கேசனில்...

பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்தார்.

கடந்த வாரம் காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள காணியொன்றில் கிணற்றில் இருந்து மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட் டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காங்கேசன்துறைப் பகுதியில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக நான் அறியவில்லை. அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் எமக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. அவ்வாறு முறைப்பாடுகள் கிடைத்தால் நாம் விசாரணைகளை மேற்கொள்வோம். இது தொடர்பில் கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு அதிகாரமில்லை. இதனை நீங்கள் கொழும்பு பொலிஸ் தலைமையக ஊடகப் பிரிவிடமே கேட்டுப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றார்.

கடந்த 25 ஆம் திகதி காங்கேசன்துறைப் பகுதியில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட தனியார் காணியில் உள்ள கிணறு ஒன்றுக்குள் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டிருந்தன. மீட்கப்பட்ட சில நொடியிலேயே அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளைப் பிடுங்கிச் சென்றனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியிருந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பார்வையிட்டு விசாரணை செய்தனர். எனினும் அப்பகுதி மக்கள் இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யவேண்டுமா? எனப் பொலிஸாரிடம் கேட்டபோது, இது பழைய இரும்புகள் தானே. இதற்கு முறைப்பாடுகள் எவையும் தேவையில்லை எனக் கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-8)

## ஐரோப்பிய...

கொடுக்கவேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் நேற்று நேரில் வலியுறுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டை முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் கெர்ஹாட் ரான்ட்லேன்ட் தலைமையிலான ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழு பங்கேற்றது.

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இனவாதச் செயற்பாடுகள் தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார்.

அண்மைக் காலமாக முஸ்லிம்களின் மதத் தலங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பிலும் கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு இவ்வாறான இனவாதச் செயற்பாடுகள் அச்சுறுத்தலாக உள்ளன. தற்போது நாட்டில் முஸ்லிம்களின் மதச் சுதந்திரம் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் அச்ச உணர்வு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாதச் செயற்பாடுகளுக்குக் கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதிகாரப் பகிர்வு உடனடியாக மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும். திவிநெகும போன்ற திட்டங்களால் பறித்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் அதிகாரங்கள் மீண்டும் கையளிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என்று கிழக்கு முதலமைச்சர் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார்.

விவசாயம்,மீன்பிடி ,கால்நடை ,கைத்தொழில் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கவேண்டும் என்றும் கிழக்கு முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் 2018 2019 ஆண்டுக்கான திட்டங்களில் விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. கிழக்கு மாகாணம் முழுவதும் ஆற்றல் மேம்பாட்டு மையங்களை நிறுவி அதனூடாக வினைத்திறன் மிக்க அரச சேவையை முன்னெடுப்பது தொடர்பில் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் சி. தண்டாயுதபாணியால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க தயாராகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.(த-4-40)

## நிதி...

தேசிய அரசின் அமைச்சரவையில் கடந்த 22 ஆம் திகதி மாற்றம்கொண்டுவரப்பட்டது. இதன்படி அமைச்சரவை அந்தஸ்துள்ள 9 அமைச்சர்களும், ஒரு இராஜாங்க அமைச்சரும் அரச தலைவர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர். முக்கிய அமைச்சுப் பதவிகள் கைமாறின.

இராஜாங்க அமைச்சு, பிரதி அமைச்சுப் பதவிகளிலும் நேற்று மாற்றம் கொண்டுவரப்பட்டது. இதற்கான நிகழ்வு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது.

நிதி இராஜாங்க அமைச்சராக இருந்த லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, அரச தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும், அரச தொழில் முயற்சி இராஜாங்க அமைச்சராக இருந்த எரான் விக்கிரமரத்ன நிதி இராஜாங்க அமைச்சராகவும் நியமிக் கப்பட்டுள்ளனர்.

நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சராக இருந்த வசந்த சேனாநாயக்கவிடம் அயலுறவு இராஜாங்க அமைச்சுப் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், நீர்ப்பாசனத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவி பாலித ரங்கே பண்டாரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அயலுறவு பிரதி அமைச்சராக இருந்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா, பொருளாதாரக் கொள்கைகள், பொருளாதார விவகார அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும், ஊடகத்துறைப் பிரதி அமைச்சராக இருந்த கருணாரத்ன பரணவிதாரண திறன் அபிவிருத்தி தொழில் பயிற்சி பிரதி அமைச்சராகவும், ரஞ்சன் ராமநாயக்க சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலையக மரபுரிமைகள் பிரதி அமைச்சராகவும், பெரு நகரங்கள், மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்த லசந்த அழகிய வண்ண நிதி மற்றும் ஊடகத்துறைப் பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-4)

## காணாமற்...

அவர்கள் கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரி தொடர்பான விவரங்களை வழங்கிப் பதிவு செய்ய முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

2017ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவு தற்போது நடைபெற்று வருகின்றது. மே மாதம் 15 ஆம் திகதி வீடு வீடாகப் பிசி படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இவை இன்று தொடக்கம் மீளப் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளாக உள்ளவர்களையும் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் இணைத்துக் கொள்ள முடியும். இவர்களது விவரங்கள் கடந்த ஆண்டுகளில் அவர்களது குடும்பத்தவர்களால் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்த ஆண்டும் அதேபோன்று பதிவு செய்ய முடியும்.

இதுவரை காலமும் பதிவு செய்யப்படாமல் இந்த ஆண்டு முதல் முறையாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்தால், காணாமல் ஆக்கப்படுவதற்கு முன்னர் கடைசியாக வாக்காளர் பெயர்ப் பட்டியலில் எந்த முகவரியில் பதிவு செய்யப்பட்டிருந்தாரோ, அந்த முகவரி மற்றும் அவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை வழங்கிப் பதிவு செய்ய முடியும். அதேபோன்று தண்டனை விதிக்கப்படாத அரசியல் கைதிகளும் தமது பெயர்களை வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பதிவு செய்ய முடியும் என்று தேர்தல்கள் திணைக்கள உயர் அதிகாரி குறிப்பிட்டார். (த-5)

## தெற்கில்...

96பேர் இன்னமும் காணாமல் போயுள்ளனர். ஆறு இலட்சம் பேர் வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவநிலையம் அறிவித்துள்ளது. (த-4)

## யாழ்...

இதனால் கடந்த வருடத்திலிருந்து எமது மாவட்டம் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை, வேலணை, காரைநகர், மருதங்கேணி போன்ற பகுதிகள் பெருமளவில் பாதிப்படைந்துள்ளன. இவ்வாறு பாதிப்படைந்த தீவகப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம். பாதிப்படைந்த பகுதிகளின் குடிதண்ணீர் விநியோகத்துக்கு கொழும்பு இடர் முகாமைத்துவ அமைச்சின் உதவியுடன் 6 பவுசர்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் ஊடாகப் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் குடிதண்ணீர் பவுசர்களுக்கான எரிபொருள் செலவுகள், சாரதிகளுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றையும் கொழும்பு இடர் முகாமைத்துவ அமைச்சே பொறுப்பேற்றுள்ளதுஎன்றார். (த-8)

## மீட்புப்...

லாமா இலங்கையின் மீட்புப் பணிகளுக்கு நிதியுதவியை வழங்குவதற்கும் முன்வந் துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

இயற்கை இடரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மற்றும் சொத்து இழப்புகள் குறித்து தலாய் லாமா தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார். 'பேரழிவை ஏற்படுத்தியுள்ள இயற்கைப் பேரிடரால் இழப்புகளைச் சந்தித்துள்ளவர்களுக்கு நான் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று தாலாய்லாமா குறிப்பிட்டுள்ளார். (த-5)

## மூதூர்...

இது தொடர்பான அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (த-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈட்டி எறிதலில் சாதித்தது யாழ்.

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு என இரு தினங்கள் இந்தத் தொடர் நடைபெற்றது. ஆண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.செந்தூரன் 56.01 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம். சஞ்சீவன் 54.65 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரியதர்சன் 48.34 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23-422)




# யாழ். இந்து மகளிர் பூப்பந்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 1
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டத்தொடரில்மாகாணச் சம்பியனாகியது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணி.
மன்னார் பொது விளை யாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. இந்து மகளிர் கல்லூரியும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியும் மோதின.
3 தனிநபர் ஆட்டங்களையும் 2 இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதல் இரு தனிநபர் ஆட்டங்களையும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியின் கம்சாயினி மற்றும் தமிழினிஆகியோர்சுண்டுக்குழியைச் சேர்ந்த கிருசா மற்றும் அனோஜினி ஆகியோரை வீழ்த்தி அணியை முன்னிலைப்படுத்தினர்.
மூன்றாவது தனி நபர் போட்டியில் களமிறங்கிய இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பதுமிதா 0:2 என்ற அடிப்படையில் ரக்சாவிடம் தோல்வியடைய இந்து மகளிரின் நேர் செற் வெற்றிவாய்ப்பு இல்லாமல் போனது.
தொடர்ந்து முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் களமிறங்கிய இந்து மகளிர் கல்லூரியின் டிலக்சனா-தமிழினி இணை சுண்டுக்குழியின் கிருசா அனோஜினி இணையை 2:0 என்ற நேர் செற்றில் வீழ்த்த 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது யாழ்ப்பாணம் இந்து மகளிர் அணி.
மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பெற்றது. (ம-108)



## சக்தி வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 1
உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்தி அணி வெற்றிபெற்றது.
அலையோசையின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்தி அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் சக்தி அணி வெற்றி பெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 1
உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மங்களேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜங்கர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் உதயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி. பூப்பந்தாட்டத்தில் மாகாணச் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 1
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் 17 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சம்பியனானது.
மன்னார் பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயமும் மோதின. 3 தனிநபர் ஆட்டங்களையும் 2 இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.
முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய வீரன் ஆகாஸ் பற்றிமாவின் வீரரான நவீனை 2:0 நேர் செற்றில் வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தார்.
இரண்டாவது தனிநபர் ஆட்டத்தை பற்றிமாவின் சில்வியன் 2:1 என்ற செற்கணக்கில் தமிழ் மத்திய மகா வித்தியாலய வீரன் ஜதுசானந்தை வீழ்த்தி ஆட்டத்தை சமப்படுத்தினார்.
மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் சிஹான் 2:0 என்று பற்றிமா வீரரான சர்மாவை வீழ்த்த 2:1 என தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்னிலை பெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஜதுசானந் - ஆகாஸ் இணை பற்றிமாவின் சில்வயன் - சர்மா இணையை 2:1 என்ற செற்கணக்கில் வீழ்த்த 3:1 என்ற அடிப்படையில் வெற்றியைத் தமதாக்கி சம்பியனாகியது வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம். மூன்றாமிடத்தை கொக்குவில் இந்து பண்டித வித்தியாலயம் தனதாக்கியது. (ம-108)

# கரவைச்சுடர், டயமன்ஸ் அணிகள் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 1
கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகம் மற்றும் டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன முன்னேற்றம் கண்டன. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. முதல் 20 நிமிடங்கள் வரை கோலெதுவும் பதிவாகவில்லை 20 ஆவது நிமிடத்தில் கரவைச் சுடரின் கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 19ஆவது நிமிடத்தில் பதில்கோலைப் பதிவுசெய்து ஆட்டத்தைச் சமப்படுத்தினார் சென். சேவியர் அணியின் கனியூட். மேலதிக மாற்றங்கள் ஏற்படாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய தேவை இருந்தது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் கரவைச்சுடர் அணி வெற்றியீட்டியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதியது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலே முதல் பாதி நிறைவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் அபாரமாகச் செயற்பட்ட டயமன்ஸ் அணி பிறேம்குமார், பிரதீபன், லக்கிசன் ஆகியோரின் உதவியுடன் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108)






# அஞ்சலோட்டத்தில் மன்னார் சாதனை

வடமாகாணத் தடகளத் தொடரில் 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அணி சாதனையுடன் தங்கம் வென்றது. யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் கடந்த சனி, ஞாயிறு என இரு தினங்கள் இந்தத் தொடர் நடைபெற்றது. 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் மன்னார் மாவட்ட அணி 3 நிமிடங்கள் 25 செக்கன்கள் 90 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து சாதனையுடன் தங்கம் வென்றது. கடந்த 2009ஆம் ஆண்டு வவுனியா மாவட்ட அணி 3 நிமிடங்கள் 29 செக்கன்கள், 04 மில்லி செக்கன்களில் ஓடி முடித்து படைத்திருந்த சாதனையையே நடப்பு வருடத்தில் மன்னார் முறியடித்தது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூன் 1

ஜெய்க்கா அமைப்பினால் நடத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை அணி மோதியது.

ஆட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் அபிஸ் 12ஆவது நிமிடத்தில் ஜெரோன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது பற்றிக்ஸ்.

இரண்டாம் பாதியின் 4ஆவது நிமிடத்தில் ஜெரோன், 10 ஆவது நிமிடத்தில் நிசாந் கோல்களைப் பதிவு செய்ய 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது சென். பற்றிக்ஸ். (ம-422)




# மினி உலகக்கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றும்

## சங்கா நம்பிக்கை

மினி உலகக்கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில், இந்தத் தொடரை இந்திய அணி கைப்பற்றி நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்தைத் தக்கவைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் சங்கக்கார.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே சங்கா இவ்வாறு குறிப்பிட்டார்.

"மினி உலகக்கிண்ணத் தொடருக்கு ஆசியாவில் இருந்து இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நான்கு அணிகள் விளையாடுகின்றன. ஆசியாவில் இந்திய அணிதான் முன்னணி அணியாக உள்ளது. அந்த அணி 2013ஆம் ஆண்டு கிண்ணம் வென்று நடப்புச் சம்பியன்அந்தஸ்துடன்களமிறங்குகிறது. உண்மையைச் சொல்லப்போனால் இந்திய அணி வலுவானதாகும். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சு உண்மையிலேயே பலம் பொருந்தியதாக உள்ளது. சகல துறைகளிலும் அந்த அணி சிறந்து விளங்குகிறது.

இங்கிலாந்து அணியும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

அந்த அணியில் உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் சிலர் இடம்பெற்றுள்ளனர் என சங்கா மேலும் தெரிவித்தார். (ம)

# இன்று ஆரம்பமாகிறது மினி உலகக்கிண்ணம்


ஏ.ஜே.ஞானேந்திரன்




இந்த மாதத்தில் நடைபெறவுள்ள மினி உலகக்கிண்ணம் ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்த ஒன்றாக மாறி வருவதுடன் இது போன்ற மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்றங்களைக் கொண்ட தொடர்கள் பல கோடிகளைச் சம்பாதிக்கும் பணம்காய்ச்சி மரங்களாகவும் மாறிவருகின்றன.

உலகக்கிண்ணத் தொடருக்கு அடுத்ததாக பன்னாட்டு கிரிக்கெட் சபை மினி உலகக்கிண்ணத் தொடருக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. 1998இல் ஆரம்பிக்கப்பட்ட இது, இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தப்பட்டு வந்தது. 2002இல் இதன் பெயர் சம்பியன் கிண்ணம் என்று மாற்றப்பட்டது. எனினும் இன்றும் பலரால் இந்தத் தொடர் மினி உலகக்கிண்ணத் தொடர் என்றே அறியப்படுகிறது.

மினி உலகக்கிண்ணத் தொடர் ஆரம்பமாகியபோது கிரிக்கெட் சபையின் முழு அங்கத்துவம் பெற்ற நாடுகள் மாத்திரமே இதில் பங்குபெறத் தகுதி பெற்றிருந்தன. 2000 தொடக்கம் 2004 வரை ஏனைய நாடுகளும் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டன. ஆனால் 2009ஆம் ஆண்டு தொடக்கம் சில விதிகள் மாற்றியமைக்கப்பட்டன. ஒரு நாள் ஆட்டத்தில் முதல் எட்டு இடங்களில் தரப்படுத்தப்பட்ட அணிகள் மாத்திரமே அதுவும் ஆறு மாத காலத்திற்கு முன்பு தெரிவாகிய அணிகள் பங்குபற்ற முடியும்.



இங்கிலாந்தில் இன்று ஆரம்பமாகும் இந்தத் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி முடிவடைகிறது.

இந்தத் தடவை தொடரில் பங்குபற்ற தெரிவு செய்யப்பட்ட எட்டு நாடுகளாக இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா, நியூசிலாந்து, இலங்கை, பங்களாதேஷ்-பாகிஸ்தான் ஆகியவை உள்ளன. ஒன்பதாவது இடத்திற்கு மேற்கிந்தியத் தீவுகளைத் தள்ளிவிட்டு, எட்டாவது இடத்துக்கு வந்துள்ள பங்களாதேஷ் அணி இங்கே புதுமுகமாக உள்ளே நுழைகின்றது. 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மினி உலகக்கிண்ணத் தொடருக்கு விளையாட இந்த நாட்டுக்குக் கிடைத்த முதல் வாய்ப்பு இதுதான்.

மன்செஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் கிரிக்கெட் அணிகள் சற்றே மிரண்டு போயிருக்கின்றன. எந்த உயிரும் அவரவர்க்கு வெல்லக்கட்டிதான். ஆனால் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையோ பாதுகாப்புக்கு தாங்கள் உத்தரவாதம் என்கிறது.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து இந்த நான்கு அணிகளுமே தெரிவாகிய அணிகளில் மிகுந்த பலசாலிகள். அதிலும் அதிதியாகப் பொறுப்பெடுத்து தொடரை அரங்கேற்றப் போகும் இங்கிலாந்தின் அணி அனல் பறக்க ஆடுகின்றது. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு பொறுப்பான தலைமைத்துவம் என்று பல கோணங்களிலும் சிறப்பாக மிளிரும் இங்கிலாந்து அணி ஏனைய அணிகளுக்கு ஒரு சவாலாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்ட இங்கிலாந்து அணியை இந்தத் தடவை ஏனைய அணிகள் ஜாக்கிரதையாகவே அணுகும் என்பது நிச்சயம்.

இந்திய அணி ஐ.பி.எல். தொடரை முடித்துக் கொண்டு களத்தில் இறங்கி இருக்கின்றது. இங்கு கிடைத்த தாராளமான பயிற்சி இந்திய அணிக்கு நல்ல பலம் சேர்த்திருப்பது நிச்சயம். இவர்களுக்கு போட்டியாக வரும் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அதிவேகப் பந்து வீச்சாளர்கள் போல் இந்திய அணியில் இல்லை என்பது ஒரு குறையாக இருப்பினும், தளம்பாமல் எந்தத் தளத்திலும் பந்து வீசக்கூடியவர்கள் இவர்கள் அணியில் இருக்கின்றார்கள்.


தமது ஊதியம் சம்பந்தமாக கட்டுப்பாட்டுச் சபையுடன் பிணங்கிக் கொண்டிருக்கும் ஆஸ்திரேலிய அணி இந்தத் தடவை சம்பியனாகினால், ஊதிய உயர்வுக்கு போராட ஒரு உறுதியான காரணத்தை அவர்களால் முன்வைக்க முடியும். மிகச் சிறப்பாக ஆடும் அணித் தலைவர் சிமித் அணிக்கு ஆனைப் பலமாக இருக்கப் போவது திண்ணம்.

தென்னாபிரிக்க அணி சாமான்னியமான ஒன்றல்ல. அம்லா போன்ற பழுத்த அனுபவசாலிகளுடனும், தாகீர் போன்ற சாதுர்யமான பந்து வீச்சாளர்களுடனும் அசுர பலம் கொண்டு விளங்கும் இவர்கள் விளையாட்டில் ஆபிரிக்க சிங்கங்கள்தான்.

இந்த நான்கு அணிகளில் ஒன்றுக்குத்தான் வெற்றிக் கேடயமா? அல்லது பந்தயக் குதிரைகள் இடறி விழ, பின்னே வந்த குதிரை முன்னே பாய்ந்து சென்று விடுமா? காத்திருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# புகழ்மிக்கவர் ரொனால்டோ

பன்னாட்டு ஊடகமொன்று இணையத்தளங்களில் அதிகம் தேடப்படும், சமூக வலைத்தளங்களில் அதிகம் விவாதிக்கப்படும் விளையாட்டு வீரர்களை வைத்து உலகின் புகழ்பெற்ற வீரராக ரொனால்டோவை அறிவித்தது.

100 பேர் கொண்ட பட்டியலில் போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவர் ரொனால்டோ முதலிடம் பிடித்துள்ளார். இலங்கையில் இருந்து எந்தவொரு வீரரும் இடம்பெறவில்லை.

ரொனால்டோவின் போட்டியாளரான ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி இரண்டாவது இடத்தைப் பிடித்தார். பெடரர் மூன்றாவது இடத்தையும், நெய்மர் 4ஆவது இடத்தையும் பிடித்தனர்.

இந்திய கிரிக்கெட் வீரர்களான கோக்லி 13 ஆவது இடத்திலும், டோனி 15ஆவது இடத்திலும், யுவராஜ் 90ஆவது இடத்திலும், ரெய்னா 95 ஆவது இடத்திலும் உள்ளனர். (ம)

# தலைமைப் பயிற்சியாளரை நீக்கியது உரோமா அணி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகமான உரோமா, தனது தலைமைப் பயிற்சியாளரான லூசியானோவை நீக்கியுள்ளது.

உரோமாவின் நட்சத்திர வீரர் டொட்ரியுடன் லூசியானோ முரண்படுகிறார். டொட்ரியை களமிறக்கும் நிமிடங்கள் குறைவு. என்று லூசியானோ மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இது தொடர்பிலேயே அவர் நீக்கப்பட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டன.

டொட்ரி கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்துடன் பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

# முர்ரே மிரட்டலாட்டம்

பிரான்ஸ் ரெனிஸ் தொடரில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார் இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ள முர்ரேயை எதிர்த்து ரஷ்ய வீரர் குஸ்னெட்சோவ் மோதினார்.

முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முர்ரே. இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் குஸ்னெட்சோவ்.

சரிவில் இருந்து அடுத்த இரு செற்களையும் முறையே 6:2, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே முடிவில் 3:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார்.

நடப்பு வருடத்தில் இதுவரை முர்ரே முக்கிய தொடரொன்றையும் கைப்பற்றவில்லை. எனவே இந்தத் தொடரில் அவரின் செயற்பாடு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


அன்றும், இன்றும் என்றென்றும்
கணக்கீடு
திரு. BALAKAJAN
B.com (Jaf), H.N.Dip.in Acc (API)
Dip. in Bcl. (OUSL), M.Com (Hons)
(Tutorial Staff)
A/L 2019
புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.06.2017 (சனி)
NEC ஆனைப்பந்தி Sat. Sun - 6-7 a.m
NEC யாழ்ப்பாணம் Sat. Sun - 8-9 a.m
MCQ Class Wed - 4-5.30 p.m
Paper Class Sat. Sun - 11-12 p.m
A/L 2019, 2018 கலை, வர்த்தகம், தொழில்நுட்பம், புதிய பிரிவுகள், ஆரம்பமாகின்றன.
NEC
1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2 மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
077 469 6695

திரு. ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர் யுவதிகள் கற்றுப்பயன்பெற்ற ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சிமூலமான 3 மாத ஆங்கிலக்கற்கைநெறி.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 03.06.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
இவையாவும் திரு. ஷாம்சன் ஆசிரியரின் நேரடிவகுப்புகள்
பயிற்சிநெறி முடிவில் டிப்ளோமா சான்றிதழ்
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

மின் துண்டிப்பா?
கவலை வேண்டாம்...


MICRO PC SYSTEMS
Solar Division
www.solarpowerlk.com
Micro Pc Systems (Pvt) Ltd.
# 115C, W. A. Silva Mawatha, Colombo 06, Sri Lanka.
Tele : (94) 11 4 000 686
Jaffna : 021 222 5893, 071 035 6065 | Nelliyadi : 021 226 2929, 077 393 9536
Colombo : 077 730 8417 | Vavuniya : 024 222 1969, 077 396 3284

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14.05.1927 | 31.06.2017 |

### திருமதி தனலட்சுமி மகாலிங்கம்

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி மகாலிங்கம் நேற்று (31.05.2017) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும் பத்மலீலா, சந்திரா, இந்திரா, விமலா, மாலினி, ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயும் நாகராசா, சண்முகதாசன், மகேந்திரராசா, சங்கர், விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயரஞ்சினி, பாஸ்கர், சுதாகரன், திவாகர், மீரா, புவி, மதன், சஞ்சு, சரண், சஞ்சீவ், சஜீவ், சோபியா, நரேன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் பாஸ்கர், அனோஜன், அஞ்சலி, அபர்ணா, அபூர்வா, அஞ்சுனா, மியா, லீசா, டிலக், நர்த்தகி, தவிசனா, அபிசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2017) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அச்சுவேலி தெற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுவேலி தெற்கு.**
**அச்சுவேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**ம. ஸ்ரீகாந்தன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.